# மண்

ஜேர்மனி | 17.04.2010

## 20வது ஆண்டு சிறப்புமலர்




1990 - 2010

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**Der Kopierladen**
**Heisingstr. 26**
**47137 Duisburg**
**Germany**

**Mr. R. Ranjan**
**Tel.: 0049 203 443072**




**Saraswathy Asian Shop**
**Hohe Str. 26**
**47051 Duisburg**
**Germany**

**Mr. S. Krishnakumar**
**Tel.: 0049 203 4864760**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணின் மலரோடு இணைந்தவர்கள்!......

- மாநகர முதல்வர் - டியூஸ்பேர்க்
- "STERN" சஞ்சிகை - ஜேர்மனி
- Herr Wolfgang Esch - Duisburg
- ஸ்ரீ சண்முகா தர்மஸ்தாபனம் - திருகோணமலை
- ஜெயப்பூர் வலுவிழந்தோர் இல்லம் - யாழ்ப்பாணம்
- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை
- வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம் - யாழ்ப்பாணம்
- வாழ்வுதயம் - மன்னார்
- ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் - வவுனியா
- கிருபை சிறுவர் இல்லம் - வவுனியா
- ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை - ஜேர்மனி
- தமிழ்ப் பாடசாலை எசன் - ஜேர்மனி
- தமிழர் விளையாட்டுக்கழகம் - டியூஸ்பேர்க்
- வெற்றிமணி பத்திரிகை - ஜேர்மனி
- சாம்பசிவ ஸ்ரீதரக்குருக்கள் - முல்கைம்
- அருட்பணி. டக்ளஸ் மில்டன் லோகு - மன்னார்
- திரு. சி.த.மார்க்கண்டு - இலங்கை
- திரு. உடுவை தில்லைநடராசா - இலங்கை
- திரு. சிசு. நாகேந்திரன் - அவுஸ்த்திரேலியா
- திரு. க.அருந்தவராசா - சுவீஸ்லாந்து
- திரு. சிவரஞ்சன் - நோர்வே
- திருமதி. நவஜோதி. யோகரட்ணம் -இங்கிலாந்து
- திரு. க.அருந்தவராசா - ஜேர்மனி
- திரு. பொன்.புத்திசிகாமனி - ஜேர்மனி
- திரு. க.பத்மகுணசீலன் - ஜேர்மனி
- திரு. சோம.சிவகுலநாயகம் - ஜேர்மனி
- திரு. இ.சிறிஸ்கந்தராசா - ஜேர்மனி
- திரு. அ.புவனேந்திரன் - ஜேர்மனி
- திரு. இ. தங்கராசா - ஜேர்மனி
- திரு. வேலணையூர். பொன்னண்ணா - டென்மார்க்
- திருமதி. ஜெயா.நடேசன் - ஜேர்மனி
- திருமதி. கலைவாணி. ஏகானந்தராசா - ஜேர்மனி
- திருமதி. வசந்தா - ஜெகதீசன் - ஜேர்மனி
- திருமதி. கெங்கா.ஸ்ரான்லி - ஜேர்மனி
- திருமதி. மீனா.சிவலிங்கம் - ஜேர்மனி
- திருமதி. சுந்தராம்பாள்.பாலச்சந்திரன் - ஜேர்மனி
- திருமதி. புனிதமலர்.இராஜேஸ்வரன் - ஜேர்மனி
- திருமதி. பத்மாஷனி.மாணிக்கரட்ணம் - ஜேர்மனி
- திருமதி. கீத்தா.பரமானந்தன் - ஜேர்மனி
- திருமதி. நகுலா.சிவநாதன் - ஜேர்மனி
- திருமதி. வேதா.இலங்காதிலகம் - டென்மார்க்
- திருமதி. விமலாதேவி.சிவநேசன் - நெதர்லாந்து
- செல்வி. தர்ஷினி. பாலசுப்பிரமணியம் - ஜேர்மனி

## 'மண்' சஞ்சிகையின் தொடர்புகள்

ஆசிரியர்: வ. சிவராசா

முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபது ஆண்டுகள் "மண்" சஞ்சிகையோடு!........

14-01-1990. தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினம். ஆம் இத்தேதியில் ஆரம்பிக்கப்பட்டதுதான் உங்கள் மண் சஞ்சிகை..அப்போது தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் மிக அரிதாகக் கிடைத்த இந்த நாட்டில் நம் சந்ததிகளின் எதிர்காலம் கருதியே இச்சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. டியூஸ்பேர்க் நகரில் தமிழ் அகதி மக்கள் வாழ்ந்த முகாம் ஒன்றில் குறிப்பிட்ட சில இலக்கிய, சமூக ஆர்வலர்களின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் இன்று நிலைத்து வளர்ந்திருக்கும் மண் சஞ்சிகையாகும். இந்நகரில் வசித்து தற்போது தாயகத்தில் வசித்துக் கொண்டிருக்கும் எனது நண்பர் திரு.பே.அமிர்தநாதரும் நானும் இணையாசிரியர்களாகச் சேர்ந்தே இச்சஞ்சிகையை ஆரம்பித்தோம். இச்சந்தர்ப்பத்தில் நண்பர் அமிர்தநாதர் அவர்கட்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

இன்று இச்சஞ்சிகை இருபது வயதைத்தாண்டி இருபத்தோராவது வயதில் நடைபோடுகின்றது என்பதை எண்ணும் போது மிகவும் மகிழ்வுறுகிறோம். ஒரு சமூகத்துக்கு நல்வழிகாட்டும் பல அம்சங்களில் பத்திரிகைத் துறையும் மிக முக்கிய சாதனமாகக் கருதப்படுகின்றது. இன்று எத்தனையோ விஞ்ஞான கணனி உலக மாற்றங்கள் வந்திடினும் வாசிப்பு என்ற உயர்ந்த தேடலின் மூலமே மனிதன் பூரணத்துவம் பெறுகின்றான் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு வாசகர்களின் பங்களிப்பே முக்கியத்துவம் பெறுகின்றது. வாசகர்கள் இல்லாவிடின் சஞ்சிகையே இல்லாமல் போய்விடும்..

இந்த இருபது ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள்,சிறுவர்கள், இளையோர்கள் இந்தச் சஞ்சிகையூடாக தம் தாய்மொழியை எழுதிப் படித்துப் பேசி வளர்ந்திருக்கிறார்கள் என்னும் பொது இச்சஞ்சிகையின் பணி மகத்தான பணியாகவே கருதலாம். அது மட்டுமல்லாமல் பல நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களை உருவாக்கி அவர்களை எழுதத்தூண்டி தட்டிக்கொடுத்துச் சுட்டிக்காட்டி ஊக்குவித்துப் பரிசில்கள்வழங்கிக் கௌரவித்தது மட்டுமன்றி அவர்கள் பல ஆண்டுகளாக எழுத்துத்துறையில் பிரகாசித்துவர மண் சஞ்சிகை பெரும் பங்காற்றி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடையமாகும்.

மண் சஞ்சிகையானது கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் நின்று விடாமல் தாயகத்தின் போரால் ஆதரவற்றோர், அகதிகள், வயோதிபர்கள், விதவைகள், ஊனமுற்றோர் போன்ற பல தரப்பினருக்கும் வாசகர்களின் பேராதரவோடு நிதிப்பங்களிப்பு செய்து தார்மீகக் கடமையை முன்னெடுத்துவருவதை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

கடந்த பல வருடங்களாகத் தொடரும் இப்பணியில் தாயகத்திலுள்ள சுமார் 40 க்கும் மேற்குறிப்பிட்ட இல்லங்களுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்தி உதவி புரிந்து வருகின்றது என்னும் போது சிறிய ஒரு சஞ்சிகை மிகப்பெரும் பணியை மேற்கொண்டு வருவதற்கு வாசகர்களின் மனிதநேயம் எவ்வளவு உயர்ந்தது என்பதை நாம் புரிந்து கொண்டு பங்களிப்பு நல்கிவரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இனிதான நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படியாக மண்சஞ்சிகையின் பணிகள் பரந்து விரிந்து ஆரோக்கியமாக வளர்ந்து வருவதற்கு எம்மோடு கரம் கோர்த்துப் பங்களிப்புச் செய்து சகல வழிகளியும் ஒத்துழைத்து நேசித்துவரும் அனைத்துத் தரப்பினருக்கும் மண் சஞ்சிகை இதயபூர்வமான நன்றிகளைப் பகிர்ந்து நிற்கிறது. அதுமட்டுமல்லாமல் தாயக துயர் துடைப்புப் பணிகளில் தொடர்ச்சியாகப் பல மனித நேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்கள் பங்களித்து வருகிறார்கள் இந்த அன்பு உள்ளங்களுக்கும் தாயக இல்லங்கள் சார்பில் மனப்பூர்வமான நன்றிகள். கலை,இலக்கிய,எழுத்து,சமூகப்பணிகளுடன் இணைந்து பங்காற்றிவரும் எழுத்தாளப் பெருமக்கள் மாணவ மணிகள் சிறுவர்கள் இளையோர் என தாய்மொழியாம் தமிழைத் தழைத்தோங்க, அழியவிடாமல் பாடுபட்டு உழைத்துவரும் யாவருக்கும் தமிழால் நன்றி பகர்கின்றோம்.

எதிர் காலத்தில் மண் சஞ்சிகை தொடரும் கல்வி, கலை, இலக்கிய, எழுத்து, சமூகப் பணிகளுக்காக அனைவரின் தொடர்ச்சியான ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்க்கிறோம். தாயகத்திலும் துன்பங்கள் துயர்கள் நீங்கித் தமிழினம் தரணியில் தலைநிமிர்ந்து வாழ சகல தரப்பினரும் ஒன்று பட்டு நம்மாலான உதவிகளைச் செய்திடுவோம்..மண் சஞ்சிகை 20வது ஆண்டை நிறைவு செய்து 21வது ஆண்டில் காலடி பதித்துத் தொடரும் சகல பணிகளுடன் சகல தரப்பினரும் கரம் கோர்த்து ஐக்கியப்பட்டு வளமுடன் உயர்ந்து வாழ்வோம்.! 20வது ஆண்டு நிறைவு விழா சிறப்புற நடந்தேற ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் சிரம் தாழ்ந்த நன்றிகள்!.. பாராட்டுக்கள்!

தமிழ் வளர தரணி எங்கும் ஒற்றுமையாய் உழைப்போம்!....

நன்றிகளுடன்...

- ஆசிரியர் -

உ

சிவஸ்ரீ
சாம்பசிவ.ஸ்ரீதரக்குருக்கள்



Sivasri
Sambasiva.Sritharakurakkal
Bebelstr 114
46049 Oberhausen
Telefon: 0208-941 87 35
Fax: 0208-82 866 995
E-Mail: s.sritharan@hotmail.de



## சிவஸ்ரீ. சாம்பசிவஸ்ரீதரக்குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி

### மண்சஞ்சிகையின் ௨௦ஆவது ஆண்டுபூர்த்தி விழா

ஜேர்மனியில் வெளிவரும் மண் சஞ்சிகை தனது இருபது ஆண்டு காலமாக ஆற்றிவரும் சமய சமூகப்பணியை அறியாதார் எவருமிலர். மேலும் புலம்பெயர்ந்து வாழும் வருங்காலச் செல்வங்களாகிய எம் சிறார்கட்கு, கல்வி, சமய அறிவுப் போட்டிகளை நடாத்துவதன் மூலம் மாணவர்கள் மத்தியில் அறிவினை வளர்த்து வருவது கற்றோர்களின் கவனத்தை மிகவும் கவர்ந்துள்ளது.

இவை மட்டுமல்லாது தாயகத்திலே பல சமூக இல்லங்களுக்கு
இங்கிருந்து நிதியைத் திரட்டி அங்கு வாழும் மக்களுக்கு வாரிவழங்குவது
பாராட்டத்தக்க விடயமாகும். பல ஆண்டுகள்
இப் பணிகளினைத் தொடர்ந்து சேவையாற்றி, வெள்ளி, பொன்விழாக் காண
திருவருளும் குருவருளும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.
விழாநிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெறவும், விழாமலர் மணம் கமழும் அரியநல்
படைப்புக்களைத் தாங்கி நன்கு மலர்ந்து இன்பம் பெருக்கவும், முத்தமிழ்
கடவுளாம் முருகன் திருவருட்பாதம் பணிந்து
எனது பரிபூரண
நல் அருளாசிகளையும் வழங்கி வாழ வாழ்த்துகிறேன்.
வாழ்க தமிழ்! வளர்க சமயம்!

சுபம்.

இங்ஙனம்
அகோர சிவாச்சார்யார்
சிவஸ்ரீ. சாம்பசிவ ஸ்ரீதரக்குருக்கள்
ஸ்ரீ கதிர்வேலாயுதஸ்வாமி ஆலயகுரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Grußwort der Stadt Duisburg*



Gute 8000 Kilometer liegen zwischen Sri Lanka und Duisburg, doch den Leserinnen und Lesern des Magazins „Mann – Erde" scheint die Distanz zwischen Heimat und neuem Zuhause vielleicht nicht ganz so groß. Seit inzwischen 20 Jahren erscheint die tamilische Zeitschrift, findet von Duisburg aus Abonnenten in ganz Deutschland und trägt so dazu bei, eine Brücke zwischen den Kulturen zu schlagen. 20 Jahre „Mann – Erde" sind ein bemerkenswertes Jubiläum, zu dem ich im Namen der Stadt Duisburg sehr gerne und herzlich gratuliere.

Diese Jubiläumsausgabe von „Mann – Erde" ist aber nicht nur Anlass für Gratulation und Glückwünsche, sondern auch eine gute Gelegenheit für Dank und Anerkennung. Es bedarf einer großen Konsequenz und eines beachtlichen Durchhaltevermögens, um eine solche Zeitung über zwei Jahrzehnte herauszugeben, weshalb es mir ein großes Anliegen ist, insbesondere Herrn Vyramuthu Sivarajah sehr herzlich für sein ehrenamtliches Engagement zu danken. Als Initiator, Herausgeber und Chefredakteur prägt und trägt er die Zeitschrift seit ihren Anfängen im Jahre 1990.

„Mann – Erde" steht für Information und Berichterstattung in Wort und Bild, aber nicht zuletzt auch für die Tat. Alle Spenden und sämtliche Erlöse, die sich über die Zeitschrift oder seitens der Redaktion organisierte Veranstaltungen erwirtschaften lassen, kommen bedürftigen Menschen in Sri Lanka zugute. Auch das ist eine großartige und bedeutende Hilfe, für die ich im Namen der Stadt Duisburg herzlich danken möchte.

Ich gratuliere nochmals sehr herzlich zum Jubiläum und wünsche „Mann – Erde" für die Zukunft weiterhin viel Erfolg und alles Gute. Allen Leserinnen und Lesern wünsche ich viel Freude bei einer aufschlussreichen Lektüre der Jubiläumsausgabe.

Adolf Sauerland
Oberbürgermeister der Stadt Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**stern**

Verlagsleitung

Gruner+Jahr AG & Co KG

Herrn
V. Sivarajah
Am Windhövel 18a

47249 Duisburg

Postanschrift:
Brieffach 30
20444 Hamburg
Besucher:
Am Baumwall 11
20459 Hamburg
Telefon +49 (0) 40 / 37 03 - 0
Telefax +49 (0) 40 / 37 03 - 56 84
Deutsche Bank AG Hamburg
Konto 03 22 800
BLZ 200 700 00
IBAN
DE30200700000032280000
BIC (Swift Code) DEUTDEHH
USt-ID-Nr. DE118931493

Hamburg, 15.03.2010

Tel.-Dw.: (040) 3703-3734

**Ihr Schreiben vom 09.03.2010**
**Bitte um Sponsoring**

Sehr geehrter Herr Sivarajah,

vielen Dank für Ihr Schreiben vom 09.03.2010, in dem Sie uns um ein Sponsoring eines tamilischen Kinder- und Kulturfestes bitten.

Wie Sie sich vorstellen können, erreichen uns täglich viele Anfragen zu Projekten und Initiativen, deren Bedeutung und Berechtigung für uns außer Zweifel stehen. Eine angemessene Unterstützung würde nach unserem Selbstverständnis jedoch zuallererst eine Gleichbehandlung aller Anfragen voraussetzen.

Da wir uns zu einer solchen Förderung nicht in der Lage sehen, hat sich der *stern* bereits früh dazu entschlossen, eigene Initiativen zu gründen und diese mit ganzer Kraft voranzutreiben. Dazu gehören Beispiele aus den verschiedensten Bereichen; so etwa „Jugend forscht", „StartUp", „Mut gegen rechte Gewalt" und natürlich die „Stiftung *stern* – Hilfe für Menschen e.V.".

Bitte haben Sie deshalb Verständnis dafür, dass wir die auch uns nur begrenzt zur Verfügung stehenden finanziellen Ressourcen und Kräfte auf die genannten Projekte konzentrieren möchten und daher kein Budget für ein Sponsoring zur Verfügung haben.

Für die Durchführung Ihrer Aktion wünschen wir viel Erfolg.

Mit besten Grüßen aus Hamburg

Kerstin Freudenthal
Sekretariat Verlagsleitung *stern*

Gruner + Jahr AG & Co KG · Sitz: Hamburg, Amtsgericht: Hamburg HRA 102257
Komplementärin: Druck- und Verlagshaus Gruner + Jahr Aktiengesellschaft | Sitz: Hamburg, Amtsgericht Hamburg HRB 93663
Vorstand: Dr. Bernd Buchholz (Vorsitzender), Dr. Torsten-Jörn Klein, Achim Twardy
Vorsitzender des Aufsichtsrats: Hartmut Ostrowski



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சண்முக தர்மஸ்தாபனம்

*76 (54), Vidyalayam Road,*
*Trincomalee,*
*Sri Lanka.*
*026-2222521*

*76 (54), வித்தியாலயம் வீதி,*
*திருகோணமலை*
*இலங்கை.*
*026-2222521*

**Founder Trustee**
Late N.Krishnadasan
Rted.Commissioner of Assizes

**Managing Trustee**
V.Krishnadasan
B.A, L.L.B, LL.M.
Barrister-At-Law

**Secretary & Custodian Trustee**
Miss.V.Nadarajah, B.sc

**Trustee**
Mr.Mano Devasagayam,
Attorney at-Law

Miss.C.Subashini
Attorney at-Law

Mr.S.Sivapathasundaram

Mr.S.P.Surenthiranathan

Mrs.P.Chakradaran

Miss.T.Arumugam B.A

Mrs.Gowrie Ponniah

Mr.K. Winayagasothy

திகதி
Date : 23.02.2010

## வாழ்த்துச் செய்தி

20 ஆண்டுகளாக மண்ணிலுள்ள ஆதரவற்ற, வசதியற்ற சிறார்களுக்கு பயனுள்ள சேவையை செய்யும் "மண்" சஞ்சிகை பிரதம ஆசிரியர் திரு. வை. சிவராஜா அவர்களை முதற்கண் இதயபூர்வமாக பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

மண் சஞ்சிகை 20 வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக அமைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தன் சொந்த மண்ணில் வாழ முடியாதவர்களுக்கும், வறுமையில் உள்ளவர்களுக்கும் தளராத அளப்பரிய சேவை ஆற்றிவரும் "மண்ணே" என்றும் நிழல் வாழ்ந்து துயரங்களை துடைப்பீர்களாக. கருத்தாழங்களாக பல்வேறு பாதையால் "மண்" சீர் நடைபோட்டு சாதனையின் உச்சத்தை அடைந்துள்ளது.

மண்ணின் சேவையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதம் அடைகின்றேன்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" மண்ணை இன்றும் பல்லாண்டுகளாகவும் வாடா மலராக தொடர்ந்து வளர்ந்து வாழ்வு பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வாழ்க மண்
வளர்க தொண்டர்கள்

செல்வி. விமலா நடராஜா
செயலாளர்
ஸ்ரீ சண்முக தர்மஸ்தாபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA JAIPUR CENTRE FOR DISABILITY REHABILITATION

NO.05, OLD PARK ROAD, CHUNDIKULI, JAFFNA.

**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**

இல.05, பழைய பூங்காவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Regd No: L25716 E-mail: jaipurj@sltnet.lk Tel No: 021 222 2574

01.03.2010

**வாழ்த்துச் செய்தி**

இரு தசாப்தங்களாக தமிழ் மொழிக்கு தன்னிகரில்லா தனிப்பெரும் சேவையாற்றும் 'மண்' சஞ்சிகையே, தமிழ் மொழியின் சுகந்தத்தினை வெளிநாடுகளில் வசிப்போரும் சுவாசித்து மகிழ, தமிழின் புகழைப் பரப்பும் 'மண்' சஞ்சிகை இன்னும் பல பத்தாண்டுகள் புதுமுகத்துடனும், புதுப்பொலிவுடனும் வெளிவர மனமார வாழ்த்துகின்றோம்.

முகாமைத்துவக் குழு
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல. 05. பழைய பூங்கா வீதி
யாழ்ப்பாணம்

யாழ் ஜெய்ப்பூர்
வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல.05, பழைய பூங்கா வீதி
யாழ்ப்பாணம்

குறிப்பு: 'மண்' சஞ்சிகை வெளியீட்டினை எமக்கும் அனுப்பிவைக்கும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**Director:** Mrs.T.Yoganathan, **Chairperson:** Dr.(Mrs)J.Ganeshamoorthy, Deputy Chairperson: Mrs.C.Gunaratnam, **Project Secretary:** Mrs.A.Aloysius, **Treasurer:** Dr.(Mrs) S.Theivendran.

Cheque in favour of 'Jaffna Jaipur Centre for Disability Rehabilitation' Commercial Bank of Ceylon Ltd., Jaffna A/C No: 10600 07293 or Bank of Ceylon, Jaffna. A/C No: 0005-04-0000064-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-213151

திகதி 25-02-2010

தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன். B.A.

உப - தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
தி. தீவாகரன்

இணைச் செயலாளர் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. சு. ஏழூர்நாயகம்

வாழ்த்துச் செய்தி.

திரு. V. சிவராசா
பிரதம ஆசிரியர்
"மண்" கலை, இலக்கிய சமூக சஞ்சிகை
GERMANY.

மண் சஞ்சிகையின் இருபதாவது ஆண்டு சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறோம். கலை இலக்கிய மரபினை இனிது வடிக்கும் [illegible] வளர்த்த மண் சஞ்சிகை மாண்புற தீர்க்க தொண்டாற்ற [illegible]றோம். மாணவர்களின் இடையேயும் மாணவர்கள் தமிழுக்கும் [illegible] நினைவூட்டி நீண்ட நாட்கள் தொடர வாழ்த்தி அமைகின்றோம்.

"வாழ்க்கைக்கு வெற்றியைத் தருவீர்"

ஆறு. திருமுருகன்.

திரு. ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ து[illegible]ாதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Association for Rehabilitation of the Disabled (AROD)
100, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil, Jaffna, Sri Lanka.
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்

யாழ் - வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின்
வாழ்த்துச் செய்தி

தன்னலமிக்க சேவையில் 20வது ஆண்டு சேவையை நிறைவு செய்யும் மண் சஞ்சிகை நிறுவனத்திற்கு சேவை நலனைப் பாராட்டி மேலும் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் ஏழைகள், நோயாளிகள், மாற்று வலுவுடையோர்கள், இயற்கை அனர்த்தம் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களென பல்வேறுபட்ட தேவைகளையுடைய எமது இலங்கை வாழ் தமிழினத்திற்காக 20 ஆண்டுகளாக கைகொடுத்து, புனர்வாழ்வளித்து வந்த மண் சஞ்சிகையின் மகத்தான சேவைக்கு எமது பாராட்டுக்களும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்மாவட்டத்திலுள்ள மாற்று வலுவுடையோர்களிற்கென இன்றியமையாத பல புனர்வாழ்வு சேவைகளினை வழங்கி வருகின்றது இவற்றில் சில

1. சுயதொழில் பயிற்சிகள் வழங்கல்
2. சுயதொழில் வேலைவாய்பினைப் பெற்றுக் கொடுத்தல்
3. வலுவிழந்தோர் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்
4. கிளினிக், இயன்மருத்துவ சேவை வழங்குதல்
5. மாதாந்த உதவுதொகை, சத்துணவு, சிறு தொழில் முயற்சிக் கடன்கள், கல்விக்கான உதவிகள், பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார நிகழ்வுகள். என்பனவாகும்

இவ்வாறான சேவைகளிற்கு மண் சஞ்சிகை 1997ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து இன்றுவரை உதவிகளை வழங்கி வருகின்றமையையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறான உதவிகள் மூலம் பல மாற்று வலுவுடையோர்களிற்கு சுயதொழில் பயிற்சிகள் போன்ற பல புனர்வாழ்வு சேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. சுயதொழில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட பல மாற்று வலுவுடையோர்கள் தமது சொந்த உழைப்பில் தமது மற்றும் தமது குடும்பங்களின் சிவனோபாயத்தையே போக்கி வருகின்றார்கள். இவர்களில் பலர் விடிவு தெரியாது பிறரில் ஒழிந்து, முடங்கி இருந்தவர்கள் எம்மால் முடியும் என்று தலை நிமிர்ந்து பல்வேறு செயற்திட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது போற்றுதற்குரியது. இவர்கள் ஒவ்வொருவரினதும் மனம் சிலிர்த்த புன்னகையும், திருப்தியுமே கொடையாளர்கள் ஒவ்வொருவரிற்கும், மண் சஞ்சிகைக்கும் அவர்கள் செலுத்தும் நன்றிகளாகும்.

தங்கள் மண் சஞ்சிகையின் சேவைகள் மென்மேலும் வளர்ந்து, சிறந்து, பரந்து, பயன்தரவேண்டும் என்றும், எமது தேசத்தின் அனைத்துத் தரப்பினரும் தம்மாலான ஒத்துழைப்பை நல்கி அவரவர் தம் வாழ்வை ஒளிமயமாக்கிட மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

*வைத்திய கலாநிதி ந சிவராஜா* (MBBS, DTPH, MD)
*தலைவர் – வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்*

President
Dr N Sivarajah
MBBS, DTPH, MD

Vice President - 1
Dr K Nanthakumaran
MBBS, Msc (Med. Adm)
Vice President - 11
Mr LM Johnson,

Secretary
Mr K Gopalakirushnan
BA, B.Phil (UK), MA.ED (Cey)
Assistant Secretary
Miss S Nirmalakumary

Treasurer
Mr K Thiagarajah – JP
Retired Chief
Postmaster



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்
# SRI AGILANDESWARY ARULAHAM

"Home for Children"

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESWARY SAMETHA AGILANDESURAR THIRUKOVIL

Kovilkulam,
Vavuniya,
Sri Lanka.
T.P:- 0094-24-2221685
Email :- arulaham@gmail.com

"இளம் சிறார்களை கருணை உள்ளத்துடன் பாதுகாப்போமாக."
*"May we protect tender hearted children with compassion."*
Reg. No.: NEP/PCC/CH/125

கோவில்குளம்,
வவுனியா,
இலங்கை.

## மண்ணே வாழ்த்துக்கள்

"மண்" எனும்போது மானம் முன்னின்று வணங்காமண், அடங்காமண் எனப் பெருமை பெற்ற ஈழநாட்டையும் இந்நாட்டின் அன்பரையும் இவர்தம் பீடும் பெருமையும் வெளிநிற்க அறிவுக்கும், அன்புக்கும் உணவிட்ட மண்ணே நும்பணி பயனுடைத்து 1990 ஆம் ஆண்டு தொடங்கி 2010 இல் இருபதாவது ஆண்டை நிறைவு செய்கிறாய், புலம்பெயர்ந்தவர்க்கு புத்தாக்கமும், புலர்த்தார்க்கு பலமும் வெளிப்பட்டு நிற்க எம்மவர் மண்ணையும் மானத்தையும் வரியில் அச்சேற்றி மாதம் இருமுறை வெளிவரும் மண்ணே! உனக்கு வயது இருபதா மிக்க மகிழ்ச்சி.

நீ சிறுவயதிலிருந்தே பள்ளி மாணவர், பாமரர், கற்றார், மற்றார் அனைவரும் பயன் பெறும் வண்ணம் பரப்பினாய் உன் உணர்வுத்தீயை ஊரை நினைத்தழும் கன்றுகளும், காரும் ஊற்றை அளைந்தோடும் ஆறுகளும் உந்தன் சேற்று வயலிற் சிக்கிச்சிந்தித்தன காற்று வந்து காவமுடியாமல் இளவயது இருபதை அடைந்து விட்டாய் பெருமைதான்.

தாய் மண்ணார் தம் மண்ணைப் பாடக்களம் கொடுத்தாய், தமிழர்க்கு தக்க சமயத்தில் நீர் செய்த பணிகளில் ஒன்றுதான் சஞ்சிகை உழைப்பின் ஒரு பகுதியை எம்மில்லத்திற்கு தந்தமை உம் இறைப்பால் எம்சிறார்கள் உயர்கிறார் மண்ணே நீ இவ்விழமை எந்நாளும் வாழ வாழ்த்துக்கள். பல கோடி மண்ணே வாழ்க.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GRACE HOME FOR CHILDREN
# கிருபை சிறுவர் இல்லம்
# ග්‍රේස් ළමා නිවාස

Orphanage (Charity) Regd.No.NEP/PCC/CH/80

89,Thetkiluppaikulam Road,Velikulam,Vavuniya,Sri Lanka. Tel : 024 5680386,024 4921142,0773 213944

Pr. P.Kirubakaran
Chairman

Mrs.C.J Thangarajah
Vice Chairman

Ms. S.Suganthi
Secretary

Mrs. A. Nadarajah
Treasurer &
Assistant Secretary

Desabandu
R.Arumugam J.P.
Auditor

Ms.Pradeepa
Member

Legal Advisors
P.Pathmarajan G.S.O

Rev. S.AshoKumar

Rev. S. Jegatheesan



மண் என்று சொல்லும் பொழுது இறைவன் மனிதனின் குடியிருப்பிற்கென்று படைக்கப்பட்டதாகும்.

அது போன்று மண் என்ற சஞ்சிகையானது மனிதனின் கலை, இலக்கிய, சமுக மேம்பாட்டிற்ககாக கடந்து வந்து இருபதாவது அகவை நிறைவு செய்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டாமலும், வாழ்த்தாமலும் இருக்க முடியாது.

மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திருவாளர் சிவராஜா அவர்களின் காத்திரமான ஆக்கங்களானது மண்ணுக்கு வாசனை கொடுப்பதில் சந்தேகமே இல்லை

மண் சஞ்சிகையானது இருபதல்ல அறுபதையும் தாண்டி நூறையும் எட்டிப்பிடிக்க உளம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

திருமதி அ. நடராஜா
(முன்னால் தலைவர், நிதிச்செயலர், மற்றும் இல்லத்தின் தாயார்)
கிருபை சிறுவர் இல்லம்
வவுனியா, இலங்கை

**Social Service is the Service of the almighty - Children's Service is Special**
சமூக சேவை சர்வவல்லவரின் சேவை. சிறுவர்களின் சேவை சிறப்பம்சம்.
සමාජ සෙවය සර්ව බලධාරි දෙවිඳුන්ගේ සෙවයයිග. ළමයින්ගෙ සෙවය විශේෂයි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)
( இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய )
Tamilischer Bildungsverein Deutschland e.V. (Europa)

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

## *மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்*

ஜேர்மனி. டுய்ஸ்பேர்க் நகரத்தில் வாழ்ந்துவரும் திரு.வ.சிவராசா அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்து, வெளியிட்டுவரும் மண் சஞ்சிகை, தனது இருபத்தோராவது ஆண்டில் கால் பதிப்பதை, மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மண் சஞ்சிகை கல்வி, கலை, இலக்கியம் என்ற துறைகளுடன், சமூக அறப்பணிச் சேவைகளையும் ஆற்றிவருவதை யாவரும் நன்கறிந்துளர். இச்சேவைகளைத் தொடர்ந்து கடந்த இருபது வருடங்களாக இடைவிடாது செயற்படுத்துவது என்பது மிகமிகப் பெரும் பணியாகும். இச்செயற்பாட்டில் இலங்கையில் ஏதிலிகளாக இருக்கும் அனாதைகளுக்கும், அகதிகளுக்கும் ஆற்றிவரும் பணி மனிதம் கொண்ட, மனிதம் வளர்க்கும் மேன்மையான அறப்பணியாகும். இவ்வறப்பணியை, மனிதநேயம் கொண்டவர்கள் யாவரும் வாழ்த்திப் பாராட்ட வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றோம்.

எந்தவிதமான பிரதியுபகாரமும் எதிர்பாராமல் செய்யும் கொடையே ஈகையாகும். இதுவே வாழ்வியல் முன்னேற்றத்திற்கு வழியாகும். மக்கள் எனப்படுவோர் ஆறறிவு கொண்டவர்கள். அவர்கள் தம் ஆறாவது அறிவின்படி பகுத்துணர்ந்து வாழ்தல் வேண்டும். அந்த உணர்வு மனிதநேயம் கொண்ட உணர்வுகளை முதன்மைப்படுத்துவதாக அமைந்திருத்தல் வேண்டும். இவ்வாறு முதன்மைப்படுத்தி அமைந்தாலே மனித இனம் உன்னதமான நிலையை அடைந்து, உலகம், மாக்கள் இல்லாத மக்கள் வாழும், மனிதம் வாழும் பூந்தோட்டமாக இலங்கும். இவ்வழிக்கு மண் போன்ற சஞ்சிகைகள் தொடர்ந்து செயற்பட வேண்டும் என வேண்டுகின்றோம்.

மண் சஞ்சிகை கடந்த இருபது வருடங்களாக ஊர், பெயர், முகம், யாரென்ற அடையாளங்கள் எதுவும் தெரியாமல் அகதிகள், அனாதைகள் என மட்டும் அறிந்து உதவிக்கரம் நீட்டிச் செயற்பட்டு வருகின்றது. அவர்தம் வாழ்விற்கு சிறு ஒளி காட்டி வருகின்றது. இப்பணியில் செயற்படும் மண் சஞ்சிகையையும், அதற்காக உதவிக்கரம் கொடுத்துச் செயற்படும் யாவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாருமற்ற ஆதரவற்ற பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு கருதி, அவர்கள் தம்வாழ்வைத்தாமே தெரிந்து செயற்படும்வரை, அவர்களின் வாழ்வு, கல்வி மேம்பாட்டுக்கான செலவுகளை ஏற்றுச் செயற்படுத்தும் பணி, மானிடம் போற்றும் பெரும் பணியாகும். இதனை இளையவர்கள் மூலம் கூடுதலாகச் செயற்படுத்துவது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இளையவர்களை, யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற எண்ணத்திலும், மனிதம் வளர்க்கும் பணியிலும் இணைத்துக் கொண்டமையை நாம் யாவரும் மனம் பூரித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இளையவர்களுக்கும் எமது பாராட்டும் வாழ்த்துக்களும்.

மனிதம் வளர்க்கும் பணியில் மண் சஞ்சிகையின் பணி இருபது வருடங்கள் என்ன இரண்டாயிரம் வருடங்கள் தொடர்ந்து வீறுநடை போட்டு வளர்ந்து செயற்பட வேண்டும் என மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றோம்.
வணக்கம்.

இங்ஙனம்,

***பொ. சிறீஜீவகன்***
***பொறுப்பாளர்***
***ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை***

## 'மண்' சஞ்சிகைக்கு மனம் நிறைந்த வாழ்த்து மடல்



தமிழ் மணம் கமழும்
தடாக மலர் நிரலில்
தன்னையும் இணைத்த
மண் மலர் - தன்
உதயகால ஓட்டத்தில்
ஈர்பத்து அகவையில்
இன்புறும் பொழுதினில் - எம்
இதய வாழ்த்துக்களை
இனிதே இயம்புகின்றோம்.

தாயக மண்ணும் - ஈழ
தமிழரின் இருப்பும்
கூறு போடுண்டு போகுதே!
என்ற ஏக்க பெருமூச்சில்
ஏதிலியாகும் எங்கள்
தன் (மண்) மானம் காக்க
புலம் பெயர் தமிழரை - ஈழ
மண்ணோடு இணைக்க
"மண்ணே" நீ தொடர்ந்தும் மணம் வீசு
வாழ்த்துக்களுடன்

***அருட்பணி. சூ. டக்ளஸ் மில்டன் லோகு***
***பதிப்பாசிரியர் மன்னா பொழிவகம்***
***மன்னா பத்திரிகைப் பணிமையம்***
***இல. 31/2, வைத்தியசாலை வீதி***
***மன்னார்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ் மொழிச்சேவை கலாசார மன்றம்*
*எசன் தமிழ்ப் பாடசாலை*

Tamilischer Sprachdienst und Kulturverein e.V.
Essener Tamilische Schule
Sevenarstr 1-3
45141 Essen
E-Mail:- tamilischer@yahoo.de

Essen, 12. April 2010

வாழ்த்துகின்றோம்............

"மண்" சஞ்சிகை அகவை இருபதை நிறைவு செய்வதைக் கண்டு மகிழ்கின்றோம் வாழ்த்துகின்றோம்.

தாய்நாட்டில் இருந்து இளைஞர்களாகவும் யுவதிகளாகவும் இடம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர்ந்த மண்ணில் யதார்த்த வாழ்வில் புகுந்தனர். இளைய தலைமுறையினர் துளிர்விடத் தொடங்கிய வேளையில் எமக்கு ஒரு தேவையும் காத்திருந்தது. இன உணர்விலும், தமிழ்மொழிவளத்திலும், தாய்நாட்டிலும் பற்றுக் கொண்டவர்கள் புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப்பாடசாலைகளையும், கலை, இலக்கிய மன்றங்களையும் புலம்பெயர் நாட்டின் சட்டதிட்டங்களிற்கேற்ப தோற்றுவித்தனர். அந்தவகையில் பழந்தமிழர் இலக்கியங்களும், காவியங்களும், கலைகளும், சமூகசிந்தனைகளும், மண்ணின் மணமும் இளைய துளிர்களுக்கு எடுத்தியம்பும் நோக்குடன் இருபது வருட காலங்களாக அரும்பாடுபட்டு உருவாக்கிய இருமாத இதழ் மண் சஞ்சிகை ஆசிரியருக்கும் நிறுவனத்தினருக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். பல சோதனைகளைகளையும் சாதனைகள் ஆக்கி எம்மண்ணின் பெருமையை நிலை நாட்டிய சிகரம் பிரதம ஆசிரியர் திரு. சிவராஜா அவர்களின் சேவையை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்!
வளர்க மண்ணின் சேவை!

"ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின்"

*எசன் தமிழ்மொழிச் சேவை கலாசார மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி
## Tamilischer Schriftsteller Verein - Deutschland
## Tamil Writer`s Association - Germany

***அகவை இருபதில்***
***அகமகிழ்ந்து வாழ்த்தி மகிழ்கிறோம்!***

விழிமூடித் திறப்பதற்குள் விடிந்துவிட்ட பகலாக
விரைவாக எழுந்து வந்து வாசலிலே நீ நின்றாய்
ஒளிவெள்ளம் பாய்ச்சுகின்ற உதயசூரியனைப்போல்
உலகத்தின் தேசமெங்கும் உல்லாசமாய் உலவுகிறாய்.

எழிலாக மலர்கின்ற எத்தனையோ மலர்களுள்ளும்
எண்ணிக்கையில் சிலவேதான் என்றுமே மணம்தருமாம்
தளிராக நீ முகிழ்ந்து தரணியிலே நடைபயின்று
தமிழ்மலராய் அழகாகத் தனித்துநின்று கமழ்கின்றாய்

வழிமாறிப் போகின்ற வர்த்தக நூல்களில் வேறாகி
வற்றாது பணியாற்றியே வருடமிருபதைத் தொட்டுவிட்டாய்
துளிகூடச்சுயநலமின்றி சுற்றம் சூழல் இனத்துக்காய்
தூய அன்பு அக்கறையுடன் துயர்துடைத்து வருகின்றாய்

தொழியாளர் வர்க்கத்துக்கு தோள்கொடுத்து உதவுகிறாய்
தோன்றிய நாள்முதலாய் துருவநட்சத்திரமாய் ஒளிர்கின்றாய்
தெளிவான பாதைதனை தேர்ந்தெடுத்து நடக்கின்றாய்
தேசத்து விடியலின் தேவைகருதியும் உழைக்கின்றாய்

எழுச்சியுடன் வரைகின்ற எழுத்தாளர் வாசகரனைவர்க்கும்
எங்களின் இதயம்கனிந்த ஏகோபித்த வாழ்த்துக்கள்
உளிகொண்டு கருத்துக்களால் உள்ளங்களைச் செதுக்கியே
உலகெங்கும் தமிழ்மொழியை உயர்த்துமுனை
வாழ்த்துகிறோம்

பழிபாவம் அவதூறெல்லாம் பாதைகளில் முள்ளானாலும்
படிக்கட்டாய்த் தாண்டியே பணியென்று தொடர்கின்றாய்
களிப்போடு இத்தனையாண்டு காலூன்றி நிற்குமுன்னை
கைகூப்பி வணங்கி வாழ்த்திடக் கடன்பட்டு நிற்கின்றோம்.

மொழிவளர்க்கும் பணியினிலே முன்னின்று உழைக்கின்றாய்
முத்தமிழை இளையோர்க்கும் முழுமூச்சாய் ஊட்டுகின்றாய்
குளிரென்றும் பனியென்றும் குறுகிப்போகும் தேசங்களில்
குதூகலப் படுத்திவருமுனைக் கூடிநின்று வாழ்த்துகின்றோம்.

***தமிழ் எழுத்தாளர் சங்கம் – ஜேர்மன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamilicher Sportsverein Duisburg e.V.

25 ஆண்டுகள் புலம்பெயர் வாழ்வில்
20 ஆண்டுகள் பத்திரிகைப் பணியினை
15 ஆண்டுகளுக்கு மேலாக மனிதநேயத் தொண்டினை
ஆற்றிவரும் மண் சஞ்சகை ஆசிரியர் வைரமுத்து சிவராஜா அவர்களின்
ஆற்றுகை என்றென்றும் போற்றுதற்குரியதே.

பிறந்தோம்
இடம்பெயர்ந்தோம்
அந்தஸ்துடன்வாழ்ந்தோம்
இறந்தோம்

என்றிராமல், பிறப்பின் காரணத்தை தமிழ்கல்வி, கலாசார, சமூக, இலக்கிய,
மனிதநேயம் என்ற அர்த்தமுள்ள பணிகளில் ஈடுபடுத்தி இருபது என்ற
மேஜர் தரத்தில் உயர்ந்து வளர்ந்து நிமிர்ந்து நிற்கும் மண் என்ற மனிதமே!
மண் சஞ்சிகையே நெஞ்சார வாழ்த்துகின்றோம் இந்நாளில்.

கையெழுத்துப் பிரதியாய் கையழைந்து தவழ்ந்து இன்று
கணணி இளையனாய் தமிழ் இலக்கிய காதலனாய்
இளமை பொலிவுடன் அறுபது நாளில் ஒருமுறை
வீடுநோக்கி ஓடிவரும் காவியமே-இனி
தினம் தினம் வரமாட்டாயா என ஏங்குகின்றோம்.

ஊடகத்துறையோடு நின்றுவிடாமல் அவ்வப்போது விளையாட்டுத்
துறையிலும் எம்முடன் இணைந்து எமது கழகத்தின் ஆலோசகராக
இருந்து எமக்கு ஊக்கமும் உத்வேகமும் தருவதையிட்டு எம் கழகம்
பெருமைகொள்கின்றது.

நாம் எழுதி, எம் பிள்ளைகள் எழுதி இன்று எம் பேரப்பிள்ளைகள்
எழுதத்தொடங்கிவிட்டனர்.தலைமுறை கண்ட தற்பெருமையில்லா
பெருமைகொண்ட மண் விருட்சமே உரிமை கொண்டு வாழத்துகிறோம்.

உன் பணியால் பசியாறும் பிஞ்சுகளின் முகம் கண்டு பசிமறந்து திளைக்கின்றோம்.

மனிதன் (Mann) என்பவன் ஒரு மகத்தான பிறப்பு
அவனால்தான் மற்றவர்க்காய் வாழமுடியும்
விதையான ஒரு போராளியின் வரி

*தா. கனகலிங்கம்*
*தலைவர்*


*இ. சிறிஸ்கந்தராசா*
*செயலாளர்*

*ச. கோபாலசிங்கம்*
*பொருளாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *வாழ்த்துச்செய்தி*



"மண்" சஞ்சிகையின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாச்சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியுறுகிறேன். எனக்கு மதிப்பளித்த விழாக்குழுவினருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் "மண்" சஞ்சிகையுடன் பல ஆண்டுகளாகத் தொடர்பு இருந்துவருகின்றது. ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்துகொண்டு தம் சொந்த மண்ணை மறவாது நினைத்து வருவது இயற்கைதான். மண் வாசனை அபிலாசைகள் தாய்ப்பாசம் போன்றதல்லவா?..

எவ்வளவு வசதிகள் இருப்பினும், கிடைப்பினும் தாய் நாட்டில் உள்ள சந்தோஷம் புலம்பெயர்ந்த நாடுகளில் உண்டா?.. இருப்பினும் புலம்பெயர்ந்து வாழும் நாட்டிலே தம் மக்களின் தேவை கருதி சீரிய எண்ணத்தினாலே "மண்" சஞ்சிகையை ஆரம்பித்தனர். இதற்கு மூலகாரணமாக இருப்பவர்களான பிரதம ஆசிரியர் திரு.வ.சிவராசா அவர்களும் அவரின் நண்பர்களும் மெச்சப்படுகின்றார்கள்.. போற்றப்படுகின்றார்கள். அவர்களுடைய துணிபு, ஆளுமை, முனைப்பு, தொடர்பு, ஆற்றல், அறிவு, நிர்வாகத்திறன், தமிழ்க்குடும்பங்களின் ஆதரவு, எழுத்தாளர்களின் ஆதரவு ஆகியவற்றாலே இச்சஞ்சிகை இருபது வருடங்களாக வளர்பிறைபோல வளர்ந்து வருகின்றது.

என்ன சாதனை!..சிறார்கள், மாணவர்கள், பெரியோர்களுக்கு ஏற்ற வகையில் ஆக்கங்களைக் கொண்டுவெளிவருகின்றது. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள்,சிறுவர் படைப்புக்கள் போன்ற பல்வகை விடையங்களைக் கொண்டுவந்து ஒழுக்கம், பண்பு, நெறிகள், மனித விழுமியங்களை வெளிக்காட்டி நிற்கிறது. சஞ்சிகை வண்ணங்கள், கோலங்களை வெளிப்படுத்தி அதன் தரத்தையும் அழகையும் உயர்த்துகின்றது. ஆங்கிலம் உத்தியோக மொழியல்லாத புலம்பெயர் நாடுகளிலே தமிழ்மொழியை உயர் வகுப்புக்களில் இரண்டாம் மொழியாக அரசுகள் கட்டாயமாக்குமிடத்து "மண்" இன் மகிமை நன்கு உணரப்படும். இந்நிலை ஏற்படுமிடத்து "தமிழ் இனி மெல்லச்சாகும்" என்ற சிந்தனைக்கே இடமில்லை..

"மண்" தமிழ் மொழி, இலக்கியத்துடன் தன்னை மட்டுப்படுத்தாது யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் சமூக சேவையாக மனிதநேயத்தொண்டாக நிதி திரட்டி உதவியளித்துவருவது எம் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. பாராட்டக்குரியது. நல்லதோர் புதிய சமுதாயத்தைப் படைப்பதற்குத் தன் பங்களிப்பைச் செய்வது உணரப்படுகிறது. இத்தகைய சிறப்புடைய மண் சஞ்சிகை தமிழ்கூறும் நல்லுலகம் இருக்கும்வரை வளர்ந்து மக்களுக்கு அறிவுப்பசியைப் போக்கி நல்லதோர் அறிவுடைய சமுதாயத்தைப் படைத்திட "மண்" இன் வாசகனாகவும் இலக்கிய ஆர்வலராகவும் நின்று பேர் உவகையுடன் வாழ்த்துகிறேன். ஆசிரியர் குழுவினரின் கடும் உழைப்பைப் பாராட்டுகிறேன்!...யாவரும் நல்ல சுகத்துடன் வாழ இறையருள் பாலித்திட வேண்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!...

*சி. த. மார்க்கண்டு.* B.A. *இலங்கை.*
*இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்*
*இளைப்பாறிய வடக்கு, கிழக்கு மாகாண*
*காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர்*
*முன்னாள் அரசாங்க அதிபர் – வவுனியா மாவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதோடு... மனதார... வாழ்த்துகிறேன்!...

ஆசிரியர் "மண்"

அன்புடையீர்,
வணக்கம்.

தங்கள் சஞ்சிகை மண், 20 வருட நிறைவைக் காண்பது அற்புத சாதனைதான். சந்தேகமே வேண்டாம். வாழ்த்துகிறேன். வாயார வாழ்த்துகின்றேன்.

அந்நிய மண்ணில் வேரூன்றி, கிளை பரப்பி, இன்று 20 வயது இளைஞனாக நிமிர்ந்து நிற்பது, தமிழராகிய நமக்குப் பெருமை சேர்க்கும் விடயந்தான். மனம் தளராமல், இந்த சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடும் ஆசிரியர் பாராட்டுக்குரியவராகின்றார். இந்தச் சஞ்சிகை காலத்திற்குக் காலம் புதுப் பொலிவோடு, இன்னும் பல இருபது வருடங்களைக் காணவேண்டும் என்பதே என் அவா. உற்சாகத்துடன் உங்கள் இலக்கியப் பணியைத் தொடருங்கள். பாசல் தமிழ்க் கலவன் பாடசாலை நிர்வாகமும், ஆசிரியர்களும், உங்கள் சஞ்சிகை பெரு வளர்ச்சிகண்டு பல ஆண்டுகளை இன்னும் காணவேண்டும் என்று கூறி, மனமார வாழ்த்துகின்றார்கள்.

*ஏ. ஜே. ஞானேந்திரன் – சுவீஸ்*
*எழுத்தாளர்*

*"மண்" சஞ்சிகையின் சேவைக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்...*

அன்புக்குரிய மண் சஞ்சிகை ஆசிரியர்
திரு. சிவராசா அவர்கட்கு

தங்களது சஞ்சிகை இருபது வருடங்களாக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. அத்துடன் ஒரு சஞ்சிகை எழுத்துக்களுடன் நிற்காது அதற்கப்பால் மனிதநேயத்துடன் மக்களுக்கு சேவைசெய்யும் ஒரு பொக்கிசமாகவும் இருத்தல் வேண்டும்.

மண் சஞ்சிகை தாயகத்தில் மாணவர்களுக்கு ஆற்றும் பணி அறிவேன். நீண்டகாலமாக தங்களது பணிபற்றி அறிந்து வந்திருக்கின்றேன். அயராது உழைக்கும் உங்களுக்கு மணிவிழாக்காணும் வெற்றிமணி (1950-2010) தகமையறிந்து வாழ்த்தி ஒலிக்கின்றது.

தங்களது சேவைக்கு உற்றதுணையாக இருக்கும் குடும்பத்தினருக்கும் எமது வாழ்த்துக்கள்.

அன்புடன்
மு.க.சு.சிவகுமாரன்
பிரதம ஆசிரியர் வெற்றிமணி, யாழ்-வெற்றிமணி, சிவத்தமிழ், அபிநயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மண் சஞ்சிகையின் பணிகள் தொடர வாழ்த்துக்கள்!

எமது தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து உலகெங்கும் சிதறிக் கிடக்கும் தமிழ் மக்களின் வாழ்வின் அனுபவங்கள் இலக்கியங்களாகப் பரிணமிக்கின்றன. அத்தகைய படைப்பிலக்கியங்களைப் பதிவுகளாக்கி எதிர்காலத்தின் வரலாற்று ஆய்வாளர்களுக்கு விட்டுச் செல்லும் பணி மிக உயர்ந்த பணி என்று கருதுகின்றேன்.

அந்த வகையில் மனித வாழ்வின் பல்வேறு தரப்பின் இலக்கிய வடிவங்களை "மண் சஞ்சிகை" பதிவுகளாக்கி தாங்கி வருவதைப் பார்க்க முடிகின்றது. வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு எழுத்து ஊடகமாக மட்டுமல்லாது, எமது பிறந்த மண்ணில் ஆதரவற்றோர், அங்கவீனர்கள், உனமுற்றவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் என்று மனிதநேயத்தோடு பங்களிப்புச் செய்து பணியாற்றும் மனிதாபிமானத்தையும் வெளிப்படுத்தி வருகிறது.

இலக்கிவாதிகள் கலைஞர்கள் போன்றவர்களுக்குரிய இனிய பண்போடு பழகும் "மண் சஞ்சிகை" யின் பிரதம ஆசிரியராகத் திகழும் வ.சிவராஜா அவர்களைத் தொலைபேசி மூலம் அறிமுகமாகி கலந்துரையாடியபோது, அவரின் சிறப்புத் தன்மைகளை ஓரளவு நான் உணர்ந்து கொள்ள உதவியது. லண்டன் தமிழ் வானொலியை செவிமடுக்கக் கிடைக்கும் நேரங்களில் இலக்கியத்துறை, தமிழ் கல்வித் துறை, ஊடகத்துறை குறித்த அவரது பார்வைகளையும், சமூக ஈடுபாடுகளையும், சரியான அணுகு முறையோடு சுட்டிக் காட்டும் பல்வேறுபட்ட முக்கிய திறன்களை என்னால் அவதானிக்க முடிந்தது.

கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டுவரும் வ.சிவராஜா அவர்கள் "மண் சஞ்சிகை" ஆசிரியராக பணியாற்றுவது மாத்திரமன்றி, ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகச் செயற்படுவது இன்னுமொரு சிறப்பு அம்சமாகும். இச்சங்கத்தின் தலைவர் உட்பட இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களான கலைவாணி ஏகானந்தராஜா, ஜெயா நடேசன், கே.கே. அருந்தவராஜா, அம்பலவன் புவனேந்திரன், பத்மன் பசுபதிராஜா, பொ.சிறீஜீவகன் போன்ற அனைவருமே இணைந்து கடந்த அக்டோபர் இருபத்தைந்தாம் திகதி 2009 இல் எனது தந்தை எஸ்.அகஸ்தியரின் "லெனின் பாதச் சுவடுகளில்", "மானிட தரிசனங்கள்" நூல்களை மிகச் சிறந்த முறையில் அறிமுகவிழாவை நடாத்தியதோடு மண் சஞ்சிகையில் அவ்விழா குறித்த சிறந்த விழாத்தொகுப்பை பதிவாக்கியமையை இங்கு நன்றியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், நற்சிந்தனை, அறிவியற் குறிப்புக்கள், செய்திக் குறிப்புக்கள், தாயகத்துச் செய்திகள் தாயகத்தின் சமூகப் பணிகள் போன்றவற்றை சுவையாகக் கையாளும் பல்வேறு உத்திகள் மண் சஞ்சிகைக்கு மிகவும் சிறப்பைக் கொடுக்கின்றது. சிறுவர்கள் சார்ந்த இலக்கிய முயற்சிகள் யாவும் மிகவும் பாராட்டுக்குரியன.

மக்களுக்கு எளிதில் விளங்குகின்ற நடையில் எடுத்துக் கூறும் பாங்குடன் இருபது ஆண்டு கால மண் சஞ்சிகையின் வரலாறு கடந்த கால நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் பட்டறிவுச் சாட்சிகளாக தென்படுகின்றன.

புகலிடத்தில் தமிழ்மொழி நிலைக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்படும் மண் சஞ்சிகையின் முயற்சிகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்று பணியாற்ற நெஞ்சாழ்ந்து வாழ்த்துகின்றேன்.

*நவஜோதி ஜோகரட்னம்*
*ஊடகவியலாளர் – பிரித்தானியா*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாவது அகவை வாழ்த்து

சாப்பாட்டு மேசைக்கு வரும் கறிவகைகளில் தனிக்கறிகளைவிட சாம்பாருக்குத்தான் தனி மதிப்பு. ஏனெனில் திறமான காய்கறிகள், பருப்பு, உள்ளி, பெருங்காயம் ,கறிவேப்பிலை முதலியன தேக ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமான சத்துக்கள் சாம்பாரில் சேருகின்றன.

அதே மாதிரி நாவல், சரித்திரம், அரசியல், விஞ்ஞானம் முதலிய ஆழமான கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களைப் படிப்பதிலும் பார்க்க "மண்" சஞ்சிகையில் பலதரப்பட்ட விடையங்கள் அதாவது புதினங்கள், புதுமைகள், செய்தித் துணுக்குகள், நகைச்சுவைகள் இன்னும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அறிவுரைகள், அர்த்தமுள்ள குறிப்புக்கள், சித்திரங்கள், செய்திகள், மனிதநேயக் கட்டுரைகள், வேண்டுதல்கள் முதலியன "மண்"சஞ்சிகையில் நிறையவே காணலாம். அதனால்தான் அதனை ஒரு ருசியான முழுமையான சாம்பாருக்கு ஒப்பிட்டோம். பொதுவாக மண் சஞ்சிகையில் வரும் சில கருத்துக்களும் செய்திகளும் நாம் முன் பின் அறியாத விடையங்களாகும். அவை வரவேற்கத் தக்கவை. பல தமிழ் சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் தோன்றி பின்னர் சில ஆண்டுகளில் இயற்கை மரணம் எய்தியிருக்கும் இந்தக்கால கட்டத்தில் "மண்" சஞ்சிகை இருபது (20) நீண்ட ஆண்டுகள் தொடர்ந்தும் மக்களின் மனதைக் கவர்ந்ததுடன் இன்னும் வீறுநடை போட்டுக்கொண்டு முன்னேறிவருவதைக் காண எம் மனதில் ஒரு கிளர்ச்சி தோன்றுகிறது. "மண்" சஞ்சிகை ஆசிரியருக்கும் அச்சஞ்சிகையை வெளியிட உதவிடும் நண்பர்கள் பணியாளர்களுக்கும் மற்றும் அச்சஞ்சிகையை ஒழுங்காக வாசித்துப் பிரயோசனம் கண்டவர்களுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!.. மேலும் பல தசாப்தங்களுக்கு "மண்" சஞ்சிகை தொடர்ந்து வெளிவரவேணும். மக்கள் அதனால் பயனடையவேணும். அதற்காக எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக!...

*சிசு. நாகேந்திரன்*
*மூத்த எழுத்தாளர் – அவுஸ்த்திரேலியா*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மண்"ணால் பயனடையும் மக்கள்

உலகம் வாழ் தமிழ் மக்களின் குறிப்பாகச் சிறுவர்களின் அறிவொளி பெருக்கி, ஈழத் தமிழர் துயர் துடைக்கும் பணிகளில் பங்களிப்பு நல்கிவரும் இருமாத இதழான "மண்" இருபதாண்டு நிறைவு வியத்தகு மகத்தான சாதனையே!..

ஈழத்திலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் பொழுது போக்காக பக்கம் நிரப்பிச் சஞ்சிகை வெளியிடுவோர் மத்தியில் முழுச்சமூகத்துக்கும் ஆக்கபூர்வமாகப் பயன்பெற வேண்டும் என்னும் பெரு நோக்கோடு ஒவ்வொரு பக்கத்தையும் படித்து இன்புறத்தக்கதாகவும், பாதுகாத்து வைக்கத்தக்கதாகவும் வெளியிட்டுவரும் "மண்" பிரதம ஆசிரியர் திருமிகு வ.சிவராசாவை வெகுவாகப் பாராட்டுவதில் நிறைவும் மகிழ்வும் அடைகின்றேன்..

சிவாவுடன் இணைந்து மண்ணையும் மக்களையும் இணைக்கும் அறிவுபூர்வமான ஆக்கபூர்வமான பணியில் உழைக்கும் அன்பர்களுக்கெல்லாம் நல் வாழ்த்துக்கள் பல..பல...

*உடுவை எஸ். தில்லைநடராசா*
*முன்னாள் அரசாங்க அதிபர் கிளிநொச்சி, வவுனியா மாவட்டம்*
*கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்*

## மனதோடு... மனதார... வாழ்த்துகிறேன்!...

மண் சஞ்சிகை 20 ஆண்டுகளை நிறைவுசெய்துகொண்டு 21வது ஆண்டினுள் மிகவும் புன்னகையுடன் பிரவேசிப்பதை நினைக்கும் போது அதன் ஆசிரியர் அண்ணன் சிவராசாவைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவரைப் பாராட்ட எனக்கு எந்தவிதமான வார்த்தைகளும் தமிழில் கிடைக்கவில்லை என்றே சொல்லமுடியும்.. வாழ்க.. வாழ்க பல்லாண்டு வாழ்க!..மண்ணின் வளர்ச்சிக்கு அவரது குடும்பத்தவர்களே பெரிய காரணமாகும். வாழ்த்துக்கள்..அவர்களது ஒத்துழைப்புக்கள் தொடரவேண்டுமென ஆண்டவனைப் பிராத்திக்கிறேன்..

மண்ணின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு ஒத்துழைப்பு வழங்கிவரும் ஆக்கதாரர்கள் வாசகர்கள் சிறுவர்கள் யாவருக்கும் மனதார வாழ்த்துக்கள்..மண்ணின் மணம் மென்மேலும் நறுமணம் வீச அன்பும் ஆசியும் வழங்கும் அனைத்து வாசகர்களுக்கும் மனதார வாழ்த்துக்கள்.

குறுகிய இந்த மனித வாழ்க்கையில் துயர் துடைத்துப் பல மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் மண்ணின் சேவை மேன்மேலும் தொடரவேண்டுமென வாழ்த்துகிறேன்.. "மனிதன் எப்படியும் வாழலாம்" ஆனால் இப்படித்தான் வாழவேண்டும் என்பதற்கு ஆசிரியர் ஓர் உதாரணம். அவருடைய அன்பு, பணிவு, இரக்கம், மனிதாபிமானம், பழகும் முறை யாவுமே வித்தியாசமானவை. இவைகள்தான் ஒரு மனிதன் தலைநிமிர்ந்து வாழ வழிவகுக்கும். எத்தனை தடைகள் வந்தாலும் நாணலைப்போல் வளைந்து கொடுத்து வாழ்பவன்தான் மனிதன்..

வாழ்க!... வாழ்க!... பல்லாண்டு வாழ்க!....

*இரா. சிவரஞ்சன்*
*எழுத்தாளர் – நோர்வே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்



"மண்" சஞ்சிகை மலர்ந்து இருபது ஆண்டுகள். மண் சஞ்சிகை மண்ணின் மக்களை மணங்கமழ வைத்த பொய்கை. எத்தனை எழுத்தாளர்கள் கவிஞர்களை புலத்தில் உருவாக்கிய பெருமை. சிறுவர் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் மண் கட்டிடம் கட்ட அஸ்த்திவாரம் எனில் "மண்" சஞ்சிகை பலரை உருவாக்கிய அடித்தளம் எனலாம். எழுத்துலகை மட்டும் கொண்டிராது கஷ்டப்படும் தாயக மக்களுக்குக் கை கொடுப்பதும் இயன்ற உதவியை நேரத் தேவையில் செய்வதாகும்..மண் சஞ்சிகை இதனால் மனித நேயமும் பேணிக்கொண்டது. சிறுவர் தாயகத்தில் கல்வி கற்க, சில சிறுவரைத் தத்தெடுக்க உதவிய மண் சஞ்சிகை இன்னும் தனது சேவையுடன் மென்மேலும் மெருகுபெற்று வளமுடன் நீடுழி!... நீடுழி!... வாழ்க!...

*எழுத்தாளர் கெங்கா. ஸ்ரான்லி – ஜேர்மனி*

## ஜெனீவா கலை இலக்கியப் பேரவை வாழ்த்து



பரந்த பூமிப்பந்தில் பரவலாக வீசப்பட்ட தமிழர்கள் அந்தந்த விளைநிலங்களில் நின்று இலக்கிய அறுவடைகள் செய்வது காலத்தின் தேவை மட்டுமல்ல அவர்களின் கடமையுமாகும். ஜேர்மனிய "மண்" இலக்கிய முகிழ்விப்புக்கு அரும்பணியாற்றிவருவது பாராட்டப்படவேண்டியதாகும். நேற்று எப்படி வாழ்ந்தோம்?.. இன்று எப்படி வாழ்கிறோம்?..என்பது இப்போது எமக்குப் பிரச்சனையல்ல. நாளைய தலைமுறையினருக்கு எவற்றை?.. எப்படி?..கையளிக்கப் போகிறோம் என்பதே எமக்கு முன்னே நிறுத்தப்பட்டுள்ள முக்கியமான பிரச்சனையாகும். தாயகப் பற்றையும் தாய்மொழிப் பற்றையும் பண்பாட்டு விழுமியங்களையும் நீடித்து நிலைக்கச் செய்ய அவற்றை இலக்கியங்களுக் கூடாக ஊடுகடத்துவதே ஆரோக்கியமான செயல்நெறியாகக் கருதமுடியும். அந்த வகையில் ஜேர்மனியிலிருந்து வெளிவருகின்ற "மண்" சஞ்சிகையானது கலை, இலக்கிய, சமூக, பண்பாட்டுத் தளங்களை சரியாகக் கண்டறிந்து சீர்மியக் கருத்துக்களை சமூகத்தினரிடையே மெதுவாக ஆணி அடித்து இறுக்கப்படுத்துவது சாலப் பொருத்தமாகும்..

புகலிட வாழ்வில் நிம்மதியடைந்து அமைதிகொண்டுவிடாமல் தாயக மண்மீது திணிக்கப்பட்ட கோர அழிவுகளில் முடமாக்கப்பட்டவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டவர்களின் நன்மை கருதி மண் சஞ்சிகையின் வாசகர்கள், அன்பர்கள் மனமுவந்து அளித்துவரும் உதவிகள் பாராட்டப்பட வேண்டியவையாகும். புகலிட இயந்திர இயங்கியல் வாழ்க்கையிலும் தன்னை இலக்கியப் பணிக்கும் சமூக முகிழ்விப்புப் பணிகளுக்குமாக அர்ப்பணித்துச் செயற்பட்டுவரும் மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு.வ.சிவராசா அவர்களினதும் அவரது குழாத்தினரதும் முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. மண் சஞ்சிகையானது ஜேர்மனிய மண்ணோடு மட்டும் நின்று விடாமல் தாயகமண்ணை நேசிக்கும் புகலிட மற்றும் தாயக மக்களிடமும் விசாலிப்புப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு தொடர்ந்தும் மண் சஞ்சிகையானது தமிழ் இலக்கிய உலகில் பயணிக்கவும் பிரகாசிக்கவும் ஜெனீவா கலை இலக்கியப் பேரவை சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!...

*க. அருந்தவராச (B.A.Dip.in.Ed.) ).M.Ed.) - சுவீஸ்லாந்து*
*எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.Pathmagunaseelan
Sworn Translator (English-Tamil-Sinhalese)
District Court of Colombo, Srilanka
Interpreter (English-Tamil-Sinhalese
Ex. Goverment Translator Grade 1
E-mail: sriya@gmx.net



## வாழ்த்து

தாய்மையின் இலக்கணம் பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், தன்னலமின்மை, அழகு, அன்பு போன்ற பண்புகளைக் கொண்டதேயாகும். அதுதான் பெண்மையெனவும் அடிப்படையில் அது தாய்மையெனவும் தனது புகழ்பெற்ற தொடக்க நூலான "பெண்ணின் பெருமை" யில் திரு. வி.கலியாணசுந்தரமுதலியார் வரையறை செய்திருந்தார். இதே போன்று "மண்"சஞ்சிகை ஆசிரியர் தாய்மைக்குரிய சகல இலக்கணங்களையும் கொண்டு தனது மண் சஞ்சிகையை கடந்த இருபது வருடங்களாக நடாத்தியுள்ளார் என்பது பெருமைக்குரிய விடையமாகும். இதுவரை எதுவித கௌரவப் பட்டங்களும் பெறாமல் சேவை ஒன்றே தனது முயற்சி என்னும் சித்தாந்தத்தில் வாழும் இவரைக் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்..

கங்கைநீர் சிறந்தது அபிஷேகநீர் அதனிலும் சிறந்தது. ஏழைகளுக்காக உழைக்கும் உத்தமனின் முகத்தில் துளிர்க்கும் வியர்வைநீர் எல்லாவற்றையும் விடச்சிறந்தது..இது வாரியாரின் கூற்று. இக்கூற்று திரு.வ.சிவராசா அவர்களுக்கு மிகப் பொருத்தமானது என்பதில் பெருமிதமடைகின்றேன்.

சிந்தனை செய்ய மனமிருந்தால்
செப்பிட ஒரு நா வேண்டும்
வந்தனை செய்யத் தலையிருந்தால்
தொழுதிட ஒரு மனம் வேண்டும்
பந்தனை செய்ய அன்பிருந்தால்
அதைச் சொரிவதற்கு ஒரு மெய் வேண்டும்
வெந்த உள்ளங்கள் குளிர்வடைந்தால்
அதை அனுபவிக்கும் ஒரு "மண்" வேண்டும்
உதயகாலத்து ஒளிச்சுடராய்
உதிக்கின்ற மண் சஞ்சிகையில்
ஏங்கி நிற்கும் எம்மவர்
இருள்களைந்து துயர் துடைக்கும்
இனிய கரங்களாய்
போர் வாசம் வீசுகின்ற பூவுலகில்
பூ வாசம் வீசவைக்கும்
புதிய உள்ளங்களாய்
நாம் ஒன்றுபட இறைவன் அருள் வேண்டி நிற்கும்.

*க. பத்மகுணசீலன்*
*விஜயலக்ஷ்மி ஞாபகார்த்த சிறுவர் கழகம்*
*கீல்நகர்-ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள நட்பிற்கு!...

அன்பிற்கும், நட்பிற்கும், மதிப்பிற்கும் உரிய "மண்" சஞ்சிகை ஆசிரியருக்கு! எனது வாழ்த்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

இருபது ஆண்டுகள் சஞ்சிகையை புலம்பெயர் நாடொன்றில் வெளியிடுவதென்பது சாதாரண நிகழ்வல்ல, அதற்கும் திறமையுடன், பொறுமையும் வேண்டும். முதலில் எனது வாழ்த்துக்கள். இன்னும் பல ஆண்டுகள் சிறப்போடு வெளிவரவேண்டும் என எதிர்பார்க்கும் வாசகர்களுடன் என்னையும் சேர்த்துக்கொள்ளுகின்றேன்.

நானும் நீயும் நண்பர்களாகி முப்பது ஆண்டுகளுக்கு மேல் என்றால் நம்ப முடியவில்லை. காலம் கடுகதியில் கரைந்துவிட்டது. நினைவுகள் விடுபடாது இன்றும் பசுமையாகத்தொடர்கின்றது. துணுக்காய்ப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம். சுற்றிவர வயல் வெளி,முன்பக்கம் பிரதான பாதை, பாதை ஓரமாகப்பாய்ந்து செல்லும் நீர்வாய்க்கால்.இந்த அழகான இயற்கையில் அமைந்திருக்கும் அந்த நடுத்தரக்கட்டிடம்.இங்குதான் எங்கள் அறிமுகம் நிகழ்ந்தது. நண்பன் சேயோன் பொதுமுகாமையாளராக மாற்றலாகி வந்தபோது நானும் அவனுடன் வந்திருந்தேன். அப்போது சங்கத்தில் கணக்காளராகக்கட மையாற்றிக்கொண்டிருந்தாய். "இவர்தான் சிவராசா, சங்கத்தின் பிரதான கணக்காளர்" என்று சேயோன் எனக்கு அறிமுகப்படுத்திவைத்தான்.

இன்றும், சிரிக்கும் அந்தச்சிரிப்பு, அன்றும் என்னோடு உதிர்ந்து நட்போடு இணைந்து கொண்டது. அடிக்கடி சந்திக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் நட்பை இன்னும் இறுக்கமாக்கியது. அப்போது நீ ஈழநாட்டுப் பத்திரிகையில் நிருபராகவும் கடமையாற்றிக்கொண்டிருந்தாய். நான் வீரகேசரிப்பத்திரிகையில் நிருபராக இருந்தேன். பத்திரிகைத்தொடர்பு, அதனையொட்டிய சந்திப்புக்கள் எங்களுக்குள் நெருக்கமான உறவுக்கு வழிவகுத்தது. செய்தி சேகரித்த நிழ்வுகளில் வன்னித்தமிழாராய்ச்சி மகாநாடு, அமைச்சர்கள் வருகை இந்தச்சந்தர்ப்பங்களில் இருவரும் அலைந்து திரிந்ததை இன்றும்மறக்கமுடிவதில்லை. அது ஒரு பொற்காலம் என்றுதான் எழுதத்தோன்றுகின்றது. முல்லை கூட்டுறவு நிர்வாகத்துடன் நாம் நீதியோடு, எதிர்ப்புத்தெரிவித்தபோது துணக்காயிலிருந்து வந்திருந்த நீயும், கூட்டுறவுத்தொழிலாளர்களும், எங்களுடன் சேர்ந்து எதிர்ப்புக்குரல் கொடுத்ததை இப்போதும் என்னால் மறக்க முடியவில்லை.அப்போது உனது மன உறுதியைக்கண்டுகொண்டேன்.இடப்பெயர்வுக ளால் சிலகாலம் சந்திக்கவில்லையாயினும், மறந்து விடவில்லை. இடதுசாரிக்குடும்பத்தின் இறுக்கமான வளர்ச்சியில் வாழ்ந்த உனக்கு இரக்கஉணர்வு இயல்பாகவே அமைந்திருந்தது. துன்புற்றோருக்கு உதவும் உன்னதச்செயற்பாடு இதிலிருந்துதான் உதயமாயிற்றுஉனக்கு. "மண்" சஞ்சிகை எதைச்சாதித்தது என்ற கேள்விகள் கேட்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கெல்லாம் சஞ்சிகை பதில் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் அறிவேன்.

சிறுவர்கள் முதல்கொண்டு பெரியவர்கள் வரை படித்துப் பயன்படும்வரையில் பக்கங்கள் நிறைந்திருக்கின்றன. பல புதிய எழுத்தாளர்களை உருவாக்கி இருக்கிறாய். ஒரு பக்கம் தமிழ் வளர்ச்சி அடுத்த பக்கம் ஆதரவற்றோர் நிதி உதவி. எவ்வளவு காலங்கள் இந்தச்சேவையில் ஈடுபட்டு வருகின்றாய்.அதற்கென்றொருமனம்வேண்டும். நிதிசேர்ப்பதும்,சேர்த்த நிதியை உரிய இடத்திற்கு அனுப்பிவைப்பதும்.அதற்குரிய கணக்கு, விபரங்களை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவதும் உன் நல்லமனத்திற்கும், நேர்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நண்பா! நண்பர்கள் வாழ்க்கையில் பலர் வருவார்கள். காலப்போக்கில் சிலரைக்கண்டு ஓடி ஒழியவேண்டியும் வரும். அந்த அளவில் மாற்றங்கள் அவர்களிடம்தோன்றும். ஒரு இலட்சியத்தோடு எத்தனைபேர்தான் வாழ்வார். அந்தவகையில் நீ எந்த அளவில் பெருமைமிக்கவன் என்பதை என்னுடன் வாசகர்களும் அறிவார்கள்.என்னோடு அவர்களது வாழ்த்துக்களும் சேர்ந்து உன்னை மகிழ்வோடு வாழவைக்கும். உனது சேவைகள் ஆய்வுக்குரியவை.

உனக்கென்றொரு வரலாறுண்டு. அடுத்தவர்களுக்குதவும் இதயம், அதற்காக நேரத்தை ஒதுக்கிச் செயற்படும் பொறுப்புணர்ச்சி எத்தனைபேருக்கு வருமென்று நினைக்கிறாய். இதற்கெல்லாம் உனக்கு அமைந்திருக்கும் குடும்பம் முக்கியமானது. அன்பான மனைவி, அதற்கேற்றாற்போல் ஒருமகள், இரண்டு பையன்கள்.. அளவான மகிழ்ச்சியான குடும்பம். இந்தச் சஞ்சிகை வளர்ச்சியில் இவர்களின் பங்கும் முக்கியமானது என்பதை நானறிவேன். நான் உரிமையோடு பழகும் உன் குடும்பம் பல்லாண்டு வாழவேண்டும். பிள்ளைகளை நட்போடும் பொறுப்போடும் வளர்த்திருக்கிறாய். என்னுடன் அவர்கள், அன்போடும், உரிமையோடும் பழகுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். எனது குடும்பத்தினரும் எங்கள் நட்பைப்புரிந்திருக்கிறார்கள் அந்த வகையில் மகிழ்ச்சியே.

நண்பா! புகழ் என்பது ஒருவன் செய்யும் செயற்பாடுகளினால் தானாகக்கிடைப்பது. புகழுக்காகவே சிலர் சேவை செய்வதுபோல் நடிப்பார்கள் அவர்களை இந்தச்சமுதாயம்,காலப்போக்கில் இனம் கண்டுகொள்ளும். உனது இலட்சியம், செயற்பாடு, புனிதமானது. இந்தச்சேவை தொடர எனது வாழ்த்துக்கள். அத்தோடுஎழுத்தாளர் சங்கத்தலைவராகவும், கல்விச்சேவை நிர்வாக உறுப்பினராகவும், செயல்படுகின்றாய். உன்னோடு சின்னதாக நானும் தொடருகின்றேன். என்ற, சந்தோசம் எனக்கும் உண்டு. இதேவேளை நீ கேட்காமலே வாரி வழங்கும் வாசகர்களுக்குஎனது மனம் கனிந்த பாராட்டுக்கள். எங்கள் நட்பும் செயற்பாடுகளும் தொடரவேண்டும். என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி...
என்றும் அன்புடன் நண்பன்
***பொன். புத்திசிகாமணி***
***எழுத்தாளர்***

## *மனம் பரப்பி மண்ணே வாழ்க!...*

20வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் மண் சஞ்சிகையினரின் குடும்பத்தவர்களுக்கு எங்கள் குடும்பத்தவர்களின் சார்பாகவும் எசன் நகர தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றத்தினரின் சார்பாகவும் நல் வாழ்த்துக்கள். மேன் மேலும் பல ஆண்டுகள் நீடித்து வாழ வேண்டி மண் சஞ்சிகையை மனமார வாழ்த்துகிறேன்.

***திரு. திருமதி. வசீகரன் – ஜேர்மனி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை பசுமை வளத்திட்டம் பிறீமன்–ஜேர்மனி
## நல் வாழ்த்து

மண் சஞ்சிகை மண்ணில் மலர்ந்து இரு தசாப்தத்தை எட்டிப்பிடித்திருக்கும் இந் நேரத்தில் அதனை மனதார வாழ்த்துவதோடு மண் என்ற ஒப்பற்ற நங்கையின் பெயரைத் தேடி எடுத்து ஜேர்மனி டியூஸ்பேர்க் நகரிலிருந்து சஞ்சிகையாக வெளியிட்டு சிறுவர் முதியோர் எனப்பலவகையினர் எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரைகள், பொதுஅறிவுத் தகவல்கள், செய்திகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஐரோப்பிய தமிழ் மஞ்சரியாக வெளியிட்டுப் பல போட்டிகளையும் நடாத்தி பரிசுகளையும் நல்கி ஊக்குவித்துவரும் மண் ஆசிரியர் வயிரமுத்து-சிவராசாவை மனமாரப் பாராட்டுகிறேன்.

மண் வானத்தைப் பார்த்து நிற்கும். வானத்திலிருந்து மழைபெய்து மண் வளத்தைப் பசுமை செழிக்க வைப்பது போல் மண் வாசகர்கள் தங்கள் ஜனரஞ்சனச் சஞ்சிகையாகத் தரமான ஆக்கங்களை எழுதிச் சிறப்பித்துவருகிறார்கள். அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். மண் சஞ்சிகை ஆசிரியர் புலம்பெயர்ந்து வந்தாலும் தான் பிறந்த மண்ணை மறக்காமல் தாயகத்தை நினைத்தே "மண்" என்ற பெயரில் இவ்வரிய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார். இதை உற்றுநோக்கினால் தாயகச் சிந்தனையாகவும் புலம்பெயர் மண்ணில் தமிழைச் சிறுவர்கள் மத்தியில் ஊக்குவிப்புச் செய்யும் இதழாகவும் தெரிகிறது. வாசகர்களிடமும் மனிதநேய நலன்விரும்பிகளிடமும் அன்பளிப்பு நிதி பெற்று ஜேர்மனியில் அங்கீகரிக்கப்பட்ட சஞ்சிகையாகவும் உதவிகோரும் ஈழத்தமிழர்களுக்கு அங்கிருக்கும் சமூகநலன் நலன்புரிச் சங்கங்கள் ஊடாக காலத்தின் கட்டாயமாக ஆசிரியர் குழுவினர் செய்யும் கைங்கரியம் என்னைக் கவர்ந்தபடியாலும் நான் எங்கள் சங்கானை பசுமைவளத் திட்டத்துடன் நெருங்க முடிந்தது.

அவர் எனது திட்டத்தை வரவேற்று சஞ்சிகையில் உரிய இடம் கொடுத்து இன்றும் தாயகத்தில் நடந்துகொண்டிருக்கும் எனது செயற்பாடுகளை வெளியிட்டுவருகிறார். அதற்காகவும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன். இலங்கையில் வடகிழக்குப்பகுதி மக்களின் பரிதாபகரமான நிலையை உணர்ந்து தன்னால் இயன்ற மனிதநேயப் பணியைத் தொடர்வது தாயகத்தில் வாழும் உதவிகோரும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். வாசகர்களிடமும், அன்பர்களிடமும் நிதி உதவி பெற்று அவர்களின் பெயர்களையும் அன்பளிப்புச் செய்த தொகைகளையும் சஞ்சிகையில் வெளியிட்டு தாயகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுக்களையும், அப்பணம் எப்படிச் செலவு செய்யப்பட்டது என்ற விபரங்களையும் மண் சஞ்சிகையில் நாம் வாசிக்கும் போது எமது மனத்தில் மகிழ்ச்சியும், மேலும் தென்பு ஏற்படுகின்றது. ஆசிரியரின் மனிதநேயப் பணியை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் மண் சஞ்சிகையின் வளர்ச்சிக்காக ஒற்றுமையாகச் செயலாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர் குடுபத்தவர்கள் மற்றும் அவர்களது நண்பர்கள் அனைவருக்கும் எனது நல்லாசிகள்.

மண் சஞ்சிகை மூலம் நலன்புரிச் சேவைக்காக மனமுவந்து அன்பளிப்புச் செய்யும் வாசகர்களே!.. உங்கள் தயாள சேவை சிந்தனை மேலும் தொடரட்டும் மற்றும் மாதம் ஒரு புதிய சந்தாதாரரை வாசகரை அறிமுகம் செய்து மண்ணின் வளர்ச்சியை மலை வளர்ச்சியாக்குங்கள்!..இதுவே மண் சஞ்சிகையினரின் அயராத உழைப்புக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும். சித்திரையில் கொண்டாடப்படும் மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்..

வாழ்க மண்!..வாழ்க தமிழ்!..வாழ்க எம் தாய்மண்!...

*சோம. சிவ. குலநாயகம்*
*முன்னாள் உதவி ஆசிரியர் – யாழ். சிரித்திரன்*
*முன்னாள் பத்திரிகையாளர் – யாழ். ஈழநாடு*
*நிர்வாகி பசுமைவளத்திட்டம் – பிறீமன், ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்

கல்வி, கலை, இலக்கிய, சமூகம் சார்ந்த தகவல்களைத் தாங்கி இருமாதங்களுக்கு ஒருமுறை ஜேர்மனியில் வெளிவரும் "மண்" சஞ்சிகை இந்த ஆண்டு 20 வது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

புலம்பெயர்ந்த மண்ணில் வாழும் சிறுவர்கள், பெரியவர்கள், முதியோர்கள் என எல்லோரையும் தமிழால் ஒன்றிணைத்து அவர்களிடையே பேச்சுப்போட்டி, கவிதை,கட்டுரை, சிறுகதை போட்டி, ஓவியப்போட்டி, சிறுவர் போட்டிகள் எனப் பல போட்டிகளை நடாத்தி அவர்களுக்குத் தகுந்த பரிசுகளையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

புலம்பெயர் தேசங்களில் இலைமறைகாயாக இருப்பவர்களை வெளிக்கொண்டு வருவதுடன் புலம்பெயர்ந்த மண்ணில் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியையும் வளர்த்துவரும் "மண்" சஞ்சிகை இன்னும் பல்லாண்டு காலம் வெளிவந்து மேலும் பல ஆண்டுகள் நிறைவு செய்ய வாழ்த்துக்கள்.. "மண்" சஞ்சிகையின் ஒப்பற்ற மகத்தான சேவைக்கு என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றியுடையதாகின்றது.



***எழுத்தாளர் பா. தர்ஷினி – ஜேர்மனி***
***விஜயலஷ்மி ஞாபகார்த்த சிறுவர் கழகம்***

## வாழ்த்துக்கள்

இளையோர் பெரியோரின் கல்வி அறிவு வளரும் வண்ணம் வழிகளையே வழி வகுத்துப் பரந்து மணக்கும் வண்ணம் வழி தன்னைக் கார்க்கின்ற இமையைப் போன்று தோன்றிய மண்ணே. விளைபயிரைக் காவலாக வேலியாக அமைத்து நின்று மொழிதனை வளர்த்து வளர்ந்துவரும் சஞ்சிகையே..எல்லோரும் ஒற்றுமையாய் இணைந்து நின்று வளர்ந்துவரும் சமுதாயத்திற்குச் சிறப்பாகக் கல்வியை வளர்த்து உழைத்தவர்கள் ஆசிரியர் சிவராசாவும் அவர் குழுவினரும்..

சேவை எல்லாம் சொல்லிவிடுவேன் நல் வணக்கம் சூழ்ந்து சாற்று தமிழ் வணக்கம் ஏற்று மகிழ்வீர் இனிது. அவர் வழி சென்ற யாவும் மேன்மையாக வடித்திடுவார். நிலையான உண்மைப் பணிகளால் அவரை வாழ்த்துகிறோம்..கதையிருக்கும் சிறுவர் வட்டமிருக்கும் வரைதல் இருக்கும் போட்டியும் இருக்கும். கவிதையிருக்கும் சுவையிருக்கும் மேலாய் செய்தியும் இருக்கும். உதவிக் கரங்களின் பட்டியலும் இருக்கும். வளர்ந்துவரும் சமுதாயம் சிறந்து ஆக்கம் எழுதி விளங்கிடுவார். தமிழ் மொழி மணந்து சிறக்கும் வண்ணம் மண் உரிமை, மொழி உரிமை இழந்துவிட்டால் வரலாற்றில் இடமின்றி மறைந்து போவோமே 20 ஆண்டுகள் சென்றாலும் மீண்டும் உம் அம்சங்களைப் பல காலம் தொடர்ந்து காண ஆசையோடு காத்திருக்கிறோம்..உன் பணி சிறப்பாக வளர இறை ஆசி கொண்டு வாழ்த்தி வணங்கி மலர்ந்து வர விடைபெறுகிறோம்!...

***எழுத்தாளர் ஜெயா. நடேசன் – ஜேர்மனி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் வாழ்த்தும் மண்

மண்ணின் பெருமையை மாந்தர் அறியவில்லை
விண்ணைத் தொட்ட விமானத்தால்
மண்ணை அழிக்கும் மாந்தர் செயல்கள்
மதமும் இனமும் இதற்கொரு காரணம்
மனிதம் அழிந்துவிட்டது..
அழிந்துகொண்டிருக்கிறது!...

மாந்தர் செயல் கண்டு மண் கொதித்தது
சுனாமியாய் வந்து துவசம் செய்தது
நிலநடுக்கம் வந்து நிர்மூலம் செய்தது
மாந்தர் செயல் மட்டும் மாற்றம் பெறவில்லை
மனிதம் அழிந்துவிட்டது..
அழிந்துகொண்டிருக்கிறது.!...

ஆனால்...
மண்ணின் பெருமையை "மண்"ணே அறியும்
மண்ணின் அவலத்தை "மண்"ணே உணரும்
மண்ணின் மைந்தர்க்கு மண்ணின் சேவையை
மாநிலம் அறியும் இம் மண்ணும் அறியும்
மனிதம் அழியவில்லை...
துளிர்த்துக்கொண்டிருக்கிறது!...

சிறுவர்க்கான செல்லக் கதைகள்
செந்தமிழின் நீதிக் கதைகள்
பெரியோருக்கான கதைகள் கட்டுரைகள்
செய்தித்துளிகள் தெளிவாய்த் தந்திடும்
மண்ணின் பெருமையை மனிதம் வாழ்த்தும்!...

மண் மேன்மேலும் சிறந்து வளர்ந்திட யேர்மனியில்
முன்னர் வெளிவந்த சிறுவர் அமுதம் சஞ்சிகை
சார்பில் வாழ்த்துவோர்...

*திருமத புனிதமலர். இராஜேஸ்வரன் – ஜேர்மனி*
*திருமதி பிங்கலை. செந்திலன் – ஜேர்மனி*

## மண்ணே நீ வாழ்க

ஆண்டுகள் இருபதை அடைந்து விட்டாய் -
மண்ணே நீ
ஆண்டவன் ஆசியால் இன்னும் நீ வளர்ந்திட
மன்னார் வாழ்வுதய குடும்பம் நாம்
நெஞ்சார வாழ்த்துகிறோம் !!

துன்புறும் ஏழை மாணவர் உன்
உதவிக்கரத்தில் பல பட்டங்கள் பெற்றிடவும்
இன்றைய உலகின் நாளைய தலைவர்களாய்
நிமிர்ந்து வீறு நடை போடவும்
பாங்காய் அவர்களை வளர்த்தெடுத்தாய் !!

அன்னை மரி ஆசியோடு
மைந்தன் அவன் துணையோடு
தூய ஆவியின் வழிகாட்டலிலும்
மண்ணே நீ நித்தமும்
வீறு நடை போட்டிடுவாய் !!

இன்றைய உலகின் மாணவர் தாம்
எத்துணை துன்பங்களையும்
எல்லை இல்லா வேதனைகளையும்
அனுபவித்தார்
மண்ணே நீ மங்காத புகழ் பெற்று
இன்னுமோர் மண்வாசம் எம் மண்ணில்
மிளிரவே !!

இன்னும் பல நூறாண்டுகள்
நீ வளர வாயார யாசிந்து
வாழ்த்தி நிற்கும் என்றும் உன்
கரித்தாஸ். வாழ்வுதயம் மன்னார் - இலங்கை

*இவ்வண்ணம்*
*இயக்குனர் பணியாளர்கள்*
*(வாழ்வுதயம் – மன்னார்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழக்கவில்லை இன்னும் நாம் மண்ணை !..

இழக்கவில்லை இன்னும் நாம் மண்ணை
இருக்கின்றாய் இன்னும் மண்ணே எம்முடன்
இருக்கின்றோம் உன்னுள் நாம் மண்ணாய்.

இருபதாவது அகவையில்
இளையவராய் வளர்ந்து
இறுமாப்பாய் நிமிர்ந்த மண்ணே!

முறுக்கேறிய உன் இளவயது கண்டு
மூக்கின்மேல் விரல் வைத்து சொல்கிறேன்
முன்னூறாண்டு இன்னும் நீ வாழ்வாய்.

உடமைகளை இழந்து - கேட்கும்
உரிமைகளை இழந்து - வாழும்
உயிரினும் மேலான மண்ணை இழந்து

இழந்திருந்தாலும் பரவாயில்லை
மீண்டும் கிடைத்திருக்கும்
குரங்கின்கை குழந்தைப்பொம்மைபோல்

வேண்டாத எதிரியின் கையில்
தாரைவார்த்து, தரைபார்த்து தவித்து
நிற்கும் தமிழின மத்தியில்

உன்னை இழக்காமல் - இன்னும்
உன் தன்மை தளராமல் - என்றும்
உலா வரும் மண் நிலவே

மிருகங்கள் வாழ்வதால் அந்த இடம் காடு.
மனிதர்கள் வாழ்வதால்தான்
இந்த இடம் மண்.

மண்ணே நீ மனிதருள் வாழ்கின்றாய்
மனித நேயமுள்ள உன் பணியால்
மண்ணாய் வாழ்கின்றாய்.

மண்ணுக்குள் பொன் தேடும் உலகில்
மனிதவாழ்விற்காய் பொருள் தேடி அதை ஈன்று
வானுயர்ந்து நிற்கும் மண்ணே

உன்பணி உன்பாணியில் தொடரட்டும்
தொட்டுவிடாதே முட்களை - ரோஜா
அழகாயிருக்கிறதே என்று

தனிவழியில் தான் நீ உயர்ந்தாய்
உன்வழியில் -எம்
விழிகள் பதியும்.

வாழ்த்துகிறேன் வளம் தொடர
போற்றுகிறேன் புகழ் நிலைக்க
வேண்டுகிறேன் மனிதநேய பணி தொடர

*கவிஞர். இரத்தினசிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா*
*ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாண்டின் இனிய வாழ்த்துக்கள்!...

மார்கழி மலரின் வண்ணம் மலர்ந்தே எங்கும் சிரிக்கின்றாய்
மனங்களை இணைக்கும்வண்ணம் மாலையாய் தொடுக்கின்றாய்
சீர்களிலே சிறக்கும் வண்ணம் சிகரமாய் நிமிர்ந்து விட்டாய்
சிந்தையிலே இமயமாக்கி சிறப்பினால் சிலிர்க்கின்றோம்..!

ஏரியில் தாமரை வண்ணம் எழிலாகியே மலர்கின்றாய்
எல்லோர் உள்ளங்களிலும் இறுமாப்பாய் அமர்கின்றாய்
சூரியச்சுடரின் வண்ணம் சுற்றுகின்றாய் அவனியையே
சுந்தரத்தமிழைக் கொண்டே சுடரொளி பரப்புகின்றாய்
மாரியின் குளிரின் வண்ணம் மகிழ்வினால் உறைகின்றாய்
மனங்களை ஆட்சிசெய்து மண் வாசனை வீசுகின்றாய்..!

ஏர்கொண்டு உள்ளங்களை ஆழமாய் உழுதுகின்றாய்
எங்கள் ஊர்உழவர்வண்ணம் ஏழைபசி போக்குகின்றாய்
நேர்பாதை பயணித்தே நெடும்பயணம் தொடங்கிவிட்டாய்
நேற்றையதை நினைக்கும் வண்ணம் நெறிமுறையில் ஒழுகியே
ஊர்உலகு உவக்கும் வண்ணம் உதவிக்கரம் கொடுக்கின்றாய்
உள்ளங்களில் உயர்விடத்தே உட்கார்ந்து மிளிர்கின்றாய்..!

வேண்டும் மொழிகற்கும் மண்ணில் விரும்பித்தமிழையூட்டுகிறாய்
வேதனைகளை விலக்கிவைத்தே வேகமாக நடைபயிலுகின்றாய்
தூண்டிய ஒளிவிளக்கின் வண்ணம் தூய ஒளிபரப்புகின்றாய்
துயருற்ற உறவுகள்மகிழும்வண்ணம் தூயநெஞ்சில் அமர்ந்தாய்
ஆண்டுகள் இருபதினை அடிக்கல்லாய் நட்டே - இன்று
ஆதரவுபெற்ற நெஞ்சில் அரும்பெனவே மலர்ந்துவிட்டாய்..!

தேர்வுகளில் நீயே முதலாவதாய் தேரில்ஏறி வருகின்றாய்
தேன்தமிழை நூல்வண்ணம் தவறாது திகட்டாமல் தருகின்றாய்
வேர்களிலே வெட்டிவேராய் விளைந்தே முதிர்ந்து விட்டாய்
விரும்பும் வண்ணம் வாசத்தால் வெளியினில் கமழுகின்றாய்
நார்களில் தொடுக்கின்ற மாலைகள் எதற்கென்றே உன்
நறுமணத்தால் மலர்களையே நாணிகுனியச் செய்திட்டாய்..!

தேர்ஏறிப் பவனிவந்தே திக்கெட்டும் தெளிவாய்த்தெரிகின்றாய்
தீந்தமிழ் மொழியின் வண்ணம் தேசமெங்கும் வாழுகின்றாய்
வான்புகழ் வள்ளுவனின் குறள்வண்ணம் வாழிய வாழிவே..!
வற்றாது நதிவண்ணம் எமக்கு வழம்தந்து வாழிய வாழியவே..!
கவிஞர்

***அம்பலவன்புவனேந்திரன்***
***மற்றும் குடும்பத்தினர்..யேர்மனி***

## இருபதாண்டு வாழ்த்து

மக்கள் மன உணர்வுகளிற்கு,
மதிப்புடை சமூக உயர்விற்கு,
மகிழ்ந்திடும் நிகழ்வுகளின் விளம்பரத்திற்கு,
மகளிரின் மாண்புடை முன்னேற்றத்திற்கு,
மழலைகளின் திறன் விரிவிற்கு,
மரண அஞ்சலி, அறிவித்தலிற்கு,
மரியாதை காக்கவும், மதிப்பை இறக்கவும்
மண்ணிலே புற்றீசல்களாய் ஊடகங்கள்.

ஜெர்மனியில் கோலோச்சும் மண்சஞ்சிகை
ஜெயித்திட்டது இருபது ஆண்டுகளாக.
செங்குருதியான மக்கள் ஆதரவால்
செந்தழிப்பாகிறது ஊடகங்கள் உலகில்.
தக்க ஆக்கங்கள், இலக்கியங்கள்
தகவுடன் நீந்திட மண்சஞ்சிகையில்
மகாவலிகங்கையாய்க் களம் உண்டு.
மனத்தோடு நீந்தி மலையேறுங்கள்!

கற்பூரதீபம் ஏற்றாது, கால் பிடித்துக்
கெஞ்சாத கம்பீரக் களமிது.
கருத்தோடு, விருப்போடு ஆதரிக்கலாம்.
ஊறுபடாது எடுத்த காரியத்தைத் தொகுத்து
ஊர்போற்ற நடத்தும் ஆசிரியர் வாழ்க!
அவரோடு ஊடாடியுதவும் சஞ்சிகையாளர்கள்,
நலிந்தோருக்குதவும் நற்சேவையும் வாழ்க!
வாழிய நீடூழி வளர்க சிவனொளிபாதமலையாக!

***வேதா. இலங்காதிலகம் – டென்மார்க்***
***எழுத்தாளர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிதலில்லா சேவைதனை வாழ்த்துகின்றேன்...!

மண்ணாய் யேர்மனி மண்டலந் தன்னில்
எண்ணமாய் மலர்ந்ததோ இருபது ஆண்டுகள்
உண்மைத் தமிழரின் உன்னத ஊடகமாய்
விண்வெளி கடந்தே வியத்தது உறவினை

ஒருபாற் கோடாய் உலகத்துச் செய்திகள்
விருந்தாய் அமுதாய் வீரியக்கவிதை கதைகள்
மருந்தாய் நலஞ்செய் மாசறுகட்டுரை ஆக்கங்கள்
தருவாய் தாய்மண்ணின் நிகழ்வுகள் அத்தனையும்

நல்கும் சேவையில் நற்றுணையாம் சிறார்க்கு
வெல்லும் தமிழினில் வியனறி வூட்டிடவே
அல்லும்பகலும் அறிவாற்றல் வளர்த்திடும்
ஆசிரியர் சிவராசாஅவர்தம் குழாமும் வாழியவே

ஆயிரமாய் தொல்லைகள் அடுக்காய்ச் சுமந்தாலும்
தாயினைப்போல் இருதிங்கள் தாங்கியே நின்று
நேயமுடன் சிதைவில்லா நேர்மை நோக்குடன்
ஆயகலை இதழாய் அமுதெனவிரிகிறாய் மண்ணே

புதிய சமுதாயத்தினை பூத்திடும் பணியதனில்
பதித்த தடயங்கள் பதிவுகள் ஆனதன்றோ
உதித்த ஞாயிறுபோல் உலகெங்கும் ஒளிவீசிட
வதிதலில்லா சேவைதனை வாழ்த்தியே மகிழ்கின்றோம்!

*கலைவாணி ஏகானந்தராசா – ஜேர்மனி*
*சங்கீதஆசிரியை*



## ஆழகுடன் மலர்ந்த மண் நீ வாழி வாழி

புலம்பெயர் பெயர் மண்ணின் பூத்த மண்சஞ்சிகை
பூர்த்தி காண்கிது ஆண்டுகள் இருபதை
வலம்வரும் உலகம் முழுவதும் சிறப்பாகவே
வண்ணத்தமிழ் நல் சஞ்சிகையாகவே
நிலம்புலம் இரண்டையும் இணைக்குது பாலமாய்
நீண்டநாள் பணியாலே உயர்ந்தது இமயமாய்
பலம் இதன் எழுத்தாளர் வாசகர் பாலர்கள்
பணிதனை ஏற்றவர்சிவராசாஎனும்பெருந்தகை

அல்லியும் ஆம்பலும் முல்லையும் தாமரை பேலவே
அழகுடன்மலர்வது ஈர்மாத இதழாகவே
நல்லநல் கட்டுரைகளும் நயமிக்க சிறுகதைகளும்
நடப்பு நிகழ்வுசொல்லும் செய்திகளும்
மெல்லென வீசும் பூங்காற்றினைப்போல் சிறுவர்படைப்பும்
மேன்மைச்சிறப்புடை கவிதையும் குறளின்பொருளும்
துல்லியமான போட்டியும் இலக்கியப் படைப்பையும்தாங்கி
தூயநல்படைப்பாய் துலங்குது புலத்தில்

மின்விளக்கில்லை மின்னஞ்சல் இல்லை துயரத்தை
சொல்லிடக்கேட்க மனிதரும் இல்லை
அன்னையுமில்லை தந்தையுமில்லை பசிக்கு
அன்னம் ஆக்கிப்போட அரிசியும் இல்லை
என்ன வாழ்க்கை என்ன உலகம் இனியும்
எத்தனை நாட்கள் பட்டினி காப்பது என
எண்ணி எண்ணி ஏங்கி நிற்கையில் தேவதூதனாய்மாறி
துயர் களையுது தாயகமண்ணில் மண்சஞ்சிகை

*கவிஞை. திருமதி விமலாதேவி சிவநேசன்*
*நெதர்லாந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப் பா!....

சஞ்சிகை உலகில் தனித்துவம் தாங்கிய தமிழ் மண்
தமிழ் மணம் வீசும் சந்தனக் காற்றின் புதுப்பண்
சோதனை கடந்து வேதனை சுமந்து எழுந்தது நெஞ்சத்துப்புண்
சாதனை இருபது அகவை தொட்டது சிகரமாய் விண்...

இலக்கியம் மட்டும் வளர்ப்பது அல்ல அதன் பணி
இரங்கும் இல்லமாய் துலங்குவதில் இனிய முன்னணி
இதயம் விரிக்கும் உதவி மழையில் கனிந்த கனி
ஏங்கும் நெஞ்சங்களை இறுக்கி அணைக்கும் அழகே தனி...

தன்னல மயமாய் அனைத்தும் ஆகிடும் வேளை
பொதுநலப் புயலாய் புகுந்து விளையாடும் பனிமலர்ச்சாலை
புழுதியில் விழுந்திடப் புல்லர்கள் எடுக்கின்ற வாளை
தடுத்துப் புகழ் மலையென வளர் பூம்பொழில்ச் சோலை...

எத்தனை புத்தக மலர்கள் மலர்ந்தன இலட்சியத்திற்காய் இங்கே
செத்தன அவை அனைத்தும் சிந்தனை இல்லாப் பாங்கே
முத்தினைப் போன்ற கொள்கைப் பிரசவத்தின் குன்றாய்
இன்னும் இருநூறு வருடங்கள் வாழும் தமிழ்த்தேங்காய்...

வாழ்க்கையில் எளியவர் எண்ணங்களை நாடி ஓடும்
பார்வையில் எந்நாளும் பாசம் தொட்டில் கட்டியாடும்
வியர்வையும் இரத்தமும் விலையாய் கொடுத்து வாழும்
சாவில் உலவும் மக்கள் சந்ததி உனைப் போற்றும்...

பாராட்டுச் சொல்வதற்கு சமமில்லை என் எண்ணம்
வரலாறு பெரும் ஆறாய் தமிழ் மண்ணில் ஓடுவது திண்ணம்
உன் சேவை முன்னாலே மனம் தூவும் பூக்கள்
வாழ்த்த எனக்கு வயதில்லை வணங்குகிறேன் நல்லிசைப்பாக்கள்...

*கவிஞர் ப. பசுபதிராசா – ஜேர்மனி*

## வாழ்த்துகிறேன் வாழிய நீ!...

ஈர் பத்து அகவையில் அடிபதிக்கும் மண்ணே
ஓர் பத்து ஆண்டுகள் உன்னோடு இணைந்தவள்
சீர் பெற்ற என் தகமை கண்டு
சிறப்புடனே வாழ்த்துகிறேன் வாழிய நீ பல்லாண்டு...

ஆண்டுகள் இருபதில் ஆற்றிய நின் பணிகள்
காலத்தின் தேவை உணர்ந்து நீ
காட்டிய உயர்வான நற்பணிகள் பல...

தாயக உறவுகட்கு தார்மீகப் பணியாற்றி
தனித்திட்ட உள்ளங்களை இறுக அணைத்திடவே
உறவுப் பாலமாய் உறுதி தந்தாய் மண்ணே...

தமிழ்த்தாகம் கொண்டிட்ட ஆர்வலர்க்கு
கதையாய் கவிதையாய் கட்டுரையாய்
செய்திகளும் நிறைந்து சிறப்புத் தந்தாய்...

ஆர்வம் கொண்ட சிறுவர்களையும்
ஊக்குவித்துப் பரிசும் தந்தாய்
தொடர்கின்ற பணிகளோ பல..பல...

குறைவற்றுச் செயலாற்றி நிறைபணியில்
வரலாற்றுச் சிறப்புப் பெற்று
வளமுடனே வாழிய நீ பல்லாண்டு
வாழ்த்துகிறோம் வாழியவே நிறைவாக!...

*கவிஞை கீத்தா. பரமானந்தன் – ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து கவிதை மண்ணுக்கு



காலைத் தொடுவது மண்
இங்கே நம் மனசை தொட்டது ஒரு மண்
அன்னிய நாட்டில் ஒரு மண்
அது தமிழ் வாசம் சுமக்கும் மண்
பயிர்கள் மரங்கள் காய் கனிகள் சுமப்பது புவி மண்
கவிதைகள் கதைகள் கட்டுரைகள் சுமக்கும் இந்த மண்
எல்லா உயிர்களையும் வளர்ப்பது மண்
புது கவிஞர்களை வளர்கும் இந்த மண்
தாய் நாடு என்னும் தேச பக்தியை வளர்ப்பது மண்
இங்கே தமிழ் அறிவை வளர்குது இந்த மண்
புவி மண்ணில் வாழ்வது மனிதர்
இந்த மண்ணில் வாழ்வது தமிழர்
தாய் மண்ணில் இல்லை ஒற்றுமை
இந்த மண் சஞ்சிகைக்கு இல்லை வேற்றுமை
இருபது வருடம் வாழ்ந்த மண்
என்றும் தலை நிமிர்ந்து நின்ற மண்
நூறு ஆண்டுகள் வாழவே
நானும் மனமுவந்து வாழ்த்துகிறேன்
மனமுவந்து வாழ்த்துகிறேன்

*மீனா சிவலிங்கம் – ஜேர்மனி*
*எழுத்தாளர்*

## அறிவொளியாய்

அறிவொளியின் பொக்கிஷமாய் அவனியிலே
அகல்விளக்கை ஏற்றிவைக்கும் ஏணியாவர்
அரவணைப்பார், ஆதரிப்பார் அகிலத்தின் முதலுமாவர்
உயிரினை உருவாக்கும் உறவுக்கு உதிரமாவர்
பெண்ணினமாய் பெருமைகொள் புவியினிற்கு
மகிமை தரும் மதிப்பினிற்கு மகளிர்தினம்
அறிவெளியாய் அகல்விளக்காய் ஆகிநிற்பார்
உலகியலில் உருவாக்கி உயரவைப்பார்
தமையிழப்பார் தடை உடைப்பார் தலைநிமிர வைப்பார்
குடும்பத்தின் குலவிளக்காய் கோபுரமாய் உயரவைப்பார்
தரணி வாழ் பெண்ணினத்தின் வாழ்வியலில்
தனித்துவத்தின் சுமைதாங்கி பெண்கள் தானே
பல்வேறு பதவிக்குள் தாய்மை அன்பு
பகிர்ந்து கொள்ளும் உயரியத்தின் தூய்மை பேணி
அன்னை என்னும் அகிலத்தின் அறிவொளியாய்
உருவானால் உருவாகும் உலகத்தின் உயிர்கள் எல்லாம்
அறிவாக்கி அகிலத்தை ஆளவைப்பார்.

*திருமதி வசந்தா. ஜேகதீசன் – எழுத்தாளர் – ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணம் பரப்பி மண்ணே வாழ்க!...

தமிழ் முழங்கும் மன்றம் எல்லாம்
மண்ணால் ஓங்கும்
தமிழ் காக்கும் தலையாய களப்பணியிலும்
மண்ணே முன்னாய்
தமிழச் சான்றோர் புகழ்காக்கும்
உறுதுணையும் மண்ணே ஆக
தமிழ்த் தொண்டின் தோன்றலென்றும்
மண்ணே நின்றொளிர
தேயாதிருந்து திடமாய் நடந்தே
ஓயாதுழைத்த மண்ணின் பெருமை
வாயால் மொழிந்திடில் வருடங்கள் இருபது
தமிழுக்கோ மண்தேவை தலைமுறைக்கும் தேவை
நமக்குத் தேவை நலியா வாழ்வு பெற
நல்ல தமிழ் இனத்திற்கும் நாளும் தேவை
மண்ணகத்தார் அனைவருக்கும் இன்றே போல
மணம் பரப்பி நூற்றாண்டு கண்டு வாழ்க!...

***திருமதி. பத்மாஷினி. மாணிக்கரட்ணம்***
***எழுத்தாளர் – ஜேர்மனி***



## வாழ்த்துக்கள்

ஆண்டுகள் இருபது அமைதியாயிருந்து
கொண்ட கொள்கையில் பிடிப்பாயிருந்து
கண்ட தடைகள் அனைத்தையும் தாண்டி
நீண்ட தூரம் நிமிர்ந்தே நடந்த
மண்ணின் காவலரே நீவிர் வாழ்க!..

ஜேர்மனி நாட்டில் மண்ணைப் பரப்பி
சேர்ந்தவரெல்லாம் விதைகள் நிரப்பி
ஆர்வமுடனே தமிழ்ப்பயிர் வளர்க்க
ஈர் பத்தாண்டுகள் இடையறாது உழைத்த
மண்ணின் காவலரே நீவிர் வாழ்க!..

அரும்புகள் முதலாய் அனைவருமிங்கு
விரும்பும் வகையில் விதைக்கும் தமிழை
பெரும் பொறுப்புடனே பேணிக்காத்து
அரும்பணி செய்ய அயராது உழைத்த
மண்ணின் காவலரே நீவிர் வாழ்க!..

உறவுகள் தேடி ஊரெங்கும் பரந்து
அறம் செய்ய விரும்பி ஆற்றிடும் தொண்டு
திறம்பட நடக்கும் செய்கையாலென்று
இறவாப் புகழை இனிதே பெற்று
மண்ணின் காவலரே நீவிர் வாழ்க!..

***எழுத்தாளர் திருமதி சுந்தராம்பாள். பாலச்சந்திரன்***
***ஜேர்மனி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பேரறிஞர்கள்

உலக மொழிகளில் மொழித் தகுதிபெற்ற மொழிகள் அறுநூறு. இவற்றில் இலக்கண, இலக்கியம் உடைய மொழிகள் முந்நூறு. இவற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட மொழிகள் ஆறு. அவையாவன தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், ஹீப்புரு ஆகும். இவற்றில் தமிழ்மொழி ஒன்றுதான் மனித சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளை பிசிறில்லாமல், அழுத்தம் திருத்தமாக, துல்லியமாக உணர்த்தும் ஆற்றல் கொண்ட மொழியாகும் என்று மொழியியல் தந்தை டாக்கடர் எமினோ கூறியுள்ளார்.

இங்ஙனம் வெளிநாட்டவரால் போற்றப்படும் எமது தமிழ்மொழியை எமது அறிஞர்கள் சங்கம் வைத்து வளர்த்தனர். தமிழின் வரலாற்றுப்பாதையில் வெளிநாட்டாரும் தமிழின் பெருமையுணர்ந்து அதனைப் படித்துள்ளனர். தமிழமொழியை உலகம் அறியச் செய்துள்ளனர். தமிழை வளர்த்துள்ளனர் என்பது நமக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

தமிழ்வளர்த்த வெளிநாட்டுப் பெரியார்களில் ஜி.யு.போப் போற்றத்தக்கவராகும். 1820இல் இங்கிலாந்தில் பிறந்து 1918இல் மறைந்த போப் அவர்கள் வெஸ்லியன் சங்கத்தாரால் சமயத்தொண்டு செய்வதற்காக தமிழ்நாட்டுக்கு அனுப்பபட்டார். அங்கு அவர் தமிழமொழியை ஐயந்திரிபுறக் கற்றார். அதன்பயனாக திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். தாம் இறந்தபின்பு "நான் ஒரு தமிழ் இலக்கிய மாணவன்" „Rev. G.U.Pope, a student of Tamil Literrature" என்று தனது கல்லறையில் எழுதுமாறு வேண்டிக் கொண்டார்.

அடுத்து கால்டுவல் இவர் 1815ம் ஆண்டு பிறந்து 1891ம் ஆண்டுவரை வாழ்ந்தவர். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வந்த கால்டுவல், தமிழ் கற்றார். தமிழின் பெருமையை உணர்ந்தார். தமிழ் ஓர் உயர்ந்த செம்மொழி என்று கண்டு கொண்டார். இவர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆராய்ச்சி நூலை எழுதினார். இதன்மூலம் தமிழ்மொழியின் செம்மையை உலகில் பரப்பினார்.

அடுத்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவராகும். 1680இல் பிறந்து 1757இல் மறைந்த இவரின் இயற்பெயர் கான்சன்டைன் பெஸ்கி என்பதாகும். தமிழ்கற்றுக் கொண்டார். தமிழின் மீதுள்ள காதலால் தனது பெயரை வீரமாமுனிவர் என்று வைத்துக் கொண்டார். தமிழில் முதன்முதலில் அகராதியை உருவாக்கியவர். சதுரஅகராதி என்பது அதன்பெயராகும். தேம்பாவணி என்னும் காப்பியத்தையும், வேதவிளக்கம், சித்தேரி அம்மன் அம்மானை, அடைக்கலநாயகி வெண்கலிப்பா, அடைக்கமாலை, திருக்காவலூர் கலம்பகம், அன்னை அழங்கல் அந்தாதி, பரமார்த்த குரகதை ஆகியநூல்களை தமிழில் எழுதினார். தொன்னூல் விளக்கம் என்னும் தமிழ் இலக்கண நூலை எழுதிய இவர் திருக்குறளை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.

பெப்ரீசியஸ் என்னும் அறிஞர் 1711ம் ஆண்டில் பிறந்து 1791ம் ஆண்டுவரை வாழ்ந்தார். இவர் தமிழ்கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதன்பயனாக முதலாவது தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதியை தொகுத்துத் தமிழ் உலகுக்கு வழங்கினார்.

ஜான் மர்டாக் என்ற பெருந்தகை 1819இல் பிறந்து 1904இல் மறைந்தார். இவர் அன்றைய காலத்தில் அச்சான தமிழ் நூல்களைத் தொகுத்து நூற்தொகையாக வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமுவெல் எப்.கிறின் என்ற பேரறிஞர் 1822இல் பிறந்து 1884வரை வாழ்ந்தார். தமிழ்கற்றுத் தேர்ந்த இவர் முதன்முதலில் தமிழில் மருத்துவ நூலைப் எழுதி நமக்களித்த வெளிநாட்டுப் பெருந்தகையாவார்.

டாக்டர் கிரௌல் அவர்கள் 1838இல் ஜேர்மனியில் பிறந்தார். 1879ம் ஆண்டுவரை வாழ்ந்தார். தமிழ்கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். அதன்பயனாக திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். திருக்குறளை ஜேர்மன் மொழியாகிய டொச்மொழியில் முதன்முதலில் மொழிபெயர்த்தவர் இவரே.

எச்.ஏ.பாப்ளி என்ற அறிஞர் 1879ம் ஆண்டு பிறந்தார். 1960இல் மறைந்தார். இவர் தமிழ் கற்றுக்கொண்டதனால் திருக்குறளின் பெருமையைக் கண்டு வியந்தார். அதன்பயனாக திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த லாசரஸ் என்ற பெருந்தகை தமிழ்கற்றுத் தேர்ந்து திருக்குறளை ஆங்கிலத்தில மொழிபெயர்த்தார்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈராசு பாதரியார் அவர்கள் சிந்துவெளி நாகரீகம் என்பது திராவிட நாகரீகம் என்று ஆதாரங்களுடன் நிறுவினார்.

தமிழ் தமிழர் பற்றிப் பிறமொழியினருக்குச் சிறப்பாக அறிமுகம் செய்துவைத்தவர்களில் செக்கோசுலேவியா நாட்டைச் சார்ந்த கமில் சுவலபில் அவர்களுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. கமில் சுவலபில் அவர்கள் செக்கோசுலேவியா நாட்டில் உள்ள பிராகா (ீசயபரந) என்னும் மாநகரில் 17-11-1927 ஆம் ஆண்டில் பிறந்தவர். கமில் சுவலபில் அவர்கள் பல மொழிகளை அறிந்த அறிஞர். தமிழ்மொழியை நன்கு படிக்தவும் எழுதவுமான ஆற்றல் பெற்றவர். திராவிட மொழியியல், சங்க இலக்கியம் பற்றி விரிவாக ஆங்கிலத்தில் எழுதியவர். தமிழ் வழக்குச்சொற்கள் பற்றியும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், பக்தி இலக்கியம், புத்திலக்கியம் பாரதியார், பாரதிதாசன் பாடல்களில் நல்ல பயிற்சியுடையவர். இவர்தம் பாடல்களின் சிறப்பைப் பிற மொழியினருக்கு எடுத்துரைத்தவர். ஆங்கிலத்திலும் செக் மொழியிலும் மொழிபெயர்த்தவர். தமிழ் இலக்கணத்தையும், சங்க இலக்கியத்தையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் வரன்முறைப்படுத்தி ஆங்கிலம் வழியாக உலகிற்கு வெளிப்படுத்தியவர்களில் கமில் சுவலபில் குறிப்பிடத்தகுந்தவர்.

தமிழின் மிகப்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தை மொழிபெயர்க்கும் அளவிற்கு இவருக்குத் தமிழ்ப்புலமையும் ஆங்கிலப்புலமையும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சான் இரால்சுடன் மார் என்ற பேரறிஞர். இங்கிலாந்தில் உள்ள சர்ரே மாநகரத்தில் உள்ள இலெதர்கெட்டு என்ற ஊரில் 05.07. 1927 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழ் கற்று, தமிழின் தொன்மை இலக்கியங்களான சங்க இலக்கியங்களை முதற்கண் பட்டப்படிப்புக்கான ஆய்வுக்கு உட்படுத்திய ஐரோப்பிய நாட்டு அறிஞர் சான் இரால்சுடன் மார் அவர்கள் ஆவார்.

1954 முதல் மார் தமிழ் விரிவுரையாளராக இலண்டன் பல்கலைக்கழகத்தில் 1992 வரை பணியாற்றினார். இங்குப் பணிபுரிந்தபொழுது தமிழ்மொழி,இலக்கியங்களைக் கற்பித்ததுடன் தமிழிசையான கர்நாடக இசை, இந்தியக் கலைகள், தொல்லியல் துறை ஆய்வுகளில் கவனம் செலுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவா வில்டன் (Eva Wilden) அவர்கள் ஜெர்மனியில் உள்ள ஒப்லேடன் (Opladen) என்னும் ஊரில் 28.02.1965 இல் பிறந்தவர். பட்டதாரியான இவர் ஜேர்மனியில் தமிழ்பேராசிரியராகப் பணியாற்றிய சீனிவாசன் ஐயரிடம் தமிழும் இலக்கியமும் எட்டு ஆண்டுகள் பயின்றார். புதுவையில் உள்ள கோபாலய்யரிடம் சங்க இலக்கியங்கள் பயின்றார். அதன்பயனாக குறுந்தொகை,நற்றிணை என்ற இரண்டு நூல்களில் ஈவா அவர்களின் கவனம் குவிந்தது. இதில் குறுந்தொகை பற்றிய பாடல் பகுதிகளில் பாடவேறுபாடுகள் பல இருக்கக் கண்டு இதற்குச் செம்பதிப்பு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். அதுபோல் நற்றிணையில் உள்ள பாடவேறுபாடுகள்,உரைக்குறிப்புகளில் வேறுபாடுகள் இருக்ககண்டு அதனையும் செம்பதிப்பாகக் கொண்டுவரும் முயற்சியில் கடுமையாக உழைத்தார்.

ரஷியாவைச் சேர்ந்த மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக இருப்பவர் அலெக்சாண்டர் டுபியன்ஸ்கி. 1965ம் ஆண்டு திருக்குறளும், சிலப்பதிகாரமும் ரஷிய மொழியில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டபோது அவற்றைப் படித்து தமிழ் மீது தீராப் பற்று கொண்டார். இதையடுத்து உடனடியாக தமிழ் கற்றுக் கொண்டார். தமிழைக் கற்றுத் தேர்ந்த அவர், ஞானத்தின் மொழி தமிழ் என தமிழின் புகழ் பாடத் தொடங்கினார். மேலும் தமிழ் மொழி, இலக்கியம் குறித்த ஆய்விலும் ஈடுபட்டார். எந்தவித சிந்தனைகளையும், உணர்வுகளையும் மிகச் சரியாக வெளிப்படுத்தும் ஒரே மொழி தமிழ் என்பது அலெக்சாண்டரின் கூற்று. 1969ம் ஆண்டு சங்க இலக்கியத்தை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார் அலெக்சாண்டர்.

இவ்வாறு தமிழர்களின் பெருமை, தமிழின் உயர்வு உலகத்தவரால் அறியப்பட்டு போற்றபட்டுள்ளது. நாமும் நமது பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுத்துதவுவோம்.

***தமிழ்மணி. கே. கே. அருந்தவராஜா – ஜேர்மனி***

## இருபது ஆண்டுகள்!...

"மண்" சஞ்சிகை 20வது ஆண்டுகள் நிறைவுசெய்வதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இருபது ஆண்டுகளில் இங்குள்ளவர்களுக்கும் ஈழமண்ணில் உள்ளவர்களுக்கும் இருவிதமான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். இங்குள்ள இயந்திர வாழ்விலும் இப்படியானதொரு பணி செய்வது ஒரு சாதாரண விடையமல்ல..இன்று எத்தனையோ வானொலிகள், தொலைக்காட்சிகள்,பத்திரிகைகள்,சஞ்சிகைகள் வெளிவருகின்ற போதும் பணபலனை எதிர்பாராது உங்கள் முயற்சி தொடர்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எதிர்காலத்தில் உங்கள் பணி தொடர எங்கள் ஆசீர்வாதம்.. மண் சஞ்சிகையில் டியூஸ்பேர்க் வாழ் தமிழர் வரலாறு எழுதப்பட வேண்டுவது எனது அவா..முடியுமானால் செய்யுங்கள்..20வது ஆண்டுவிழா சிறப்புற வாழ்த்துவதுடன் எனது பங்களிப்பையும் நல்குவேன்!..

அன்பின் வாசகர்,



***திரு. மா.அரிச்சந்திரன் – பிரித்தானியா***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் தமிழ் வானொலியில்...
# நூற்றுக்கும் மேலான நிகழ்ச்சிகள் கண்டது..

## "பசுமைஉலகம்"



லண்டன் தமிழ் வானொலியில் பிரதி வியாழன் தோறும் மாலைத்தென்றல் நிகழ்ச்சியில் மாலை 5 மணிதொடக்கம் 6 மணிவரை சிறுவர்களின் பசுமை உலகம் என்ற நிகழ்ச்சியை வானொலியிலும் இணையத்தளத்திலும் (Firstaudio.net) கணிசமான தமிழ் பேசும் மக்கள் உலகப்பந்தில் செவிமடுத்து வருகின்றனர். இந்நிகழ்ச்சியை முதலில் 2006ல் திருமதி.துஸ்யந்தியும் செல்வி.ராகவி மோகனும் சேர்ந்து நடாத்திக் கொண்டிருந்தனர். பின்னர் துஸ்யந்தி தாயகத்திற்குத் திரும்பியதால் நிகழ்ச்சி சிறிது காலம் தடைப்பட்டது. ஐரோப்பாவில் வேறு எந்த ஊடகங்களிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சியைக் காணாத நேயர்கள் பலர் கவலையடைந்தனர். இக்கால கட்டத்தில் ராகவிக்கு வயது 8 ஆகும். இந்த நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருந்த சிறுவர்களான செல்வன். றிவ்ஸான் (11 வயது) செல்வி. பஸ்றா (8 வயது) திருமதி.துஸ்யந்திக்குப் பதிலாகத் தாங்கள் ஈடுசெய்ய முடியுமென்று துணிந்து முன்வந்தனர். இதற்காக அவர்கள் மூவரையும் பாராட்டுகிறேன். இதனை வரவேற்று ஊக்குவித்து இவர்களால் முடியுமென லண்டன் தமிழ் வானொலி அதிபர் திரு.நடா.மோகன் அனுமதி வழங்கினார். 2006 ஆண்டு செப்டெம்பர் 7ம் திகதி இவர்கள் மூவரும் சேர்ந்து நிகழ்ச்சியை வானொலியில் தொடக்கிய பசுமை உலகம் இன்றுவரை விடுமுறை நாட்கள் தவிர்த்து நேயர்களின் பாராட்டுக்களைப் பெற்று நடாத்திக் கொண்டிருப்பது அவர்களின் கடுமையான முயற்சியாகும். அவர்களை நாம் பாராட்டிக் கௌரவித்து ஊக்குவிக்க வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தப் "பசுமை உலகம்" நிகழ்ச்சியில் தாவரங்கள், செடி கொடிகள், மரங்கள், மரக்கறிகள், பூக்கள், விதைகள், மூலிகைகள், காற்று, நீர், நோய்கள் மற்றும் சத்து உணவு சம்பந்தமான அறிவுரைகள் போன்ற விடையங்களை கணனியில் தேடல் செய்து தமிழில் மொழிபெயர்த்து ஒலிபரப்புக்கு அமைவாகத் தயாரித்து அறிவுக்கு விருந்தாக நிகழ்ச்சிகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் நேயர்களுக்குத் தொகுத்து வழங்குகிறார்கள். அதற்கேற்ப விளக்கத்தையும் கொடுத்து ஒரு விரிவுரையாளர் போல் திறமையை வெளிக்காட்டுகிறார்கள். இவர்கள் இந்தப் பசுமை உலகம் நிகழ்ச்சியை The Evergreen World என அறிவித்ததைச் செவிமடுத்தபோது பசுமை வளத்திட்டம் சங்கானை (The Evergreen Project-Chankanai) என்ற பசுமைவளத் திட்டத்தை முன்னெடுத்து நடாத்திக் கொண்டிருக்கும் எனக்குப் பசுமரத்தாணிபோல் என் மனதில் பதிந்தது. அதிக சிரத்தையின்றி புத்தகங்கள் பல படிக்காமல் இணையத்தில் மேலும் தேடுதல் செய்யாமல் இந்நிகழ்சியின் போது பல விடையங்களை அறியக்கூடியதாக இருக்கின்றது. நேயர்களும் நேரடியாகக் கலந்து கொள்ளும் வேளையில் நானும் கலந்து கொண்டு இவர்களை பாராட்டித் தட்டிக்கொடுத்து வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நடாமோகன்-வாணி தம்பதிகள் வானொலிக் குடும்பத்தைச் சேர்ந்த இளம் அறிவிப்பாளரான ராகவி மோகனுக்கு இப்போ வயது 12. இலங்கையைச் சேர்ந்த சமீமின் பிள்ளைகள்தான் செல்வன் றிவ்ஸானும் செல்வி. பஸ்ராவும்.இவர்கள் ஜேர்மனியில் ஆரம்பக்கல்வியைப் பயின்றுவிட்டு தற்போது சில வருடங்களாகப் பிரித்தானியாவில் வசித்துவருகிறார்கள். தற்போது தமிழ், டொச், ஆங்கிலம் மொழிகளைக்கற்று கணனியில் தேடல்களைப் பெற்று தங்கள் வாராந்த நிகழ்ச்சிக்கு ஆதாரம் தேடித் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து நிகழ்ச்சியை திறம்படச் செய்கிறார்கள். கடந்த வருடம் லண்டன். Harrow-South பகுதியில் நடைபெற்ற லண்டன் தமிழ் வானொலியின் பொன்மாலைப் பொழுது பல்சுவை நிகழ்வின் பசுமை உலகம் குறுநாடகத்தில் இம்மூவரும் மரக்கறி மற்றும் பழங்கள் பாத்திரங்களை ஏற்று மேடையில் நடித்து பார்வையாளர்களின் நன் மதிப்பைப் பெற்றனர். நானும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்து எனது கருத்தைத் தெரிவிக்கையில் லண்டன் தமிழ்வானொலியானது வளர்ந்துவரும் சிறார்களின் எதிர்கால நல் வாழ்விற்குப் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்துவருவதுடன் இதன் அதிபர் திரு நடாமோகன் அவர்கள் அனைத்துத் தரப்பினருக்கும் சந்தர்ப்பம் கொடுத்து தட்டிக்கொடுத்து சுட்டிக்காட்டி தேடவைத்து நல் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறார். இதன் வெளிப்பாடாக இன்று பல சின்னஞ்சிறு அறிவிப்பாளர்கள், தொகுப்பாளர்கள் லண்டன் தமிழ் வானொலியில் குரல்கொடுத்து உலகெல்லாம் வலம்வருகிறார்கள் எனச்சுட்டிக் காட்டினேன்.



லண்டன் தமிழ் வானொலியில் பங்குபற்றும் இளையோருக்கு எதிர்காலத்தில் நல்ல எதிர்காலம் இருப்பதாகக் கருதுகிறேன். அவர்கள் எதிர்காலத்தில் பல துறைகளில் பிரகாசிப்பார்கள் என்பது எனது கருத்தாகும். இப்படியான ஊடகப்பங்களிப்புகளில் இளையோர் ஈடுபடுவார்களானால் அவர்களுக்கு வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள் நேர்முகப் பரீட்சைகளில் உறுதுணையாக இருக்கும். அந்த வகையில் பசுமை உலகத்தொகுப்பாளர்களின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களது எதிர்காலத்துக்குப் பூரண ஆதரவும் ஊக்குவிப்பும் கொடுப்பார்களானால் அவர்களுக்கு உலகில் மிக உயர்ந்த தாபனமான ஐ.நா.சபைத் திட்டப் பணிமனைகளில் பெரும் பதவிகள் காத்திருக்கின்றன.. செல்வி.ராகவி, செல்வி.பஸ்றா, செல்வன்.றிவ்ஸான் ஆகிய பசுமைச் செல்வங்களுக்கு "மண்" சஞ்சிகை மூலம் வாழ்த்தைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்.


உலகம் உய்யப் பசுமை வளத்தை நாடுவோம்!...

*சோம. சிவ. குலநாயகம்.*
*பசுமைவள ஆர்வலர் – ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பகதரு



கற்பகதரு என்று அழைக்கப்படும் பனை மரத்தை வெறும் மரம் என்று எண்ணிவிடாதீர்கள். அதன் வேரிலிருந்து அனைத்துப் பாகங்களும் மனிதருக்குப் பயன்படும் பொக்கிஷமாகக் கருதப்படுகின்றது. நம் தாயகத்தின் வட கிழக்குப் பிரதேசங்களின் பிரதான வருவாயைத் தரும் இக்கற்பகதரு போரின் கொடுமையால் லட்சக்கணக்காக அழிக்கப்பட்டிருக்கின்றது. வேதனைக்குரிய விடையமாகும்.

பல்லாண்டுகாலமாக நமது வாழ்வுக்கு உறுதுணையாக இருந்துவரும் பனை மரத்தின் பயன்பாடுகளை உங்களுக்கு அறியப் படுத்துவதே எனது நோக்கமாகும்.. தாகம், வெம்மை தீர கருப்ப நீர். உடற்பருமனைக்கூட்ட உற்சாகத்தைப் பெருக்க கள்.சின்னமுத்து போன்ற வியாதிகளுக்கு கள் அதிமருந்து.பனங்கட்டி. கருப்பட்டி.பனம்சீனிபெறலாம்.பிட்டு கூழ் ஆக்குவதற்கு ஒடியல் மா.சாப்பிடப் பனங்கிழங்கு.பனை ஓலையால் வீடு வேய.ஓலையால் வேலி மறைப்புச் செய்தல்.பெட்டி, கூடை செய்தல்.கடகம்,தண்ணீர்ப் பட்டை செய்தல்.சுளகு, குட்டான் செய்தல் பாய், தடுக்குச் செய்தல். ஓலையின் ஈக்கினால் கூட்டுதலுக்கு விளக்குமாறு செய்தல்.மட்டையால் வேலி அடைத்தல்.மட்டை தும்பினால் கயிறு விளையாட்டுப் பொருள் செய்தல்.இனிப்பான நுங்குநீர் பருகலாம்.பனம் பாணி பனாட்டு உண்ணலாம்.பனங்கூழ் செய்தல்.பனை ஓலையால் விசிறி செய்யலாம்.

பனை மரத்தால் கூரை, யன்னல், கதவு. துலா, தூண்கள், வேலைத்தள கட்டுமரங்கள் பாலம் அமைக்கவும் பயன்படுத்தலாம். தும்புத்தடி, நெம்புகொல் உட்பட பிள்ளைகளுக்கான பலவகையான விளையாட்டுப் பொருட்களும் தயாரிக்கலாம். வயோதிபர்களுக்கான ஊன்றுகோல்,சிலாகைப் பலகை போன்றவை உட்பட ஓலையால் தயாரிக்கப்படும் தட்டுவம். அதாவது சாப்பாட்டுத்தட்டு தயாரிக்கலாம். பனம்பழத்தை சூப்பி உண்ணும் போது பல் வெண்மை அடைகின்றது. அதேபோல் பனம் பழக்கூழால் ஆடைகளையும் கழுவிச்சுத்தமாக்கலாம். ஏன் போர்க்காலத்தில் பனம் பழம் இப்படியாகப் பல வழிகளிலும் தமிழருக்கு உதவியதென்றால் இந்தத் கற்பகதருவுக்கு நன்றி சொல்லாமல் எப்படி விடுவது.


பனம் பூரான் சாப்பிடுவதற்கு இனிப்பானது அதேபோல் பனங்கொட்டை நெருப்பு எரிப்பதற்கும் பல தொழிலகங்களுக்கும் பயன்பட்டது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது பனை மரத்தின் அத்தனை பாகங்களும் மனிதருக்கு மிகவும் பயன்பட்டுவருவதை இன்றைய உலகத்தார் அறிந்து நம் தாய்நாட்டில் பனைமரம் உற்பத்தி செய்வதற்கும் அவை பேணிப்பாதுகரப்பதற்கும் நம்மாலான உதவிகளைச் செய்தே ஆகவேண்டும்.. வெப்பப் பிரதேசத்தில் நன்கு வளரக்கூடிய பனை மரம் அதாவது யாழ் மண்ணை உலகம் பூராவும் அடையாளமாகக் காட்டி நிற்கிறது. போர்க் காலங்களில் எதிரிகளிடமிருந்தும் நம் மக்களைக் காப்பாற்றத் துணையாக நின்றிருப்பதுடன் பல போராளிகள் ஏன் இராணுவத்தினர் கூட இம்மரங்களால் உயிர்பிழைத்திருக்கிறார்கள் என்பதும் உண்மையே..இப்படிப் பல சிறப்புக்களைப் பெற்ற கற்பகதருவான பனை மரத்தை நம்மக்கள் பொற்றி வணங்கிளாலும் இது பெருமைக்குரியுதே முன்னைய காலங்களில் ஏட்டுச்சுவடுகளாகவும் எழுதும் பத்திரங்களாகவும் அரச சபைகளில் கோலோச்சியதும் பனை ஓலையே என்பதும் பெருமைக்குரியவிடையமாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பொருள்,சீனி,கொழுப்பு போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருப்பதாக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். பனையை ஆங்கிலத்தில் Palmerrah எனவும் (Botanical Name) தாவரவியற் பெயர் Palmerrah Asiatica எனவும் அழைப்பர். சராசரியா 30-35 அடி உயரத்திற்கு வளரக்கூடிய இந்த மரம் சராசரியாக 100-120 செ.மீ சுற்றளவு கொண்டிருக்கும். சிம்பு வேர் என அழைக்கப்படும் வேர்த்தொகுதி மழைக்காலம் கிடைக்கக்கூடிய நீரைத் தண்டுப்பகுதியில் சேகரித்து வைத்து தனது சகல பகுதிகளுக்கும் சத்தைக் கொடுக்கும். இதைவிட இதன் குருத்துப்பகுதி உண்பதற்குச் சுவைதரும். இப்படியே பனை மரத்தின் மகிமையைத் தொடர்ச்சியாக எழுதலாம். குறிப்பாக தமிழ் சமூகத்தின் ஒப்பற்ற மூலதனமாகவும் சொத்தாகவும் கணிக்கப்படும் கற்பகதருவை நம் தேசத்தில் அழிந்திடாமல் பாதுகாக்க நாமும் நம்மால் இயன்ற பணிகளைச் செய்திடுவோம்.

***டாக்டர். இ. தங்கராசா – ஜேர்மனி***



***அன்பான மண் ஆசிரியருக்கு***

இருபது ஆண்டுப்பணயில் மண் சஞ்சிகை சிறந்து விளங்குவதையிட்டு பெருமை அடைகிறோம். அன்னைத்தமிழை அகில உலகும் பரப்பும் உன் சேவை அளப்பரியது. சிறுவர் சஞ்சிகையாகி சிறப்பான இடத்தை பிடித்து, தாயக சிறார்களுக்கும் தளராது செய்து வரும் பணி போற்றுதற்குரியது.

புலம்பெயர் நாட்டில் நிலமதன் மொழியோடும் கலாச்சாரத்தோடும் பண்பாட்டு அடையாளங்களோடும் வலம் வரும் சஞ்சிகையாக பரிணாமம் காணுவதையிட்டு வாழ்த்துகிறோம். சிவராஜாவின் அரும் பணியில் திளைக்கும் மண் தாய்நிலத்தின் உழவனையும் நினைவு படுத்தி வருகிறது. சஞ்சிகையோடு மட்டும் நின்றுவிடாமல் தாய்நிலத்தின் உறவுகளுக்கும் குறிப்பாக இடம்பெயர்ந்த சிறார்களுக்கும் செய்து வரும் உதவி காலத்தால் அழியாத பேருதவியாகும்.

மேலும் மேலும் மண் சஞ்சிகை பல ஆண்டு நிலைத்து, நற்பணியாற்ற வாழ்த்துகிறோம். சிவராசாவின் அன்பும் நல்பண்பும் தொடர்ந்தும் இச்சஞ்சிகை முகிழ்த்து வெளிவர உதவும் அவரின் அயராத பணியையும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்க மண் சஞ்சிகை வளர்க தமிழ்ப்பணி
அன்புடன் வாழ்த்தும்

***தமிழ்மணி நகுலா சிவநாதன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மண்" சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு சிறுவர்போட்டி முடிவுகள் – 2010

மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி சிறார்கள், மாணவர்கள், வாசகர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெறுபவர்களின் விபரம்:

### (A) 6 வயதுவரை:-

ஓவியப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 36)

1வது பரிசு: செல்வி. பூவிகா. எடிசன் Meerbusch
2வது பரிசு: செல்வன். நிகேதன். சண்முகரதினம் Weeze
3வது பரிசு: செல்வி. மதுரா. இளங்குமாரன் Meschede

### (B) 7 - 9 வயதுப்பிரிவு:

ஓவியப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 68)

1வது பரிசு: செல்வன். டிலக்ஸன். தர்மசீலன் Muenster
2வது பரிசு: செல்வன். விதுஷன். கிரிதரன் Dortmund
3வது பரிசு: செல்வி. ஆரணி. வரதராசா Meschede

உறுப்பெழுத்துப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 26)

1வது பரிசு: செல்வி. பார்கவி. செல்வேந்திரன Olsberg
2வது பரிசு: செல்வன். நிதுர்சன். சிறிகந்தராசா Duisburg
3வது பரிசு: செல்வி. ஆரபி. பத்மநாதன் Haltern

### (C) 10 - 12 வயதுப்பிரிவு:

ஓவியப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 54)

1வது பரிசு: செல்வன். தருசன். உதயகுமார் Soest
2வது பரிசு: செல்வி. ஆகிரா. முருகதாஸ் Bochum
3வது பரிசு: செல்வி. சாகித்யா. சண்முகரட்ணம் Weeze

உறுப்பெழுத்துப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 26)

1வது பரிசு: செல்வி. யசீனா. கணேசலிங்கம் Wickede (Ruhr)
2வது பரிசு: செல்வன். வாகீஸ். வசீகரன் Essen
3வது பரிசு: செல்வி. சௌமியா. குலேந்திரன் Karlsruhe



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (D) 13 - 15 வயதுப்பிரிவு:

ஓவியப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 32)

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வன். டொசாந்த். அன்ரனிதாஸ் | Soest |
| 2வது பரிசு: | செல்வி. சுபைதா. ரவீந்திரநாதன் | Muenster |
| 3வது பரிசு: | செல்வி. யமீனா. கணேசலிங்கம். | Wickede (Ruhr) |

கட்டுரைப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 18)

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வி. தர்சனா. உதயகுமார் | Soest |
| 2வது பரிசு: | செல்வி. சுபைதா. ரவீந்திரநாதன் | Muenster |
| 3வது பரிசு: | செல்வன். கஜீவ். விக்னேஸ்வரன் | Essen |

கவிதைப்போட்டி: (கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 12)

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வி. சுபைதா. ரவீந்திரநாதன் | Muenster |
| 2வது பரிசு: | செல்வி. விதுசா. ஜெகதீசன் | Geilenkirchen |
| 3வது பரிசு: | செல்வி. மயூரணி. சண்முகரட்ணம் | Weeze |

## (E) 16 - 18 வயதுப்பிரிவு:

ஓவியப்போட்டி:

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வி. சுபாங்கி. ரவீந்திரநாதன் | Muenster |
| 2வது பரிசு: | செல்வி. பானுரதி. புவனேந்திரன் | Duisburg |
| 3வது பரிசு: | செல்வி. சுதர்மிலா. சுகுமார் | Duisburg |

கட்டுரைப்போட்டி:

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வி. நிவேதா. சண்முகலிங்கம் | Soest |
| 2வது பரிசு: | செல்வி. பானுரதி. புவனேந்திரன் | Duisburg |
| 3வது பரிசு: | செல்வி. சுகந்தினி. அருட்செல்வம் | Soest |

கவிதைப்போட்டி:

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | செல்வி. சுபாங்கி. ரவீந்திரநாதன் | Muenster |
| 2வது பரிசு: | செல்வி. வேதிகா. ஜெகதீசன் | Geilenkirchen |
| 3வது பரிசு: | செல்வி. கலையதர்சினி. கலையரசன் | Swisse |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மண்" சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு
## வாசகர்போட்டி முடிவுகள் – 2010

மண் சஞ்சிகையின் 20 ஆண்டு நிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளின் முடிவுகள்:

(1) கவிதைப்போட்டி:-

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | திருமதி. றூபி. வாசீகன் | Swisse |
| 2வது பரிசு: | திருமதி. சுமதி. வசீகரன் | Essen |
| 3வது பரிசு: | திருமதி. வசந்தா. ஜெகதீசன் | Geilenkirchen |

(2) சிறுகதைப்போட்டி:-

| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | திருமதி. சுந்தராம்பாள். பாலச்சந்திரன் | Differten |
| 2வது பரிசு: | திருமதி. கலைவாணி. ஏகானந்தராசா | Weeze |
| 3வது பரிசு: | திருமதி. வேணி. கிருபாகரன் | Weissenhauserstrand |

(3) கட்டுரைப்போட்டி:-


| | | |
|---|---|---|
| 1வது பரிசு: | திருமதி. பத்மாஷனி. மாணிக்கரட்ணம் | Schlangen |
| 2வது பரிசு: | திருமதி. சிவகாமசுந்தரி. கணேசநாதன் | Goslar |
| 3வது பரிசு: | திருமதி. கனகேஸ்வரி.சண்முகரத்தினம் | Weeze |

கலந்துகொண்ட அத்தனை போட்டியாளர்களுக்கும் நன்றிகள்!... கலை, இலக்கிய, எழுத்து, சமூகப் பணிகள் தொடரட்டும் என இனிதான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!...

நன்றி!..

இம்மலர் சிறப்புற வெளிவர சகல வழிகலிலும் உதவிகள் வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இனிதான நன்றிகள்!..

- ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மண் சஞ்சிகையின் வளர்ச்சியில் கடந்த பல ஆண்டுகளாக எழுத்துப் பணிகளோடு இணைந்து எழுதிவரும் எழுத்தாளர்கள் வரிசையில் இடம்பிடித்தவர்கள். 20வது ஆண்டு விழாவில் கௌரவம் பெறுபவர்கள்...***

திருமதி. ஜெயா. நடேசன் - Havixbeck
திருமதி. கலைவாணி. ஏகானந்தராசா - Weeze
திருமதி. வசந்தா. ஜெகதீசன் - Geilenkirchen
திருமதி. சுந்தராம்பாள். பாலச்சந்திரன் - Differten
திருமதி. மீனா. சிவலிங்கம் - Hennef
திருமதி. கெங்கா. ஸ்ரான்லி - Koeln
திருமதி. மலைமகள். ராஜ் - Kaarst
திருமதி. வேணி. கிருபாகரன் - Weissenhauserstrand
திருமதி. கீத்தா. பரமானந்தன் - Weeze
திருமதி. வேதா. இலங்காதிலகம் - Denmark
செல்வி. தர்ஷினி. பாலசுப்பிரமணியம் - Kiel

திரு. அ. புவனேந்திரன் - Duisburg
திரு. க. பத்மகுணசீலன் - Kiel
திரு. ப. பசுபதிராசா - Wuppertal
திரு. க. அருந்தவராசா - Soest
திரு. அ. வரதராசன் - Duesseldorf
திரு. க . குமரன் - Moenchengladbach
திரு. இ. சிறிஸ்கந்தராசா - Duisburg
திரு. பொ. சிறிஜீவகன் - Kamen
திரு. பொ. புத்திசிகாமணி - Sundern
திரு. ஆ. மகேந்திரராசா - Osnabrueck
திரு. சோம. குலநாயகம் - Bremen
திரு. மட்டுவில். ஞானக்குமரன் - SriLanka
திரு. ஏ. ஜே. ஞானேந்திரன் - Swisse

***சென்ற வருடம் வன்னி இறுதிப்போரால் பல ஆயிரம் தமிழ்மக்கள் வன்னி முகாம்களில் தஞ்சமடைந்தனர். அந்த உறவுகளுக்கு உதவும்பொருட்டு லண்டன் தமிழ் வானொலியோடு இணைந்து ஐரோப்பாவில் சிறுவர் இளையோரிடம் 1811–50 யூரோக்கள் சேகரித்து "மண்" சஞ்சிகைக்கு வழங்கிச் சமூகப்பணி புரிந்தமைக்காக கௌரவிக்கப்படுபவர்கள்:***

செல்வி. கல்யாணி. கமலநாதன் - Goettigen
செல்வி. தீபா. தர்மராசா - Goettigen
செல்வி. வேதிகா. ஜெகதீசன் - Geilenkirchen
செல்வன். துவாரகீஸ். ஜெகதீசன் - Geilenkirchen

***வன்னிமுகாம் மக்களுக்காக மண் சஞ்சிகையின் சார்பில் எமது வாசகராகிய லண்டன்வாழ் திரு. செ.செல்வராசா அவர்களின் தனி முயற்சியால் 1535–00 பிரித்தானியப் பவுண்ஸ்களை சேகரித்தார். அப்படியே இப்பணம் முழுவதும் வவுனியா அகதி முகாம்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. (2009 யூலை, ஆகஸ்ட் மாதங்களில்) மண் சஞ்சிகையோடு இணைந்து இந்தச்சமூகப் பணி செய்தமைக்காகக் கௌரவிக்கப்படுபவர்:***

திரு. செ. செல்வராசா - London

***தாயகத்திலுள்ள சுமார் 40 க்கும் அதிகமான ஆதரவற்றோர் இல்லங்களோடு மண் சஞ்சிகை தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளை வழங்கி வருகின்றது. இந்த வகையில் ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவுக்காக வருடாவருடம் 200–00 யூரோக்களை மண் சஞ்சிகையூடாக அன்பளிப்பாக வழங்கிவருபவர்கள் கௌரவிக்கப் படுகின்றனர்.***

செல்வி. சுகிர்தா. தவராஜ் - Wadgassen
செல்வி. ஸ்ரெவ்வானி. மகாலிங்கம் - Oberhausen
செல்வி. நந்தனா. குமரன் - Mönchengladbach
செல்வி. ராகுல். குமரன் - Mönchengladbach

செல்வன். கபிலன். மகாலிங்கம் - Oberhausen
செல்வன். பிரணவன். யோகராசா - Düsseldorf
திரு. சாந்தலிங்கம். சிவகுமாரன் - Pforzheim
திரு. பரமசாமி. பாஸ்கரன் - London



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ததாயக ஆதரவற்ற பிள்ளையின் வாழ்நாட் செலவைப் பொறுப்பேற்று அதாவது ஒரு பிள்ளைக்கு வருடாந்தம் ஏற்படக்கூடிய செலவா வருடாந்தம் 480-00 யூரோக்களை (உணவு, உடை, கல்வி, வீடு, வைத்தியம், பொழுதுபோக்கு) வருடாவருடம் மண் சஞ்சிகையூடாக அன்பளிப்பாக உதவி புரிந்துவருபவர்கள்*

செல்வி. சாமினி. சிவதரன் - Wadgassen
செல்வி. சாரனி. சிவதரன் - Wadgassen

செல்வன். ஆதர்ஷ்.க மலநாதன் - Swisse
செல்வன். பிரதீஷ். கமலநாதன் - Swisse

செல்வன். விஷ்ணு. விஜயகௌரி - Swisse
செல்வி. பவுத்திரா. விஜயகௌரி - Swisse

செல்வன் றொபின். ராஜ் - Germany
செல்வி. மைரா.ராஜ் - Germany

செல்வி. தீபா. தர்மராசா - Goettingen
செல்வி. வினிஷா. ராஜகுமார் - Goettingen
செல்வி. வினுஷாந்தி. பாலகிருஸ்ணன் - Goettingen
திருமதி. ஜி. இராஜகுலசிங்கம - Goettingen

செல்வி. பிரிந்தாவனி. ஏகானந்தராசா- Weeze

செல்வி. சிவதர்சினி. சிவராசா - Duisburg

செல்வி. அஜந்தி. அழகராசா - London

திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg

*20வது ஆண்டு நிறைவுமலர், சிறுவர் சிறப்புமலர் இரண்டையும் மிக மிகக் குறைந்த செலவில் அச்சுப்பதிவு செய்து தந்தமைக்காக கௌரவிக்கப்படுபவர்.*

திரு. ராஜ்மோகன். றஞ்சன் - Duisburg

*20வது ஆண்டு சிறுவர் சிறப்பு மலரை கணனியில் அழகுற அச்சுப்பதிவு செய்து தந்தமைக்காக கௌரவிக்கப்படுபவர்...*

செல்வன். பானுஸ்கந்தா. புவனேந்திரன் - Duisburg

*"மண்" சஞ்சிகையை க் கணனிமயப்படுத்தியதுடன் ஆதரவற்ற சிறார்களுக்கும் உதவிவருவதற்காக கௌரவிக்கப்படுபவர்...*

திரு. கஜேந்திரன். கணேசலிங்கம் - London

*கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றிச் சபையோரை மகிழ்வித்த ஆசிரியைகள் வரிசையில்*

திருமதி. றெஜினி. சத்தியகுமார் (ஆடற்கலாலய ஆசிரியை) - Krefeld
திருமதி. சுபேந்தி. வசந்தராசா (சுபாஞ்சலி நாட்டிய கலாலய ஆசிரியை) - Duisburg
திருமதி. பாலாம்பிகை (வயலின் ஆசிரியை) Dortmund
திருமதி. ஞானம்பாள். விஜயகுமார் (சங்கீத ஆசிரியை) - Dortmund
திருமதி. சாந்தினி. துரையரங்கன் (நடன ஆசிரியை) - Essen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் 1வது பரிசு பெற்ற சிறுகதை...*

## *பிச்சைச் சம்பளம்*

விசித்திரம், விந்தைகள் நிறைந்த இந்த உலகத்தைச் சிருஷ் டித்தவர் யார்? இக்கேள்வி அவ்வப்போது எனக்குள்ளே தோன்றி மறையும். அன்று 2009 டிசம்பர் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை, பனிச்சேற்றை வாரியகற்றும் கறகறச் சத்தம் அதிகாலையிலேயே என் காதில் கிறீச்சிட்டது. என் தூக்கத்தைக் கலைப்பதில் அயலவர் சிலர் ஆர்வத்தோடு செயற்பட்டுக் கொண்டிருந்தனர். மெல்லக்கண்விழித்து யன்னல் திரையை நீக்கினேன்.வீட்டைச்சுற்றி பனிமேடாக நிறைந்து கிடந்தது. வெண் சாம்பல் வண்ணமாகப் பனிமூட்டம் கவிந்து கிடந்ததைப் பார்த்ததும் வானம் பூமிக்கு இறங்கி வருகிறதோ என எண்ணத் தோன்றியது.

"அப்பா எழும்பிப் பாருங்கோ, நத்தார்ப்பனி நல்லாய்க் கொட்டியிருக்கு" என்று கூறியவாறு கணவரைத் தட்டியெழுப்பினேன். நத்தார் நாளில் பனி கொட்டினால் வெள்ளையர் மனம் பூரித்துப்போவதைப் பல வருடங்களாகக் கண்டுவருகிறேன்.ஏன்? நம் தாயகத்தில்கூட, நத்தாருக்கு மழையில்லாவிட்டால் செத்தாலும் மழையில்லையென்று பெரியவர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். வெள்ளை நத்தார் என்று இங்குள்ளோர் மனங்கள் மகிழ்ந்து கொண்டாடிப்பேச என் மனம் சோர்ந்து போனது.

நத்தார் நாள் காலை பத்து மணிக்கு மரியா வசிக்கும் புனித இல்லத்திற்கு செல்வதென்று கடந்த இரவு மகனுடன் பேசிக் கொண்டது வெறும் கனவு போலாகிவிடுமோ என்ற தவிப்பு மேலிட "தம்பி" என்னடா செய்வம் இப்படிப் பனி கொட்டியிருக்கு, கார் ஓடுவியா? என்றேன். எப்போதும் என்னைச் சீண்டிப் பேசும் அவன் போகவேண்டுமென்றால் கூர் ஓடம்...போகவேண்டாமென்றால் கார் ஓடாது...என்று சிரிப்போடு சொன்னான். இந்த உரையாடலைக் கேட்டும் கேளாதவர்போலிருந்த அப்பாவைப் பார்த்து "என்னப்பா சொல்லுறியள், போகேலுமே என்றேன்..பனி மலைபோலக் கொட்டிக்கிடக்கு உதுக்கை உலாத்தவேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிற்கிறியள் என்று கடிந்து பதில் சொன்னார்.

கடந்த பல வருடங்களாக நான் முதியோர் இல்லத்தில் பணி செய்வதால் அங்கிருப்போர் பற்றி நிறையவே அறிந்துள்ளென். வயதால் முதிர்ந்து தனித்து வாழக்கூடிய தைரியம் இழந்து போயிருக்கலாம். ஆனால் அவர்கள் உணர்வுகளற்ற மரக்கட்டைகளல்ல, மனிதர்கள். ஒவ்வொருவருக்குள்ளேயும் உணர்வுகள் கொந்தளிக்க, சிலர் குமுறியழுவதைக்கூடக் கண்டிருக்கிறேன். தாய் தந்தையரைப் பிரிந்து வாழ்வதால் என் மனம் படும் வேதனைச் சுமை, இவர்களைப் பார்த்துப் பேசும் சில நேரங்களில் இலேசாவது போல இருக்கும்.சிலரது கண்ணீர் என் நெஞ்சை நெகிழ்ந்து போகச் செய்ததுமுண்டு. எங்கள் மகன் தாத்தா பாட்டியின் அரவணைப்பில் வளரவில்லை. உறவினரின் அன்பை அருகிருந்து.அனுபவித்ததுமில்லை. ஆனால் உறவுகளின் உன்னதம் உணர்ந்த வனாக வளர்கிறான்.இதன் ஒரு வெளிப்பாடாகவே அவன் முதியோர் இல்லம் சென்று வருவதை பழக்கமாக்கிக் கொண்டுள்ளான்.அங்குள்ள பெரும்பாலான முதியவர்களிடம் இனபேதம் மதபேதம், நிறபேதம் பார்க்கும் தன்மை அழிந்து போயிருக்கிறது. யாராவது தங்கள் மீது அன்பு பாராட்டிப் பேச வரமாட்டார்களா என்று ஏங்கித் தவிக்கின்றனர்.நாங்கள் செல்லும் நேரங்களில் அவர்கள் எல்லோரிலும் நேசங்கொண்டு பேசுவோம்.

என் கணவருக்கு மட்டும் அந்தப் புனித இல்லம் சென்று வருவது மகிழ்வைக் கொடுப்பதில்லை. வாழ்வின் இறுதிநாட்கள் சிலருக்கு வலியைக் கொடுக்கிறது, வலி தாளாமல் முனகி அழுவது கண்டால் போதும். என்ன கறுமம்... அடக்கடவுளே இதுகளைப் பார்க்கவேணுமோ.. என்று என்னைக் கேட்பார். சில தடவை பார்வையாளர் அறையிலேயே இருந்துவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் மரியாவின் அறைக்குள் மட்டுமே வந்திருக்கிறார். அந்நேரங்களில் கூட வெளிக்கிடுங்கோ வெளிக்கிடுங்கோ என்று சில பிள்ளைகள் போல அடம்பிடித்து விரைவாக ஓடிவிடுவார். மகன் அப்படியல்ல.

நான் ஓய்வாக இருக்கும் வேளைகளில் தாயக வாழ்வு பற்றி மகனோடு பேசுவேன். ஊர் உறவுகள் அண்டை அயலார் நட்பு, பள்ளி வாழ்க்கை என்றெல்லாம் அவன் வாழ்வுக்கு உதவக்கூடிய நல்ல செய்திகளையெல்லாம் கோர்த்துக் கோர்த்து கதைபோலச் சொல்வேன்.அவன் படு சுட்டி. ஆயிரம் கேள்விகள் அடிக்கடி குறுக்கு விசாரணையெனத் துளைத்தெடுப்பான். பலவற்றை இயல்பாக ஏற்றுக்கொள்வான். தாயகம் போய் குழந்தைகள் காப்பகம் நோக்கி ஓடியபோது ஒன்றும் புரியாதவனாக நின்றவன் அந்த இல்லக் குழந்தைகளைப் பார்த்ததும் துடித்துப்போனான். அன்பு செலுத்த வேண்டிய இடங்களில் அவன் நெகிழ்ந்து போனதை அன்றுதான் கண்டேன். இன்று இங்கே முதியோர் இல்லத்திற்கு செல்வதிலும் நாட்டம் கொண்டிருக்கிறான். அதிலும் எங்கள் மனங்களில் நிறைந்தவள் மரியா.

மரியா? அவளது குடும்ப விருட்சத்தில் எஞ்சியுள்ள ஒரேயொரு பழுத்த இலை. பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே எங்களுக்கு அறிமுகமாயிருந்தாள். அந்த நாட்தொட்டு அன்ரி என்றும் அவள் கணவரை அங்கிள் என்றும் அழைப்பது வழக்கம்.இது ஒன்றும் நாம் காவி வந்த பண்பாட்டின்படி ஒட்டிய உறவல்ல.அவர்களால் இடப்பட்ட அன்புக் கட்டளையது. பிள்ளைகளில்லை என்ற கவலைக் கோடுகள் அந்தத் தம்பதியர் முகத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. ஐம்பது ஆண்டுகளின் முன்னர் தங்கள் குழந்தைக்கென்று அமைத்த அறையை இறுதிவரை.

“கின்டர்ரூம்” (பிள்ளைகளறை) என்று சுட்டிப் பேசியபோது எனக்கே வலித்தது. அங்கிள் அந்த அறையிலேயே தனது கடைசி நாளில் தூங்கித் கண்மூடினார். அவர் மறைவின் பின்பே மரியா இந்த இல்லம் வந்து சேர்ந்தாள். இரண்டு வயதில் தந்தையை இழந்த பின் தாத்தா பாட்டியின் அரவணைத்தலிலும் மிக இளவயதிலேயே விதவையான தாயின் கண்ணீரிலும் வளர்ந்து காதலித்து கல்யாணம் செய்து வாழ்ந்து இன்று எல்லா உறவுகளும் உலகைவிட்டுப் பறந்து போனபின் ஒற்றைக் குருவியாக ஒரு அறைக்குள் அடங்கிக் கிடப்பதைப் பற்றி ஆரம்ப நாட்களில் ஆதங்கப்பட்டாள். நூட்கள் நகர நகர இல்லத்தோடு ஒன்றிவிட்டாள்.உறவு என்று சொல்லிக் கொள்ள யாருமேயில்லை. நாங்கள் எங்கள் உறவுக்காரியாகவே இன்றுவரை நேசித்து வருகின்றோம். அன்று ஒருநாள் “இன்றைக்கு மரியா அன்ரியின் பிறந்தநாள் மறந்திட்டீங்களே அம்மா” என்றான் மகன். “இல்லை ராசா மறக்கவேயில்லை நான் காலையிலேயே வாழ்த்துச் சொல்லிவிட்டேன் என்றதும், அப்போ நான்? என்று விழித்துப் பார்த்தான். “நேரமிருந்தால் போய் வா” என்றேன்.சொல்லி வாய் மூடியதுதான் தாமதம் “என் செல்ல அம்மாவெல்லே ஓடிப்போய் ஒரு சொக்லேட் பெட்டி வாங்கிவந்து தாங்கோ” என்று கட்டளையிட்டபடி உடைமாற்றப் பறந்தான்.

மரியாவிடம் போய் வீடு திரும்பியவன் ஒருபக்கக் கன்னத்தைப் பொத்தியவாறு “ஐயோ வலிக்குதம்மா” என்று சினுங்கினான்.எனக்கு எதுவுமே புரியவில்லை. பதட்டமும், படபடப்புமாக, “என்ன ராசா, என்ன நடந்தது எனக் கேட்ட படி நெருங்கினேன். பிறந்தநாள் பிள்ளைக்கு ஒரேஒரு முத்தம் கொடுத்தது பெரிய தப்பாய்ப் போச்சுஇஅந்த கட்டுப் பல்லு என்ரை கன்னத்தை கவ்வியிழுத்தது வலிக்கிறது. எனச்சொல்லி கலகல வெனச் சிரித்தான்.இவ்வாறு பலப்பல குறும்புக் கதைகள். அவன் மகிழ்வாக இருக்கும் நாட்களில் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

அன்று நத்தார் தினப் பரிசுப் பொதிகள் அனைவருக்கும் கொடுத்தாகியிருந்தன. எஞ்சியிருந்தவை முதியோர் இல்லம் கொண்டுசெல்ல வேண்டியன என்பதைக் கேட்டதும் “ஏன் மரியாவுக்கு மூன்று பொதி” என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியது மரியாவுக்கு, அடுத்தது றோசாவுக்கு மற்றையது லின்டாவுக்கு என்றதும் "சரி சரி என்னதான் உள்ளே இருக்கென்று சொல்லுங்கோவன்" என்று தன் ஆவலை வெளியிட...லின்டாவுக்குச் சொக்ளேட், றோசாவுக்கு உள்ளாடை என்றேன்.சீ..நம்பமாட்டேன் உள்ளாடையா? ஏன அவன் அதிருப்தியைக் கூற.... "ஆமாம் அது அவருக்கு வேண்டிய பொருள், அது தான் வாங்கினேன்" என்றேன். அவன் அதையும் ஏற்கமறுத்தவன் போல என்னை உற்றுப்பார்த்தான். அதைப் புரிந்துகொண்டு றோசாவின் கதையைச் சொல்லி புரியவைத்தேன். ஆங்... "அப்பிடியென்டால் இஞ்சையும் பிச்சைக்காரர் இருக்கினமோ?" என்றான் நான் அதிர்ந்து போனேன். பிச்சைக்காரர் யார்?நானிந்த நாட்டிற்குள் கால்வைத்த போது ஓரிரு மாற்றுடை தவிர வேறு எதுவுமில்லை. ஏதிலியான எனக்கு எல்லாமே தந்தார்கள். அப்போ நானும் பிச்சைக்காரிதானே! சீச்சீ அப்படி யாருமே சொன்னதில்லை. இப்படியான மலினமான சொல்லை எங்கிருந்து இவன் பொறுக்கியெடுத்தான்? சிந்தித்துப் பார்த்தேன். மண்வாசனை ஆம்.... மண்வாசனையேதான். கடந்த மாதத்தில் ஒருநாள் என் உறவுக்காரி மலருடன் பேசுவதற்காக ஊருக்குத் தொலைபேசியெடுத்தேன். ஊர்ப்புதினம்இஅயலவர் சுகநலம், வீட்டார் பாடு என்று பலதும் பத்துமாக எனது கேள்விகளிருந்தன. வழமையான உரையாடல் தொடர்ந்தது.

முன்னரைவிட இப்ப பறவாயில்லை, ஆனால் எப்பவும் எதுவும் நடக்கலாம் எண்ட முணுமுணுப்பையும் கேட்கலாம். யாழ்ப்பாணம் - வன்னி யாழ்ப்பாணம் எண்டு ஓடிக்களைச்சுப்போனம். இருந்தாலும் சனம் தெம்போடை இருக்கிறமாதிரிப் படுகிது. சின்னஞ்சிறிசுகள் கூட காலத்திற்கு ஏற்றமாதிரி வாழப்பழகீட்டுதுகள். ஆனால் இந்தப்பெரிசுகள்.... சொல்ல நினைத்ததை சொல்லமுடியாது தவித்ததும், தொலைபேசி மௌனமானது.என்ன அவரோடை ஏதும் பிரச்சனையே என்று உரையாடலை தொடர்ந்தேன். சீச்சீ அவராலை எனக்கென்ன குறை, என்ரை அப்பாவைப்பற்றி உங்களுக்குத் தெரியும்தானே. குளிக்கத் தண்ணிகூட அள்ளிக்குடுக்கவேணும். நல்லவடிவாய்ப் பார்க்கிறன். சாப்பிட்டுச் சிவனேயெண்டு படுக்கமாட்டாமல் அங்கை இஞ்சையெண்டு திரியிறார்.போனகிழமை விதானையார் வீட்டபோய் ...கைச்செலவுக்கு அஞ்சுசதம்கூட இல்லை உங்களாலை ஏதும் உதவிசெய்ய ஏலுமோ.. எண்டு கேட்டாராம்.அவருக்கு எங்களைப்பற்றி நல்லாய்த் தெரியும். உங்களுக்கென்னய்யா குறை, வெளிநாட்டுக்கு பிள்ளைகளை அனுப்பிப்போட்டு எத்தினைபேர் இஞ்சை தனியாக்கிடந்து சீரழியுதுகள். நீங்கள் குடுத்துவைச்ச மனுசன் மகள் மருமகன் நல்லாய் பார்க்கினம் தானே என்றாராம். ஓ ஓ பாக்கினம் தான் போடுறதைச் சாப்பிட்டு ஒரு இடத்திலை படுத்துக்கிடக்க நானென்ன நாயோ? சொல்லு தம்பி என்ன நினைக்கிறீர் என்று அப்பர் கேட்க "சரி சரி உங்களுக்கு கைச்செலவுக்கு உதவி செய்யலாமோவெண்டு பாக்கிறன்." என்று விதானையார் சொல்லியிருக்கிறார். எங்களுக்கும் சொன்னார். இப்ப மாதம் மாதம் பிச்சை சம்பளம் வருகிது.என்று அழத்தொடங்கினாள்.

"மலர் அழாதை. ஒரு உதவிப்பணம் வருமெண்டால் அவர் எடுக்கட்டன்" என்று சமாதானப்படுத்த நீங்கள் சொல்லுவியள் இஞ்சை இருந்தால் உங்களுக்கும் விளங்கும்.பிச்சைச் சம்பளம் எடுக்க விட்டிருக்கினம் உவையள் பிள்ளையளோவெண்டு சனம் காறித் துப்புதுகள். என்றாள். அழுவதா சிரிப்பதா ஆறுதல் சொல்வதா? தைரியமாக முடிவெடுத்தேன். மலர், கோபப்படாதை.நான் சொல்லுறதைப் பொறுமையாய்க் கேள். "வெளிநாட்டிலை இருக்கிற பெருமளவு மூத்தவர்களான எங்களின் தாய் தந்தையர் உதவிப்பணத்திலை தான் சீவிக்கினம். அதைக்கூடப் பல பிள்ளைகள் பிடுங்கித்தின்னுதுகள்.ஊரிலை இருக்கிற உங்களுக்கும் இஞ்சை நடக்கிறது தெரியாது. ஏன் இஞ்சை இருக்கிற பெரியவைக்குக்கூடப் புரியாத புதிர்தான்.மாதாந்த சமூக உதவிப்பணம் என்ற சொற்றொடரைத்தான் நீங்கள் பிச்சைச் சம்பளம் எண்டு சொல்லுறியள்.வெளிநாட்டிலை எல்லாம் எல்லாரும் செய்யலாம். யாரும் சிரிக்க மாட்டினம்.பிச்சைச்சம்பளம் என்ற சொல்லே இங்கு உபயோகத்தில் இல்லை.நீயும் மாறு... அப்பாவுக்கு ஓய்வூதியமுமில்லை ஒரு மாதாந்த உதவிப்பணமாவது கிடைக்கட்டுமே என்றேன். இந்த உரையாடலை கேட்டுக்கொண்டிருந்த மகன் பிச்சைச் சம்பளம் என்றாலென்ன என்று அன்று என்னிடமிருந்துதான் கற்றுக்கொண்டான்.

*திருமதி. சுந்தராம்பாள். பாலச்சந்திரன் – ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 1வது பரிசு பெற்ற கட்டுரை...***

## *திருக்குறளின் சிறப்பு*

நறுந்தேனில் ஊறிய செந்தமிழால் சொல்வழகும் பொருளழகும் கொண்டு எழுதப்பட்டுள்ள இனிய பொதுநூல், அறநூல், மறைநூல், நீதிநூல் திருக்குறள். தெய்வப்புலவர் எனப் போற்றப்படும் திருவள்ளுவரால் படைக்கப்பட்ட திருக்குறள் மானிட வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. தனிப்பட்ட ஒரு இனத்திற்கோ மொழிக்கோ நாட்டுக்கோ உரியதென்று கூறமுடியாத வண்ணம், உலகோர் அனைவரும்உளமார போற்றிப் படித்துப் பயன் பெறக்கூடிய பொது நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. இங்ஙனம் போற்றுதற்குரிய ஒரு விழுமியநூல், தமிழ் மக்கள் வாழும் நாடு செய்த பெரும்தவப் பயனாகத் தோன்றிய வள்ளுவர் பெருமானால் அமிழ்தினும் இனிய செம்மொழியால் வடிக்கப்பட்ட சீரிய நூல் என்பதனால், தமிழ்-மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொரு தமிழ் உள்ளமும் தலைநிமிர்ந்து தனிப்பெருமை கொள்ள முடிகின்றது.

திருக்குறள் ஒரு பொது மறைநூலாக இன மத இட வேறுபாடுகளற்று, எல்லா நாட்டினருக்கும் நன்மை பயக்கும் உண்மை நெறிகளைக் காட்டி உயர் பெருமை பெற்றுவிளங்குகின்றது.

உலகெங்கும் பரந்து வாழும் மக்கள் தத்தம் சமயங்கள் மீது அதீத நம்பிக்கைக் கொண்டு, நம்சமயம் ஒன்றே மேலான சமயம், நம்சமயத்திலும் மேலான சமயம் ஏதும் இல்லையென வேறுபாடுகள், வீணான பேதங்களை வளர்த்துக்கொண்ட போதிலுங்கூட, திருக்குறளை மட்டும் தம்தம் சமயநூல் என்றே போற்றி மகிழ்கின்றனர். இச் செயலொன்றே எமக்குத் திருக்குறளின் பெருமைதனை பறை சாற்றும் சான்றாகக் காணமுடிகின்றது. இவ்வாறு பல்வேறு சமயத்தினரும் திருக்குறள் எமது சமயத்திற்குரிய நூலே என்று போற்றிப் புகழ்வதைச் சற்று நோக்குவோமேயானால், திருக்குறள் என்னும் பொதுமறைநூல், உயரிய சமயநோக்குகளை உள்ளடக்கியதோடு, அவற்றுக்கெல்லாம் தலைமை பெறும் தகைமை கொண்ட தனிப் பெருந்தன்மை மிகு நூல் என்பதை எம்மால் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

திருவள்ளுவர் ஒரு சிறந்த பகுத்தறிவாளர். அதனை அவர் திருக்குறளின் முதல் அதிகாரமதில் கடவுள் வாழ்த்து என, எந்தவொரு சமயத்தையும், எந்த ஒரு பெயர் கொண்ட இறைவணையும், குறிப்பிடாது நடுநிலையில் நின்று வாழ்த்தி மேன்மையுறுகின்றார்.

“வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல” என்னும் குறளில் விருப்பு வெறுப்பற்ற இறைவனின் திருவடிகளை எப்பொழுதும் நினைப்பவர்க்குத் துன்பங்கள் எக்காலத்தும் உண்டாகாது என எல்லோருக்கும் பொதுவான இறைவனைக் குறிப்பிட்டு நடுநிலை நின்று நயம்பட உரைத்துள்ளார்.

திருக்குறள் ஒரு பொதுமறை என்பதனைப் பாவேந்தர் பாரதிதாசன் “வெல்லாததில்லை திவள்ளுவன்வாய் விளைத்த வற்றுள் பொல்லாததில்லை புரைதீர்த்த வாழ்வினிலே அழைத்துச் செல்லாததில்லை பொதுமறையான திருக்குறளில் இல்லாததில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே”. என அழகாக எடுத்துரைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூலின் பெருமைதனை, அது தோன்றி வாழ்ந்த காலத்தைக் கொண்டு கணக்கிட முடியும் என்கின்றனர் மொழி ஆய்வாளர்கள். கால வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது அழிந்து போகின்ற நூல்கள் பலவாகும். ஆனால் அங்ஙனம் மாளாது காலவேகத்தோடு இணைந்து இன்னும் மிளிர்வோடு நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி மென்மேலும் உலகுக்குத் தன் அறிவாற்றலையும் வளத்தையுமளித்து மேன்மையுற வைக்கும் நூல்களுள் தலையாயது பெருமை மிகு திருக்குறளாகும். எனவே திருக்குறள் காலங்கடந்தநூல் எனப் போற்றிப் புகழப்படுகின்றது. இவ்வாறு ஈடினையற்று விளங்கும் திருக்குறள் அறத்தை எடுத்துக்காட்டும் அறநூலாகவும் மிளிர்கின்றது.

எந்தவொரு கால கட்டத்திலும் எழுகின்ற நூல்கள் எல்லாம் அந்தஅந்தக் காலத்திற்கேற்ப வாழும் மக்களின் அத்தியாவசியமானதாய், அவர்களது சிந்தைகளைக் கவர்வதாயமைந்து, காலம் மாறும் வேளை பயனற்ற பொருட்களாய் கைவிடப்படுகின்றன. ஆனால் திருக்குறளோ வாழ்வில் பேறளிக்கும் பெருமைக்குரியனவான அறம், பொருள், இன்பத்தைப்பற்றி எடுத்துரைப்பதனால் எக்காலத்திற்கும் ஏற்றம் தரும் போற்றுதற்குரிய நூலாகப் புகழ்பெறுகின்றது. அதுமட்டுமன்றி வள்ளுவர் பெருமான் திருக்குறளில் தீட்டியுள்ள வளமான கருத்துக்கள் வையத்தில் வாழும் எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வற்றவர்கள் என்பதனை இங்கிதமாக எடுத்தியம்புகின்றன. சமரச சன்மார்க்க நெறிதனைக் காட்டும் திருக்குறள் சாதிகுல வேற்றுமைகளைக் களைந்து, தொழில் வேற்றுமையால் மட்டுமே மானிலத்தில் மக்களிடம் வேற்றுமையைக் காணலாம் என்பதனை எடுத்தியம்புகின்றது.

“பிறப்பொக்கும் எல்லாவுயிர்கும் சிறப்பு ஒய்வா செய் தொழில் வேற்றுமையான” என்னும் குறட்பா அதற்கு உதாரணமாக அமைந்துள்ளதை எம்மால் அறியமுடிகின்றது. இன்னும் அறத்தினை பிழைபடாது உரைக்கும் அறநூலாக நீதிகளையும் போதிக்கின்றது.

உள்ளதை உள்ளபடியே எடுத்துரைக்கும் உண்மை நூலான திருக்குறள் பழந்தமிழ் நாகரிகப்பண்பாட்டினை எடுத்துக்காட்டும் களங்கமற்ற காலக்கண்ணாடி “அகரமுதல” என தமிழ் மொழியின் முதல் எழுத்தான “அ” வில் தொடங்கி “கூடி முயங்கம் பெறின்” என ஈற்றெழுந்தானன் என்னும் மெய் எழுத்தோடு முற்றுப் பெறுவதால் தமிழ் மொழியே திருக்குறள் என்றாகிறது.

மனித சிந்தனையின் மணிமுடியாம் தமிழ்ப்பெருமைதனைச் சாற்றும் தனிக் கொடியாய் விளங்கும் திருக்குறள் தித்திக்கும் முப்பழமாய் முப்பால் எனவும் பெயர் பெறுகின்றது. அறத்துப்பால் பொருட்பாலினை சீரான முறையில் தெளிவுற எடுத்துரைத்த திருவள்ளுவர் காமத்துப்பாலில் என்ன நல்ல விடயத்தினை நயமாக எடுத்துரைக்கப் போகின்றாரென நாம் எண்ணிவிடத் தேவையில்லை. இன்பத்தைக் கூறும் குறளின் காமத்துப் பால் வடமொழியாளர் வாத்சாயனரின் காமசாத்திரத்தைப் போன்றோ, அல்லது கொக்கோகர் எழுதிய உடலின்பக் கவலையைம் போன்றோ உடலின்பக் கவலையைப் பற்றி உரைக்கும வடமொழி பாலியல் நூல்களைப் போன்றதல்ல. திருவள்ளுவனாரின் காமத்துப்பால் மலரினும் மெல்லியது காமம் எனும் உளவியல், உடைலியல் நாகரிகக் கோட்பாட்டினை கரும்பொருளாகக் கண்ணியத்துடன் உரைக்கின்றது. அன்பை அடிப்படையாகக் கொண்டு தமிழர் போற்றிய அன்பு கலந்த உறவே திருக்குறளில் காதல் வாழ்வாகவும் பிரிவினை ஏற்றுக்கொள்ளமுடியாத தன்மையாக காமத்துப்பாலில் கனிவேடு கலந்துரைக்கப்படுகின்றது. இல் வாழ்வியல் இலக்கியமதனை நயத்தக்க நாகரிகத்துடன் இன்பத்துப்பாலில் எடுத்தியம்பியுள்ளார் திருவள்ளுவர்.

இவ்வாறு போற்றுதற்குரிய அறிவுக்களஞ்சியமாய் கால தேச வேறுபாடின்றி, உலகோர்கெல்லாம் தனிப்பெரும் நூலாய், ஒளிவிளக்காய் திருக்குறள் திகழ்வதைக் கண்டு பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் செந்தமிழையும் நாட்டையும் போற்றிப் புகழாரம் சூட்டுகின்றார்" புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்.

"தெள்ளு தமிழ்நடை சின்னஞ்சிறு
இரண்டடிகள்
அள்ளுதோறும் சுவை உள்ளுந்தோறும்
உணர்வாகும் வண்ணம்
கொள்ளும் அறம், பொருள் இன்பம்
அனைத்தும் கொடுத்ததிரு
வள்ளுவனைப் பெற்றதினாற்
பெற்றதே புகழ் வையகமே"

எனப் பாராட்டிப் பெருமிதம் கொள்கின்றார். இந்தகைய மதிப்புமிகு அறிவுக் களஞ்சியத்தை நாமும் கற்று, கற்றவாறு ஒழுகி மானிட பிறப்பின் மகத்துவத்தை உணர்ந்து, பயன் பெற்று உயர்வோம்.

வாழ்க வள்ளுவம்!

*திருமதி. பத்மாசனி மாணிக்கரட்னம்*
*ஜேர்மனி*

## வெற்றி வாழ்த்து!...

வெற்றிப் படிகள் தொட்டுத் தொடர்வோம்
வாழ்வின் பாதையில் உச்சியை தொடுவோம்
ஒன்றை நினைத்து ஒன்றி நிற்போம்
முயற்சி செய்து மகிழ்ச்சி கொள்வோம்!...

தன்னம்பிக்கை தன்னை நிலைநாட்டிக் கொள்வோம்
வெற்றி போலவே தோல்வியை ஏற்போம்
வெற்றிக்குத் தோல்வியே தோழமை கொள்வோம்
எண்ணங்கள் விரிந்து உயர்வினை அடைவோம்!..

வாழ்வு என்பதை ஏணியாய் அமைப்போம்
நம்பிக்கை என்கின்ற முதற்படி இடுவொம்
முயற்சி கொண்டு உயர்ச்சியைக் காண்போம்
வெற்றி என்பதை இலட்சியம் ஆக்குவோம்!...

நாம் ஒன்று நினைக்கையில் வேறோன்று இணைந்தாலும்
எம் இலட்சியம் தன்னை மனதில் நிறுத்துவோம்
தடங்களைத் தாண்டியே முன்னேறிச் செல்வோம்
தன்னம்பிக்கையுடனே வெற்றிப் பாதையில் செல்வோம்!..

*செல்வி. வேதிகா. ஜெகதீசன்.*
*ஜேர்மனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 1வது பரிசு பெற்ற கவிதை...***

வித்தைகள் காட்டிக் காலச் சக்கரம் சுழல
யுத்தம் முடிந்ததென புலத்திலுள்ளோர் மகிழ
இத்தரையில் புத்தாண்டு ஒன்று மலர
சொத்தும் பத்தும் கத்தைப் பணமும்
மொத்தமாய் கொட்டுமா?..சாதகம் பார்க்கிறார்
மெத்தப் படித்தாலும் புத்தியதில் மாற்றமில்லை!...

கத்தும் கடல் சூழ் கவினுறு புவியிது
சத்தமிட்டுக் கதறிடும் ஓலம்
நித்திலத்தோர் மந்தகத்தில் ஏறிடுமா?.
சுத்தம் சோறு போடும் வெறும் ஏட்டுவரிகள்
நித்த நித்தம் இயற்கையைப் பேணிடுவோம்-இதை
சித்தத்தில் இருத்திச் செயலைச் செய்திடுவோம்!...

சிறந்திடும் அறிவியலால் விரலுக்குள் விஞ்ஞானம்
ஆனால் சிதறிடும் காலநிலை மாற்றங்கள்
ஓசோனின் ஓட்டையாலே வெப்ப நிலை அதிகரிப்பு
பேசி என்ன பயன் தாயவளை
மாசுபடுத்துவனவற்றை
கூசாமல் விலக்கிடுவோம் கூவிக் கூவிச்
சொல்லிடுவோம்
இது எங்கள் கடமையென கருத்தினில் இருத்தி
கணமும் நினைத்து முயன்று உழைத்திடுவோம்!...

ஒரு நொடியில் ஹெய்டியின் உலுக்கல்கள்
பெருஅவலம் கண்முன்னே கண்டோமே
குருடராய் இருக்கலாமோ?..
விரைந்து உருகுகின்ற பனிக்கட்டிப் பாறைகள்
கரைந்து கடல் மட்டம் உயர்ந்து விட்டால்
திரைப்படம் அல்ல உலக வரைபடம் உருகிடும்!...

தடங்கள் பதித்து நாம் வாழ வழி என்ன?..
விடங்களென விரட்டுவன விலக்கிடுவோம்
கோளப் புவிதனில் ஆழிப்பேரலையும் நடுக்கமும்
வாழப்பிறந்த எங்கள் வருங்காலம்
பாழும் உலகதனில் பரிதவித்து மாளுவதா?..
கோளும் பரிகாரமும் சோதிடத்தில் சோதித்தால்
கோலம் மாறிடுமா?.ஞாலம் மீண்டிடுமா?..

சாலச்சிறந்தவழி சுற்றும் சூழல் விழிப்புணர்வு
நீளும் புகை விரட்டி நாளும் மரம் வளர்ப்போம்
முந்தையர் தந்த தங்கத் தரணிக்கு
குந்தகம் செய்யாது இறையெனப் போற்றிடுவோம்
சின்னத் துளிகளே பென்னம் பெரு வெள்ளம்
எண்ணத்தில் கொண்டதற்கு ஏற்றவை புரிந்தே
நன்மையே செய்யும் நமையெல்லாம் தாங்கிடும்
அன்னை பூமியை வண்ணமுடன் காத்திடுவோம்!...

*திருமதி. றாபி. வாகீசன் – சுவீஸ்லாந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் "மண்" சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறை... வாழ்து!...



இன்பத் தமிழின் இறவாப் புகழோங்க..!
அன்பு மனத்தால் அன்னை மொழிகாக்க..!
கண்ணுக்குள் கார்மணியாய் கவனத்தைத் தான்போட்டு
இரண்டுபத்து ஆண்டுகளாய் அயராது பணிதொடரும்
தீந்தமிழே..! தமிழ்தாயின் புகழ்பாடும் தமிழ் "மண்ணே!"
நீ, பல்லாண்டு பல்லாண்டு புகழோடு, வளங்கண்டு!
வாழ்க! வாழ்கவென..! வாழ்த்து கின்றோம்.

ஒளிரும் வானத்து விண்ணொளியே.. தமிழ்மண்ணே! உன்
ஒளியாண்டாய்ப் பிறக்கட்டும் பிறக்கின்ற நூறாண்டும்
தமிழ்வாழ பணிதொடர உன்னை மனதார வாழ்த்தி
தமிழ்கவிப்பா மாலைசூடி வாழ்க..! வாழ்கவென!... வாழ்த்துகின்றோம்!

வழிகாட்டி முறுவலித்து செயலுக்கு உரமூட்டி
வினையாக்கம் செய்யும் பணியதற்க்கே சிறப்பூட்டும்
வித்தகனாம் தம்பிசிவராஜா தமிழ்ப்பணி சிறப்பு.!அவர்
வழிகாட்டும் சிறப்புக்கு வரலாறே பதியவைக்குமென வாழ்த்து..!

வளர்கலைஞர் வளங்கண்டு, எழுத்துலகை பதித்து நின்று
அளியாத எம்தமிழர் சந்ததியை தமிழோடு,மலையாக வளரவைக்கும்
கருங்கல்போல் உறுதி கொண்ட இலட்சியத்தை மதிக்கின்ற
ஆசிரியர் தம்பிசிவராஜா பணிகண்டு மனதார வாழ்த்துகின்றோம்..

*கவிஞர். வேலணையூர் பொன்னண்ணா – டென்மார்க்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Internationales Zentrum Stadt Duisburg

## Alte und neue Heimat: Tamilen in Duisburg

Nicht wenige Menschen sind wegen Flucht und Vertreibung in unsere Stadt gekommen. Die Deutschen aus den ehemaligen deutschen Ostgebieten gehören dazu, die nach dem Ende des 2. Weltkrieges ab 1945 zu zehntausenden auch in das zerstörte Duisburg strömten. Seit den 1980er Jahren sind es Menschen aus verschiedenen Ländern der Erde, die in Duisburg Zuflucht gefunden haben und immer noch finden. Sehr oft waren es politische Gründe, die sie hierher brachten. So auch bei den Tamilen aus Sri Lanka. Inzwischen sind sie in der beginnenden dritten Generation hier ansässig. Sie sind längst Teil der Stadtgesellschaft und des Landes geworden. Viele haben sich einbürgern lassen, die meisten Jungen sind hier geboren und aufgewachsen. Eltern und Großeltern verstehen es hoffentlich, wenn sich die junge Generation, mehr deutsch als tamilisch fühlt. Das ist normal. Wenn es gelingt, das Interesse an der tamilischen Kultur wach zu halten, die Mädchen und Jungen zum Lernen der Sprache und Schrift zu bewegen, ist das sicherlich positiv. Tamilische Schrift und Sprache sind der Schlüssel zu einer Welt, über die in unseren Schulen nicht viel gelehrt wird. Tamilischdeutsch zu sein ist kein Widerspruch sondern eine natürliche Synthese. Eltern und Großeltern müssen aber auch Verständnis haben, wenn die Kinder und Jugendlichen sich nicht großartig für die tamilische Sache interessieren, wenn ihnen anderes wichtiger ist. Hier hilft vielleicht Geduld aber auf keinen Fall Zwang.

Dem tamilischen Magazin „Mann" für Kultur, Literatur und Soziales wünschen ich zum zwanzigsten Geburtstag alles Gute, viele Abonnenten, eine interessierte Leserschaft und viele gute Ideen für die junge Generation.

Wolfgang Esch

Leiter des Internationalen Zentrums der Volkshochschule Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை அமுதுப் புலவர்



நெடுந்தீவில் பிறந்து இளவாலையை வாழ்விடமாகக் கொண்டிருந்து, புகலிடமாய் இலண்டனில் வாழ்ந்து வந்த தமிழ் பெரியார் அமுதுப்புலவர் அவர்கள்.

சொல்லின் செல்வர், புலவர் மணி, செந்தமிழ்த் தென்றல், முப்பணி வேந்தர், கவியரசர், தமிழ்க்கங்கை, பாவேந்தர், மதுரகவி, மகாகவி, கலாபூசணம், முத்தமிழ் அறிஞர் என்ற கௌரவபட்டங்களைத் தன்னகத்தே கொண்டு தமிழ்த்தொண்டு புரிந்தவர் இளவாலைஅமுது ஐயா அவர்கள். பரிசுத்த பாப்பரசர் அவர்களினால் செவாலியர் விருது பெற்றவர். யாழ்.்பல்கலைக்கழகத்தினால் கௌரவகலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

வித்துவானாக, ஆசிரியராக, அதிபராகத் தனது பணியினைத் தொடர்ந்தவர். வீரகேசரி, காவலன், தினகரன், ஈழநாடு போன்ற தினசரிப் பத்திரிகைகளிலும் தனது ஆக்கங்களை எழுதிக் குவித்தார்.

இவரது படைப்புக்கள் பல இலங்கை அரசினால் தமிழ்ப் பாடத்திட்டத்திலும் இணைக்கப்பட்டிருக்கின்றன. மாதா அஞ்சலி (கவிதை), நெஞ்சே நினை, இவ்வழிச்சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள் (வைத்தியநூல்), அமுதுவின் கவிதைகள் 1991, அன்பின்

கங்கை அன்னை திரேசா (மூன்று பதிப்புக்கள்), மடுமாதா காவியம், இளவாலை அன்னம்மாள் வரலாறு, அமுதுவின் கவிதைகள் (திருத்திய பதிப்பு), இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள், பூந்தமிழில் பொன்னாடைகள் ஆகிய நூல்கள் இவரது படைப்புக்களில் சிறப்புப் பெற்றவையாகும். புகலிட வாழ்வின் தமிழ் இலக்கியப் பரப்பில் மரியாதையோடும், கௌரவத்தோடும் கோலோச்சி நின்று, இளையதலைமுறை இலக்கியவாதிகளுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்தவர் மறைந்த அமுதுஐயா அவர்கள் என்பது எமக்கெல்லாம் பெருமைசேர்க்கும் விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித நேயப்பணியில் இணைந்து கொண்டவர்கள்

தாயகத்தின் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் செலவுகளைப் பொறுப் பேற்று உதவும் பணிகளில் மண் சஞ்சிகையின் தொடர்பணிகளோடு இணைந்து இதுவரை கரம்கொடுத்துள்ள அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகிறோம்... தாயகத்தின் ஆதரவற்ற பிள்ளைகளின் வாழ் நாள் செலவையும் வாழ்நாள் கல்விச் செலவையும் 2008 ஜனவரி முதல் பொறுப்பேற்று உதவ முன்வந்துள்ள அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம். எனவே நீங்களும் இந்த மனித நேயப்பணிகளோடு இணைந்து உங்களாலான நிதியுதவியையும் நல்கித் தாயக ஆதரவற்றோரின் வாழ்வை வளம்படுத்த முன் வாரீர் என அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!.....

இதுவரை இணைந்துகொண்டவர்கள்:-

1. செல்விகள். சாமினி, சாரனி சிவதரன் - ஜேர்மனி - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா)

2. செல்வி. சிவதர்சினி. சிவராசா - ஜேர்மனி - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா)

3. திருமதி. ஜி. இராஜகுலசிங்கம், - 480-00 யூரோ
   செல்விகள். தீபா. தர்மராசா, வினிஷா ராஜகுமார்,
   வினுஷாந்தி. பாலகிருஷ்ணன் - ஜேர்மனி
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு)

4. திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - ஜேர்மனி - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - கிளிநொச்சி)

5. செல்வன். ஆதர்ஷ், பிரதிஷ் கமலநாதன் - சுவிஸ் - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - கிளிநொச்சி)

6. செல்வன். விஷ்ணு, செல்வி. பவுத்ரா விஜயகௌரி - சுவிஸ் - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு-கிளிநொச்சி)

7. செல்வன். றோபின், செல்வி. மைரா ராஜு - ஜேர்மனி - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - திருகோணமலை)

8. செல்வி. அஜந்தி. அழகராசா - ஜேர்மனி - 480-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா)

9. செல்வி. சுகிர்தா. தவராஜ் - ஜேர்மனி - 200-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு - கிளிநொச்சி)

10. செல்வி. நந்தனா, செல்வன். ராகுல் குமரன் - ஜேர்மனி - 200-00 யூரோ
   (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு - கிளிநொச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

„மண்“ சஞ்சிகை
கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்
„Mann“ (Erde) Tamilisches Magazin

# அறிவித்தல்

எமது சொந்த நாட்டில் நடக்கின்ற இனக்கலவரங்களில் தாய், தந்தை, உற்றார், உறவினர்களை இழந்து அநாதை இல்லங்களில் அல்லற்பட்டு வருபவர்கள், போரினால் கை, கால் போன்ற அங்கங்களை இழந்தவர்கள், நிரந்தர முடமாக்கப் பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், அகதிகள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர் கள் ஆகியோருக்கு உதவும் நோக்கில் „மண்“ சஞ்சிகையின் வாசகப் பெருமக்களும் இரக்க சிந்தனை படைத்த அன்பு உள்ளங்களும் மனமுவந்தளித்து வரும் நிதிஉதவியினால் 26.09.1991 தொடக்கம் 31.12.2009 வரை 43997,35 ஜேர்மன் மார்க்குகளையும், 23121.50 யூரோக்களையும், 1500.00 பவுண்ஸ்களையும் நேரடியாக அனுப்பிவைத்துள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

## யாழ்மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - அமல அன்னை அன்பகம் | - அரியாலை | - 1045.35 | - ---- | - ---- |
| - பரமானந்தா அநாதை இல்லம் | - வதிரி - கரவெட்டி | - 1000.00 | - ---- | - ---- |
| - செயற்கைக்கால் பொருத்தும் நிலையம் | - ஜெயப்பூர் - யாழ்ப்பாணம் | - 3000.00 | - 350.00 | - ---- |
| - ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | - யாழ்ப்பாணம் | - 2000.00 | - 1000.00 | - ---- |
| - அறவழி நிலையம் | - சாவகச்சேரி | - 1500.00 | - 860.00 | - ---- |
| - மகேஸ்வரா இல்லம் | - மானிப்பாய் | - 500.00 | - ---- | - ---- |
| - சிறிசாரதா ஆச்சிரம் | - பருத்தித்துறை | - 3000.00 | - 200.00 | - ---- |
| - துர்க்கா மகளிர் இல்லம் | - தெல்லிப்பழை | - 1500.00 | - ---- | - ---- |
| - ஞானசம்பந்தர் இல்லம் | - உரும்பிராய் | - 500.00 | - ---- | - ---- |
| - யாழ்பல்கலைக்கழகம் | - யாழ்ப்பாணம் | - 5852.00 | - ---- | - ---- |
| - வலுவிழந்தோர் வாழ்வகம் | - உடுவில் - சுன்னாகம் | - 4600.00 | - 1750.00 | - ---- |
| - குருநகர் சிறுவர் இல்லம் | - யாழ்ப்பாணம் | - ---- | - 200.00 | - ---- |
| - கிறிஸ்துவமாணவர் குருமடம் | - யாழ்ப்பாணம் | - ---- | - 400.00 | - ---- |
| - யாழ்முத்துதம்பி ம. வித்தியாலயம் | - திருநெல்வேலி | - ---- | - 200.00 | - ---- |
| | | - 24497.35 | - 4960.00 | - 00.00 |

## கிளிநொச்சி மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - குருகுலம் | - கிளிநொச்சி | - 1000.00 | - ---- | - ---- |
| - கருணை நிலையம் | - உருத்திரபுரம் | - 500.00 | - ---- | - ---- |
| - காந்தி நிலையம் | - உருத்திரபுரம் | - 500.00 | - ---- | - ---- |
| - நவஜீவனம் | - பரந்தன் | - 500.00 | - ---- | - ---- |
| - ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | - கிளிநொச்சி | - 5000.00 | - 1250.00 | - ---- |
| - செஞ்சோலை சிறுவர் இல்லம் | - கிளிநொச்சி | - ---- | - 400.00 | - ---- |
| - ரூத் பெண்கள் இல்லம் | - கிளிநொச்சி | - ---- | - 2550.00 | - 300.00 |
| - யோகசுவாமிகள் திருவடி நிலையம் | - வன்னேரிக்குளம் | - ---- | - 300.00 | - ---- |
| | | - 7500.00 | - 4500.00 | - 300.00 |

## திருகோணமலை மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - அன்பு இல்லம் | - திருகோணமலை | - 500.00 | - ---- | - ---- |
| - சிறிசண்முகா இல்லம் | - திருகோணமலை | - 2000.00 | - 900.00 | - ---- |
| - சிவானந்தா தபோவனம் | - திகோணமலை | - 1000.00 | - ---- | - ---- |
| - றகுமான் சுனாமி இல்லம் | - புல்மொட்டை | - ---- | - 500.00 | - ---- |
| | | - 3500.00 | - 1400.00 | - 00.00 |

## மன்னார் மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - திருக்குடும்ப கன்னியர் மடம் | - பேசாலை | - 500.00 | - ---- | - ---- |
| - ஆயர் (மறைமாவட்டம்) | - மன்னார் | - 1000.00 | - ---- | - ---- |
| - மடு அகதிகள் முகாம் | - மன்னார் | - 3500.00 | - ---- | - ---- |
| - வாழ்வுதயம் | - மன்னார் | - 1500.00 | - 1700.00 | - ---- |
| - பொழிவகம் காப்பகம் | - மன்னார் | - ---- | - 300.00 | - 300.00 |
| | | - 6500.00 | - 2000.00 | - 300.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - இராமகிருஷ்ண மிசன் | - மட்டக்களப்பு | - 500.00 | - ---- | - ---- |
| - சிறுவர் இல்லம் களுவாஞ்சிக்குடி | - மட்டக்களப்பு | - 500.00 | - 200.00 | - ---- |
| - மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் | - முறக்கொட்டாஞ்சேனை | - ---- | - 1250.00 | - ---- |
| - திருஞானசம்பந்தர் குருகுலம் | - களுவாஞ்சிக்குடி | - ---- | - 1150.00 | - ---- |
| - மட்டக்களப்பு மாவட்ட ஒன்றியம் | - மட்டக்களப்பு | - ---- | - 500.00 | - ---- |
| - யோகசுவாமிகள் பெண்கள் இல்லம் | - சித்தாண்டி | - ---- | - 800.00 | - ---- |
| | | - 1000.00 | - 3900.00 | - 00.00 |

**முல்லைத்தீவு மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - உதய தாரகை நிலையம் | - மல்லாவி | - 1000.00 | - ---- | - ---- |
| - இனிய வாழ்வு இல்லம் | - புதுக்குடியிருப்பு | - ---- | - 400.00 | - ---- |
| - திருக்குடும்ப வாழ்வு இல்லம் | - முல்லைத்தீவு | - ---- | - 540.00 | - ---- |
| - பரிசுத்த இசிடோரின் சுனாமி இல்லம் | - முல்லைத்தீவு | - ---- | - 700.00 | - ---- |
| | | - 1000.00 | - 1640.00 | - 00.00 |

**வவுனியா மாவட்டம்:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - கிருபை சிறுவர் இல்லம் | - வவுனியா | - ---- | - 300.00 | - ---- |
| - அகிலாண்டேஸ்வரி அருளகம் | - வவுனியா | - ---- | - 3421.50 | - 300.00 |
| - ஊனமுற்றோர் மறுவாழ்வுச்சங்கம் | - வவுனியா | - ---- | - 500.00 | - ---- |
| - S. V. விஜயன் வைத்தியசாலை | - வவுனியா | - ---- | - ---- | - 600.00 |
| | | - 00.00 | - 4221.50 | - 900.00 |

**ஜேர்மனி:**

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - புனர்வாழ்வுக்கழகம் | - ஜேர்மனி | - ---- | - 500.00 | - 00.00 |
| | | - 00.00 | - 500.00 | - 00.00 |

**மொத்தம்** 43.997,35 DM | 23.121,50 € | 1500,00 Pounds

இத்திட்டத்திற்கு நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கிவிபரத்திற்கு உங்கள் அன்பளிப்புகளை அனுப்பி உதவிபுரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"சிறு துளி பெரு வெள்ளம்!......"

"இன்றே செய்வோம் அதை நன்றே செய்வோம்!......"

ஆசிரியர்
"மண்" சஞ்சிகை
Duisburg/Germany
01.01.2010

"MANN" - ERDE e.V.
V. Sivarajah
Am Windhövel 18A
47249 Duisburg
Germany

Tel.: 0203/8073898
Fax: 0203/8073898
e-mail:
v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்:
BANKVERBINDUNG
„MANN" ERDE Verein e.V.
Sparkasse Duisburg
Konto-Nr.: 225 000 421
BLZ: 350 500 00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி – 2010

### Achtelfinale

| Spiel 1 | Spiel 2 | Spiel 3 | Spiel 4 | Spiel 5 | Spiel 6 | Spiel 7 | Spiel 8 |
|---|---|---|---|---|---|---|---|
| Sa., 26. Juni, 16.00 Uhr<br>Port Elizabeth<br>**Sieger A – Zweiter B** | Sa., 26. Juni, 20.30 Uhr<br>Rustenburg<br>**Sieger C – Zweiter D** | So., 27. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Sieger B – Zweiter A** | So., 27. Juni, 16.00 Uhr<br>Bloemfontein<br>**Sieger D – Zweiter C** | Mo., 28. Juni, 16.00 Uhr<br>Durban<br>**Sieger E – Zweiter F** | Mo., 28. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Sieger G – Zweiter H** | Di., 29. Juni, 16.00 Uhr<br>Pretoria<br>**Sieger F – Zweiter E** | Di., 29. Juni, 20.30 Uhr<br>Kapstadt<br>**Sieger H – Zweiter G** |

### Viertelfinale

| Spiel A | Spiel B | Spiel C | Spiel D |
|---|---|---|---|
| Fr., 2. Juli, 20.30 Uhr<br>Johannesburg<br>**Sieger Spiel 1 – Sieger Spiel 2** | Sa., 3. Juli, 16.00 Uhr<br>Kapstadt<br>**Sieger Spiel 3 – Sieger Spiel 4** | Fr., 2. Juli, 16.00 Uhr<br>Port Elizabeth<br>**Sieger Spiel 5 – Sieger Spiel 6** | Sa., 3. Juli, 20.30 Uhr<br>Johannesburg<br>**Sieger Spiel 7 – Sieger Spiel 8** |

### Halbfinale

| Halbfinale 1 | Halbfinale 2 |
|---|---|
| Di., 6. Juli, 20.30 Uhr<br>Kapstadt<br>**Sieger Spiel A – Sieger Spiel C** | Mi., 7. Juli, 20.30 Uhr<br>Durban<br>**Sieger Spiel B – Sieger Spiel D** |

| Spiel um Platz 3 | Finale |
|---|---|
| Sa., 10. Juli, 20.30 Uhr<br>Port Elizabeth<br>**Verlierer Halbfinale 1 – Verlierer Halbfinale 2** | So., 11. Juli, 20.30 Uhr<br>Johannesburg<br>**Sieger Halbfinale 1 – Sieger Halbfinale 2** |

FR/Quelle: dpa, Fifa

### Die Fußball-WM 2010 in Südafrika

11. Juni bis 11. Juli 2010

| Gruppe A | Gruppe B | Gruppe C | Gruppe D | Gruppe E | Gruppe F | Gruppe G | Gruppe H |
|---|---|---|---|---|---|---|---|
| Südafrika<br>Mexiko<br>Uruguay<br>Frankreich | Argentinien<br>Nigeria<br>Südkorea<br>Griechenland | England<br>USA<br>Algerien<br>Slowenien | Deutschland<br>Australien<br>Serbien<br>Ghana | Niederlande<br>Dänemark<br>Japan<br>Kamerun | Italien<br>Paraguay<br>Neuseeland<br>Slowakei | Brasilien<br>Nordkorea<br>Elfenbeinküste<br>Portugal | Spanien<br>Schweiz<br>Honduras<br>Chile |
| Fr., 11. Juni, 16.00 Uhr<br>Johannesburg<br>**Südafrika – Mexiko** | Sa., 12. Juni, 16.00 Uhr<br>Johannesburg<br>**Argentinien – Nigeria** | Sa., 12. Juni, 20.30 Uhr<br>Rustenburg<br>**England – USA** | So., 13. Juni, 20.30 Uhr<br>Durban<br>**Deutschland – Australien** | Mo., 14. Juni, 13.30 Uhr<br>Johannesburg<br>**Niederlande – Dänemark** | Mo., 14. Juni, 20.30 Uhr<br>Kapstadt<br>**Italien – Paraguay** | Di., 15. Juni, 16.00 Uhr<br>Port Elizabeth<br>**Elfenbeinküste – Portugal** | Mi., 16. Juni, 13.30 Uhr<br>Nelspruit<br>**Honduras – Chile** |
| Fr., 11. Juni, 20.30 Uhr<br>Kapstadt<br>**Uruguay – Frankreich** | Sa., 12. Juni, 13.30 Uhr<br>Port Elizabeth<br>**Südkorea – Griechenland** | So., 13. Juni, 13.30 Uhr<br>Polokwane<br>**Algerien – Slowenien** | So., 13.Juni, 16.00 Uhr<br>Pretoria<br>**Serbien – Ghana** | Mo., 14.Juni, 16.00 Uhr<br>Bloemfontein<br>**Japan – Kamerun** | Di., 15. Juni, 13.30 Uhr<br>Rustenburg<br>**Neuseeland – Slowakei** | Di., 15. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Brasilien – Nordkorea** | Mi., 16. Juni, 16.00 Uhr<br>Durban<br>**Spanien – Schweiz** |
| Mi., 16. Juni, 20.30 Uhr<br>Pretoria<br>**Südafrika – Uruguay** | Do., 17. Juni, 16.00 Uhr<br>Bloemfontein<br>**Griechenland – Nigeria** | Fr., 18. Juni, 16.00 Uhr<br>Johannesburg<br>**Slowenien – USA** | Fr., 18. Juni, 13.30 Uhr<br>Port Elizabeth<br>**Deutschland – Serbien** | Sa., 19. Juni, 13.30 Uhr<br>Durban<br>**Niederlande – Japan** | So., 20. Juni, 13.30 Uhr<br>Bloemfontein<br>**Slowakei – Paraguay** | So., 20. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Brasilien – Elfenbeinküste** | Mo., 21. Juni, 16.00 Uhr<br>Port Elizabeth<br>**Chile – Schweiz** |
| Do., 17. Juni, 20.30 Uhr<br>Polokwane<br>**Frankreich – Mexiko** | Do., 17. Juni, 13.30 Uhr<br>Johannesburg<br>**Argentinien – Südkorea** | Fr., 18. Juni, 20.30 Uhr<br>Kapstadt<br>**England – Algerien** | Sa., 19. Juni, 16.00 Uhr<br>Rustenburg<br>**Ghana – Australien** | Sa., 19. Juni, 20.30 Uhr<br>Pretoria<br>**Kamerun – Dänemark** | So., 20. Juni 16.00 Uhr<br>Nelspruit<br>**Italien – Neuseeland** | Mo., 21. Juni, 13.30 Uhr<br>Kapstadt<br>**Portugal – Nordkorea** | Mo., 21. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Spanien – Honduras** |
| Di., 22. Juni, 16.00 Uhr<br>Rustenburg<br>**Mexiko – Uruguay** | Di., 22. Juni, 20.30 Uhr<br>Durban<br>**Nigeria – Südkorea** | Mi., 23. Juni, 16.00 Uhr<br>Port Elizabeth<br>**Slowenien – England** | Mi., 23. Juni, 20.30 Uhr<br>Johannesburg<br>**Ghana – Deutschland** | Do., 24. Juni, 20.30 Uhr<br>Rustenburg<br>**Dänemark – Japan** | Do., 24.Juni, 16.00 Uhr<br>Johannesburg<br>**Slowakei – Italien** | Fr., 25. Juni, 16.00 Uhr<br>Durban<br>**Portugal – Brasilien** | Fr., 25. Juni, 20.30 Uhr<br>Pretoria<br>**Chile – Spanien** |
| Di., 20. Juni, 16.00 Uhr<br>Bloemfontein<br>**Frankreich – Südafrika** | Di., 22. Juni, 20.30 Uhr<br>Polokwane<br>**Griechenland – Argentinien** | Mi., 23. Juni, 16.00 Uhr<br>Pretoria<br>**USA – Algerien** | Mi., 23. Juni, 20.30 Uhr<br>Nelspruit<br>**Australien – Serbien** | Do., 24. Juni, 20.30 Uhr<br>Kapstadt<br>**Kamerun – Niederlande** | Do., 24. Juni, 16.00 Uhr<br>Polokwane<br>**Paraguay – Neuseeland** | Fr., 25. Juni, 16.00 Uhr<br>Nelspruit<br>**Nordkorea – Elfenbeinküste** | Fr., 25. Juni, 20.30 Uhr<br>Bloemfontein<br>**Schweiz – Honduras** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Lukas Asian Shop**
**Borkhofer Str.1A**
**47137 Duisburg**
**Germany**

**M. A. Ananthadas**
**Tel.: 0049 203 405019**




**Adchaya Media**
**Alter-Hell Weg 115**
**44379 Dortmund**
**Germany**

**Mr. C. Balendra**
**Tel.: 0049 231 859020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ERDE

20 Jahre Mann-Erde

**Jubiläumsausgabe**

Germany | 17.04.2010





http://mann-erde.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org